# முதல் பருவம்(SEMESTER 1)
# Part III
# Day 33

நடை

கஞ்சனையுமற்றுமுள்ள காலவுணர் தங்களையும்
வஞ்சகமா யுள்ள வாணநர பாலனையும்
இம்முதலா யுள்ள ஏற்ற அரக்கரையும்
அம்முதலா யுள்ளவரை அரியோ னறுத்தனராம்
சத்தபெல முள்ள தத்துவத்தார் தங்களையும்
வித்தகனார் கொல்ல மேல்நினைத்தா ரம்மானை
கஞ்சன் வலிமை கட்டழித்துத் தேவருக்கு
அஞ்ச லருளி ஆழிக்குள் வீற்றிருந்தார்

ருக்மணி கல்யாணம்

வாரிக்குள் கோட்டை வளைந்துமணி மேடைவைத்து
வீரக் குருநாதன் வீற்றிருந்தா ரம்மானை
மாயன் துவாரகா பதிவாழ்ந்து தானிருக்க
நாயனுக்கு வந்த நல்ல உருப்பிணியை
விதியை யறியாமல் மேலுமொரு ராசனுக்குத்
திருமாங் கலியம் சேர்க்கத் துணிந்தனராம்
அப்போது நாரதரும் அரியோ னடிபணிந்து
இப்போது வுன்றனக்கு இசைந்த உருப்பிணியைப்
பாணிக் கிரணம் பண்ணப் பறையடித்தார்
நானிதையுங் கேட்டுநாடியுரைத்தே னென்றார்
அம்முனிவன் சொல்ல அரியோன் மிகக்கேட்டு
இம்முனிந்து போக இசைந்தார்கா ணம்மானை
மோகத்திரு மாலை முக்கோடி பொன்னதுக்கு
வேகத்தா லுண்டுபண்ணி விரைவாய்க் கொடுநடந்தார்
முழுத்திரு மாலைதன்னை மொய்குழலாள் கன்னியுடக்
கழுத்திலே யிட்டுக் காமக்கண் ணீட்டிடவே
மாயனுக்கும் மோகம் மாதுக்கும் மும்மோகம்
தேயமெங்கும் மோகம் சென்றதுகா ணம்மானை
முன்னாலே கேட்டு முகூர்த்தமிட்ட பேர்களையும்
அந்நாளே கொன்று அவன்படையுந் தானறுத்து
உருப்பிணிக்குத் தேவரெல்லாம் ஓலமிட மாலையிட்டு
விருப்புகழ்ந்த மாயன் விமான மதிலேறி
மனோன்மணியை யுங்கூட்டி மாயன் படையுடனே
வினோகர மால்தானும் விரைவாய் நடைநடந்து
வடவெல்லாந் தீர்த்து வைகுண்டப் பெருமானும்
கடலுக்குள் சென்றிருந்தார் காயாம்பு மேகவண்ணர்
திடமுடனே மாயர் சென்று அங்கிருந்து கொண்டு
இப்படியே முன்னம் இசைந்திருந்த பெண்ணையெல்லாம்
அப்படியே மாலையிட்டு அமர்ந்திருந்தா ரம்மானை

விருத்தம்

ஆயர்குடியில் வளர்ந்து வெண்ணெய் அருந்தி முறைமா தரையணைந்து
தீயன் கொடிய கஞ்சனையும் திருக்கி யறுத்து அசுரரையும்
உபாய முடனே கொலையடக்கி உருப்பிணி முதலாய்ப் பெண்களையும்
தேயம் புகழ மணமுகித்துத் துவரம் பதியிலி ருந்தளரே

விளக்கம்:

காலவுணன் அழிவு

அரக்கனாகிய கம்ஷனையும் அவரோடு சேர்ந்த பலசாலியான காலவுணர் போன்றவர்களையும் அழித்தார் கிருஷ்ணர். அதோடு வாணாசுரன் சிவபூஜை செய்து சரியை, கிரியை, யோகம் ,ஞானம் போன்றவற்றைப் பெற்று நேர்மை இல்லாமல் நடந்தான். இன்னும் பல சக்திகளைப் பெற்ற அரக்கன் எல்லோரையும் கொன்று தீமைகளை அழித்தார்.

ருக்மணி கல்யாணம்

துவரயம்பதியில் மாயப் பெருமாளாகிய கிருஷ்ணன் வாழ்ந்திருக்கும் அந்நாளில், தெய்வ லோக ருக்மணி பூலோகத்தில் அவதாரம் எடுத்துள்ளக் கிருஷ்ணனுக்கு தான் மனைவியாக வேண்டும். ஆனால் இதை அறியாத ருக்மணியின் அண்ணன் ருக்மி சேதி நாட்டு மன்னன் சிசுபாலனுக்கு திருமணம் செய்ய ஏற்பாடு செய்தார்கள்.

இந்த செய்தியை தேவலோக ரிஷிசியாகிய நாரதர் அறிந்து துவரையம் பதிக்கு வந்து கிருஷ்ணப் பெருமானை வணங்கினார்.

நாராயணப்பரம்பொருளே! இப்பிறவியில் ருக்மணிதேவி உனக்குத்தான் என்றும் மனைவியாக அமையும் வாய்ப்பும், பொருத்தங்களும் இருக்கும் வேளையில் சேதி நாட்டு மன்னன் சிசுபாலனுக்கு திருமணம் முடித்துக் கொடுப்பதாக முரசு கொட்டி பறை சாற்றுகிறார்கள். நான் அந்த விவரம் கேட்டதால் உம்மிடம் சொல்ல ஓடி வந்தேன் என்றார். நான் சொன்னதைக் கேட்டு கிருஷ்ணன் அவரை திருமணம் செய்ய ஆர்வம் கொண்டார்.

அங்கே இருக்கும் ருக்மணியின் மூத்த சகோதரனான ருக்மி என்பவனிடம் கொண்ட பகை உணர்வு காரணமாகத்தான் தன் தங்கையை கிருஷ்ணருக்கு தராமல் சிசுபாலன் மணமுடிக்க வேண்டும் என்று தடபுடலான ஏற்பாடுகளைச் செய்து வைத்தார். கிருஷ்ணரே கணவராக அடைய வேண்டுமென்று துர்கா பூஜை செய்து, பூஜை ஏற்றி வழிபட்டு வந்தார். திருமண ஏற்பாடு தீவிரம் ஆனவுடன் ஏற்றுக்கொள்ள மனம் இல்லாத ருக்மணி கிருஷ்ணனுக்கு செய்தி அனுப்பி கிருஷ்ணரையும் வரும்படி அழைத்தார்.

நாரதரின் நற்செய்தியும், ருக்மணியின் அன்பான அழைப்பையும் ஏற்று கிருஷ்ணர் ருக்மணியின் இருப்பிடமான விதர்ப்பாவுக்குச் செல்ல உடனே ஆவல் கொண்டார். பின்ருக்மணியின் விவாகத்திற்காகக் குறிப்பிட்டுள்ள நாளை

அறிந்த கிருஷ்ணர் தன்னுடைய திருமண ஏற்பாட்டில் ரகசியத்தை தெளிவாகச் சொல்லி அனுப்பினார். வேகமாக செல்லும் குதிரைகள் பூட்டி உடனே புறப்பட வேண்டும் என்று சாரதிக்கு கட்டளைப் பிறப்பித்தார். கட்டளையை பெற்ற சாரதி கிருஷ்ணருக்கு பிரியமான நான்கு குதிரைகளை ரதத்தில் பூட்டினார்.

ரதம் தயாரானதும் கிருஷ்ணர் துவாரகையில் இருந்து புறப்பட்டு ஒரு இரவுக்குள் விதர்ப்ப நாட்டை அடைந்தார். இந்தியாவின் மேற்கு பகுதியில் விதர்ப்பா உள்ளது இடையே உள்ள தூரம் ஆயிரம் மைல்களுக்கு குறையாமல் இருக்கும். ஆனால் குதிரைகள் வேகமாக சென்றதால் அவர்கள் சேர வேண்டிய இடமான விதர்பா நாடான நகரத்தை ஒரு இரவு நேரத்தில் அதாவது 12 மணி நேரத்தில் சென்றடைந்தார்கள். விடிந்தால் திருமணம் என்று உறுதியாயிற்று. அந்த உறுதியை முறியடித்து கிருஷ்ணர் ருக்மணியைத் திருமணம் செய்ய உறுதிக் கொண்டார்.

திருமண ஏற்பாடுகளும், ஆலங்காரத் தோரணைகளும், புரோகிதர்களும், பிராமணர்களும், மந்திர ஹோமங்களும், பல நாட்டு மன்னர்களும், சூழ்ந்து விமர்சையாக நடந்து கொண்டிருந்த சபை யில் பலவித படைவீரர்களும் காவல் புரிந்தனர். காரணம் கிருஷ்ணன் வந்து திருமணத்தை தடை செய்ய வருவார் என்றுப் பயம் கொண்டு சிசுபாலன் ஜராசந்தன் தலைமையில், கிருஷ்ணரை எதிர்க்க தயார் நிலையில் இருந்தனர். அப்படியே ஏராளமான அரசகுமாரர்களும், நிறைந்த சபையில் யாரை பற்றியும் கருத்தில் சிந்திக்காத கிருஷ்ணர், ருக்மணியை , சிங்கக் கூட்டத்தி லிருந்து மானை மீட்டுச் செல்வதுப் போல் இரதத்தில் ஏற்றிக் கொண்டு எந்த சிரமமும் இன்றி ரதத்தை ஓட்டிச் சென்றார்.

கிருஷ்ணரிடம் பலமுறை தோல்வியடைந்த ஜராசந்தன் கர்ஜித்தான். ருக்மணியின் மூத்த சகோதரன் ருக்மியின் பகையுணர்வு காரணமாக ஏற்ப்பட்ட கல்யாண ஏற்பாடுத் தடைச் செய்யப்பட்டது. சிசுபாலன், ருக்மணி திருமணம் தடைபட்டு அவமானத்திற்குள் ஆனார்கள்.கிருஷ்ணர் ருக்மணியை அபகரித்துச் சென்றது , சிசுபாலனுக்கு ஏமாற்றத்தை அளித்தது.

கிருஷ்ணர் எதிரிகளை முறியடித்து வெற்றிவாகை சூடி தன் இருப்பிடமான துவாரகைக்குக் கொண்டு வந்து வேத முறைப்படித் திருமணம் செய்துக் கொண்டார். ருக்மணியின் திருமணம் முடிந்த பிறகு கோபியர்களையும் திருக்கல்யாண முடித்து திருவிளையாடலை நடத்தினார். கம்சனின் கொடுமையிலிருந்து மீட்கப்பட்டக் கோபியர்களின் முன்வினைகளையும் , முற்பிறவிக் காணத்தையும் முடித்து விட்டார். இவ்வாறு பல திருவிளையாடல்களை நடத்தி துவரயம்பதியில் அமர்ந்திருந்தார்.இப்படி இருக்கின்றப் பொழுது பாண்டவர்களுக்கு உதவிச் செய்ய மனதில் எண்ணினார்.

# DAY 34

பாண்டவர் வரலாறு

நடை

உருப்பிணி முதலாய் ஒத்துவந்த பெண்களையும்
திருப்பொருத்தம் பூட்டிச் செகலதுக்குள் வீற்றிருந்தார்
கஞ்ச னிடுக்கம் கழித்தந்தக் காரணரும்
பஞ்சவர்க்கு நன்மைசெய்யப் பார்த்தனர்கா ணம்மானை
பிறந்த துரியோதனனும் பிறவியொரு நூற்றுவரும்
சிறந்தபுக ழைபேரும் தேசமதி லேவாழ்ந்து
அவரவர்க்குத் தக்க ஆர்க்கமுள்ள வித்தைகற்று
எவரெவரு மெய்க்க இவர்வளர்ந்தா ரம்மானை
வளர்ந்து நிமிர்ந்து வரும்வேளை யானதிலே
இழந்துருகி வாடும் இசைகெட்ட மாபாவி
துடியாய் மனுவழக்குச் சொல்லித்துரி யோதனனும்
முடிய வினைசூடி உலகாண்டா னம்மானை
பாவி யிருந்து பாராண்டச் சீமையிலே
கோவுகட்கு  நீர் குடிக்கக் கிடையாது
தர்ம ரவ்வீமன் சகாதே வன்விசயன்
நன்மை பரிநகுலன் நாடான நாடதுதான்
குருநா டெனவே கூறுவா ரந்நகரு
திருநாடு தன்னுடைய சிறப்புக்கே ளம்மானை
துரியா தனாதி செலுத்துமஸ்தி னாபுரத்தில்
பரியொட் டகமும் பலிமிருக மானதுவும்
பசியால் தகையால் பட்சி பறவைகளும்
விசயாய்க் குருநகரில் மேவித்தகை யாறிவரும்
அத்தினா புரத்தில் அரதேசி யாவரெல்லாம்
பத்தியா யுள்ள பஞ்சவர்க ளாண்டிருக்கும்
குருநாடு தன்னில் குழாங்கொண் டிருந்தனராம்
திருநாட்டுக் கொவ்வும் சிறந்த குருநாடு
ஒருநாடு மந்தக் குருநாட்டுக் கொவ்வாது
பருநாடு பத்தியுள்ள பஞ்சவர்கள் தந்நாடு
தேவரும் வானவரும் தெய்வத் திருமாலும்
மூவரும் நன்றாய் உகந்த குருநாடு
ஆளியொடு சிங்கம் ஆனையிறாஞ் சிப்புள்ளும்
வேளிசமா யுள்ள வெகுவைந் தலையரவும்
வெள்ளானை வெள்ளை மிகுசாரை யானதுவும்
துள்ளாடி நித்தம் துலங்கிவரும் நன்னாடு
அந்நாடு நாடு அரன்நாட்டுக் கீடாகும்
பொன்னாடு நாடு புத்தியுள்ளோர் தந்நாடு
அரனருளைப் பெற்றிருக்கும் ஐவருட நன்னாடு
இரவலர்க்கு ஈயும் ஏற்றதர்மர் தன்னாடு

மாயனருள் பெற்ற மன்னவர்கள் தந்நாடு
தாய்நாடு ஆனத் தமிழ்க்குரு நன்னாட்டில்
மெய்யில்லா மன்னனுக்கு மேதினியில் பேர்பாதி
பொய்யில்லாத் தர்மருக்குப் பேர்பாதி யாகவேதான்
ஆண்டார் சிலநாள் ஆளுக்கோர் பங்காகத்
தாண்டவ ராயர் தண்மையா லம்மானை

பாண்டவர்கள் வரலாறு

விளக்கம்:

திருதராஷ்டிரருக்கும் காந்தாரிக்கும் துரியோதனோடு நூறு ஆண்களும் , ஒரு பெண்ணுமாக குழந்தைகள் உருவாகி அஸ்தினாப் புரத்தை ஆண்டு வந்தார்கள்.பாண்டுவிற்கு குந்திதேவிக்கு மகன்களாக தருமன், பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன் ஆகியோர் பிறந்து ஐவரும் பஞ்சப் பாண்டவர்கள் என்றப் பெயரோடு புகழ்பெற்ற அஸ்தினாபுரத்தின் ஒரு பகுதியாகிய குரு நாட்டில் வாழ்ந்து வந்தார்கள். கிருஷ்ணரின் மைத்துனர்களான பாண்டவர்கள். ஹஸ்தினாபுரத்தில் வசித்து வந்தனர். ஹஸ்தினாபுரம் என்றால் யானைகள் நிறைந்த இடம். யானைகள் கட்டிக் காக்க நிறைய செல்வம் வேண்டும். அந்தளவுக்கு செல்வம் படைத்த பூமி அது.

பின்னர் திருதராஷ்டிரன் ஏற்பாட்டின் படி பாண்டவர்கள் இந்திரப் பிரஸ்த்திலும், கௌரவர்கள் அத்தினாபுரியிலும் அரசாண்டு வந்தனர். தருமன் தன் தம்பியர் மூலம் திக்விசயம் செய்து இராயசூய வேள்வியைச் செய்து முடித்துச் சிறப்புடன் விளங்கினான். பாண்டவர்களின் சிறப்பினையும் புகழினையும் கண்டு துரியோதனனுக்குப் பொறாமை வளர்ந்தது.

துரியோதனாதிகளும், பஞ்சபாண்டவர்களும் பங்காளிகளாக வாழ்ந்தார்கள். எல்லோரும் வியக்கும்படி அண்ணன் தம்பி, உறவு முறைகளோடு, அஸ்தினாபுரத்தில் உண்மை உணர்வோடு வாழ்ந்து வந்த அந்த காலகட்டத்தில் பஞ்சபாண்டவர்கள் நீதி, நேர்மையோடு வாழ்ந்தார்கள். அத்தகைய செல்வச் சிறப்புப் பொருந்திய பூமியில் எப்படி பஞ்சம் ஏற்பட்டது என்றால், அதற்குக் காரணம் துரியோதனன். துரியோதனன் தர்ம சிந்தனை இல்லாமல் பேராசைக் குணத்தோடு நன்மைகள் அறியாத கொடும்பாவி தவறான முறையில் நாட்டை ஆண்டு வந்தான். பாரபட்சம் பார்க்காமல் ஈவு, இரக்கமில்லாமல் நாட்டை ஆண்டு வந்தான். நீதியும் நேர்மையும், தவறிய கொடுங்கோல் ஆட்சியினால் கொடியப் பஞ்சம் ஏற்பட்டது. குடிக்க கூட தண்ணீர் இல்லாது அளவு கொடியப் பஞ்சம் ஏற்பட்டது.

ஆனால் பாண்டவர்கள் ஆண்ட பகுதி குரு நாடு எனப்பெயர் பெற்றது. பாண்டவர்கள் ஆண்ட பகுதியை முன்னர் குரு என்ற மன்னன் ஆண்டு வந்ததால் இப்பெயர் பெற்றது. குரு நாட்டைப் பாண்டவர்கள் தர்மநெறித் தவறாமல், இறை நம்பிக்கையுடனும், பக்தியுடன் வாழ்ந்து ஆண்டு வந்ததால் குரு நாடு செழிப்புடன் இருந்தது. திருமாலுடைய வைகுண்டத்தில் உள்ள நீதி, நேர்மை போல் குரு நாடு சிறந்து விளங்கியது. உலகத்தில் உள்ள எந்த நாடும் குருநாட்டுடன் ஒப்பிட்டுச்சொல்ல முடியாதப் படி குருநாடு புகழ்பெற்றிருந்தது. குரு நாடு பாண்டவர்களின் ஆட்சியில் புகழ் பெறுகிறது என்று சிவன், பிரம்மா,

விஷ்ணு ஆகிய மூவராலும் பாராட்டப்பட்டது. பொன் விளையும் பூமியாக சிவபெருமானுடைய கைலாயம் போல் காணப்பட்டது.

ஒரு நாடு செழித்து மக்கள் நலமுடன் வாழ வழி புரிய காரணமாய் திகழ்வது அந்நாட்டை ஆளும் மன்னனின் தெய்வ பக்தியும், தர்ம சிந்தனையும், தருமநெறி தவறாதச் செங்கோல் ஓச்சி தலும், கனிவு, பணிவு, நேர்மையான நியதி, அமைதியான இயல்பு ஆகிய நல்ல செயல்கள் ஆகும். மன்னனின் நல்லாட்சிக் கண்டு வானம் பொழியும், நாடு நலம் அடையும்.வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடி உயரும், குடி உயர கோன் உயரும். இப்படியே மன்னனின் செங்கோல் நன்னெறியில் உயர்ந்தால், நாடு பொன் விளையும் பூமியாய் வளம் பெறும்.

நன்னெறித் தவறினால் நாட்டில் துன்பமும், பீடையும் தொற்றிக் கொள்ளும், தீய குணங்கள் உண்டாகும், துர்மரணங்கள் உண்டாகும். அதற்கு துரியோதனன் ஆட்சியை உதாரணமாகக் கூறலாம்.

தர்மருடைய ஆட்சியில் நாடு வளம் பெற்றுத் தழைத்தோங்கியது. தர்மம் அதிகரித்தது. சிவனின் அருளால் அவருடையச் சக்தியை பெற்று விளங்கியதால் பாண்டவர்கள், இல்லாமல் யாசிப்பவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் தானம் கொடுக்கும் அளவு செல்வச் செழிப்புப் பெற்று நல்லாட்சிப் புரிந்து வாழ்ந்தார்கள்.

## DAY 35

பாண்டவர் வனவாசம்

இப்படியே ஆண்டு இருக்குமந்த நாளையிலே
முப்படியே விட்டகுறை முடிவாகும் நாளையிலே
வணங்கா முடியுடைய மன்னன்துரி யோதனனும்
இணங்காமல் பிணங்கி ஏதுசெய்தா னம்மானை
தலைவீதம் பங்கு தான்வையா வண்ணமுந்ததான்
நிலைபகிர்ந்து விட்டோமே நினைவுசற்று மில்லாமல்
இனியவன் பூமிதனை யாம்பறித்து ஐவரையும்
தனியே வனத்தில் தானனுப்பி இராச்சயத்தை
அடக்கி யரசாள அவன்நினைத்து மாபாபி
உடக்கிச் சூதுபொருத்தி ஒட்டிவைத்தான் ஐவரையும்
பாவிதுரி யோதனனும் பஞ்சவரைத் தான்விரட்டி
சோவிதமாய் நாட்டைச் சுற்றியர சாண்டிருந்தான்
வனவாசந் தன்னில் வந்திருந் தைபேரும்
இனமா னதுபோல் இருந்தார் குகையதிலே
அப்போது வேத வியாச ரவறிந்து
செப்போடு வொத்தத் திருமா லருகேகி
மாயவரே பஞ்சவர்க்கு வாரமதாய்த் தானிருந்து
தீயதுரி யோதனனைச் செயிக்கவந்த பெம்மானே
பஞ்சவரை மாபாவி பழுதுசூ தாடிவென்று

வஞ்சக மாய்ப்பாவி வனத்தில் துரத்திவிட்டான்
ஐபேரும் பத்தினியும் அந்த வனந்தனிலே
பைப்போ லலறிப் பசித்திருந்து வாடுகிறார்
அன்றுமகா மேர்வில் அடியே னுரைத்தபடி
இன்றுபா ரதமுடிக்க எழுந்தருளும் நாளாச்சு
என்று முனிதான் எடுத்துரைக்க மாயவரும்
அன்று திருமால் ஐவ ரிடம்நடந்தார்
வேத வியாகரரும் வேயூதும் வாயானும்
சீதக்குணத் தர்மர்முன்னே சென்றனர்கா ணம்மானை
நாரா யணர்வரவே நல்லதர் மாதிகளும்
பாரா னதையளந்தோன் பதம்பூண்டா ரம்மானை
கால்பிடித்துத் தர்மர் கண்ணர் பதந்தொழவே
மால்பிடித்துத் தர்மரையும் மார்போ டுறவணைத்துப்
பதறாதே பாண்டவரே பத்தியுள்ள பஞ்சவரே
கதறாதே ஐவரையும் காத்தருள்வோ மென்றுரைத்தார்
அப்போது தர்மர் அச்சுதரை யும்போற்றி
இப்பொழுது எங்களுக்கு ஏற்ற பசிதீர
சூரிய பாண்டம் தனையழைத்துச் சுத்தமனே
ஆரிய மான அன்ன மருளுமென்றார்
அப்போது மாயவனார் ஆதிதனை நினைத்து
மெய்ப்பான பாண்டம் மிகவருத்தி ஓரரியும்
கையா லெடுத்துக் கனத்ததர்மர் கைக்கொடுத்து
ஐயா யிரங்கோடி ஆட்கள்மிக வந்தாலும்
என்பே ரரிதான் எனைநினைந்து பாண்டமதில்
அன்பரே நீரை அதுநிறைய விட்டவுடன்
என்பே ரரியை எடுத்ததி லிட்டதுண்டால்
அன்பாக எல்லோர்க்கும் அமுதாய் வளருமென்றார்
இத்தனையுஞ் சொல்லி ஈந்தாரே யன்பருக்கு
சித்திரம்போல் வேண்டித் தெளிந்திருந்தா ரம்மானை
மாயனுஞ் சொல்லி மண்டபத்தில் போயின பின்
தூயவியா கரரும் சொல்லுவார் தர்மருடன்
பஞ்சவரே உங்களுக்குப் பச்சைமா லின்றுமுதல்
தஞ்சமென்று சொல்லித் தான்போனார் மாமுனியும்
மாமுனியும் போக வனத்திலந்த ஐபேரும்
ஓமுனியே தஞ்சமென்று உகந்திருந்தா ரம்மானை
பாவிதுரி யோதனனும் பஞ்சவரைக் கொல்லவென்று
ஆவி யவன்செய்த அநியாய மத்தனையும்
ஒக்க வொருமிக்க உரைக்கக்கே ளொண்ணுதலே
சிக்கெனவே நஞ்சைத் தீபாவி யிட்டனனே
நஞ்சைக் கலந்து நல்லதயி ரென்றீந்தான்
அஞ்சலென்று மாயன் அதுகாத்தா ரம்மானை
பாதாளம் வெட்டிப் பார்வீ மனையோட்டி
நீதாள மான நெடியோ னதுகாத்தார்
கன்னிதனிற் பாவி கழுநாட்டி ஐவரையும்
கொன்றுவிட வைத்ததையும் குன்றெடுத்தார் காத்தனரே

அரவதையும் விட்டு அருள்வீம னைவதைத்தான்
விரைவுடனே மாயன் விசந்தீர்த்துக் காத்தனரே
தண்ணீரில் நஞ்சைவிட்டுச் சதித்தானே ஐவரையும்
மண்ணீரேழு மளந்த மாயனது காத்தார்
பூதத்தை யேவிப் பொன்ற வைத்தான் மாபாவி
நீதத் திருமால் நிலைநிறுத்தி காத்தனரே
இப்படியே பாவி இடறுசெய்த ஞாயமெல்லாம்
அப்படியே மாயன்காத்து ஆண்டனரே ஐவரையும்
பாவியவன் செய்ததெல்லாம் பலியாம லைபேர்க்கும்
சோவிதமாய் மாயன் துணைசெய்தா ரம்மானை

விளக்கம்:

துரியோதனன் அஸ்தினாபுரத்தைத்தை தலைநகராகவும், பஞ்ச பாண்டவர்கள் குரு நாட்டை தலைநகரமாகக் கொண்டும் ஆட்சிச் செய்து வந்தனர். இவ்வாறு இருவரும் ஆண்டு கொண்டு இருந்த சமயத்தில் , துரியோதனாதிகள் ஆண்டு வந்த அஸ்தினா புரமானது அவர்களின் தீய மன ஓட்டத்திற்கிணங்க பஞ்சத்தினாலும் , குரு நாடானது பஞ்சபாண்டவர்களின் நல்மனதிற்கிணங்கச் செல்வ செழிப்புடனும் சிறந்து விளங்கியது. இரு பங்காளிகளும் ஆண்டு கொண்டிருந்த சமயத்தில் முன் ஜென்மத்தில் விட்டு சென்ற விதிப் பலனை முடிப்பதற்காகப் பேராசை கொண்ட துரியோதனன், வருகின்ற விதியை அறியாமல் யாருக்கும் பணியாமல் நாட்டை ஆண்டு வந்தான்.

மன்னன் மாறுபட்ட குணத்துடன் நடந்து கொண்டதால் சண்டை மூண்டது. வஞ்சகமும், பேராசையும் கொண்டவர்களானத் துரியோதனாதிகள் குரு நாட்டின், மகா உன்னதமான செழிப்பின் வளங்கண்டு மண்ணாசையினால் குருநாட்டைத் தனக்குள் ஆக்க வேண்டும் என்று எண்ணம் கொண்டனர்.கவரத் திட்டம் தீட்டினான் இரண்டு பாகத்தையும் ஒன்றுச் சேர்த்துத் தானே ஆள வேண்டும் என்று ஆசைக் கொண்டான். ஆகையால் அவன் சிந்தித்தான் 100 பேர்கொண்டதனக்கு நூறு பங்கு தராமல் ஏமாற்றிவிட்டார்கள். நேர் பாதித் தந்து ஏமாற்றி விட்டார்கள். ஐந்து பேருக்கும் நூறுப் பேருக்கும் எவ்வளவு வித்தியாசம். ஆகையால் சரிபாதிப் பங்கு வைத்ததுச் செல்லாது. ஐந்துபேருக்கு ஐந்து பங்கும் , நூறுப் பேருக்கு நூறுப் பங்கும் கேட்காமல் விட்டு விட்டேனே என்று எண்ணி விசனமுற்றான்.

சூதாட்டம்:

அப்போது சூழ்ச்சி செய்யும் சகுனி வந்து அவருடைய எண்ணத்திற்கும் வண்ணம் தீட்டி சூழ்ச்சியால் அவர்களை அழைத்து அவர்களை அடிமைப்படுத்தி ,புண்ணியப் பூமியான அந்தச் செல்வ வளம் நிறைந்த குரு நாட்டை, எப்படியாவதுத் தந்திரமான முறையில் தான் வாங்கிக் கொண்டு, ஐந்து பேர்களையும் வனத்தில் வாழும்படி அனுப்பிவிடவேண்டும். இரண்டு நாட்டையும் ஒன்றாக்கித் தானே ஆள வேண்டும் என்றான் கொடியச் சகுனி. சகுனியின் எண்ணத்தைக் கேட்டத் துரியோதனன் ஒப்புக்கொண்டான்.

நாடாளும் திறமை எனக்குத் தான் உள்ளது. ஆகையால் தந்திரத்தால் சூதாட முடிவுச் செய்தான் துரியோதனன். பாண்டவர்களை உறவு கொண்டாடி, இனிமையாக பேசி, விருந்துக்கு வருமாறு வேண்டிக்கொண்டான். நல்லதையே, நினைத்து நேர்மையாக நடக்கின்ற, பஞ்சபாண்டவர் துரியோதனன் பகட்டுப் பாசத்தில் மயங்கிப்போய் அழைப்பை ஏற்று ஆனந்தமாய் சென்றார்கள்.
விருந்து செவ்வனே நிறைவேறியது.

துகிலுரிதல்

கௌரவர் தருமனைத் தந்திரமாக அழைத்துச் சூதாடி அவனை வெற்றிக் கொள்ள நினைத்தனர். துரியோதனன் மாமனான சகுனி தருமனோடு சூதாடினான். தருமன் தன் நாடு, நகரம், சொத்து, சேனை, அரசு முதலிய அனைத்தையும் சூதாட்டத்தில் தோற்றான். இறுதியில் திரௌபதியையும் பந்தயப் பொருளாக வைத்துத் தோற்றான். துரியோதனன் பாண்டவர்களையும் திரௌபதியையும் அடிமைகளாக ஆக்கினான். திரௌபதியை துச்சாதனனைக் கொண்டு அரசவைக்கு இழுத்துவரச் செய்தான்; சொல்லத் தகாத இழிவுச் சொற்களைக் கூறினான்.



துச்சாதனனை விட்டு அவள் ஆடையை உரியச் செய்தான். திரௌபதி கண்ணனைச் சரணடைந்து துதித்து நின்றாள் .ஆடை உரிய உரிய வளர்ந்து கொண்டே வந்தது. துச்சாதனன் சோர்ந்து வீழ்ந்தான். திரௌபதியின் கற்பு ஆற்றலைக் கண்டு திருதராட்டிரன் முதலியோர் அஞ்சி நடுநடுங்கினர். பின்பு திருதராட்டிரன் பாண்டவர்களை விடுவித்து நாட்டையும் செல்வத்தையும் கொடுத்து அனுப்பினான். இதனை ஏற்காத துரியோதனன் மீண்டும் சூதின் மூலம் அவற்றைக் கவர்ந்து கொண்டான்.

வனவாசம்

பின்பு பாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் காட்டில் வாழவும் ஓர் ஆண்டு எவரும் அறியாதபடி நாட்டின் உள்ளேயே மறைந்து வாழவும் ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் பின்னர் அவர்கள் வந்து கேட்டால் நாட்டையும் செல்வத்தையும் தருவதாக ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி

பாண்டவர்கள் திரௌபதியுடன் பன்னிரண்டு ஆண்டுகள் வனவாசம் மேற்கொண்டனர்.

வஞ்சகன் துரியோதனன் இரக்கமற்ற செயலை செய்து பஞ்சபாண்டவர்களையும், பாஞ்சாலியையும் வனவாசம் அனுப்பினார்கள். தனக்குத்தானேச் சோதனை ஏற்படுத்திக் கொள்ளும் விதத்தில் உண்மையான முறையில் நாட்டை ஆட்சிச் செய்த பாண்டவர்கள் திரௌபதியோடு, ஒற்றுமையாக இணைபிரியாமல் வனத்திற்கு வந்தார்கள். காட்டுவாசிகளைப் போன்று காய்க்கனிகளை உண்டு வாழ்க்கை நடத்தினார்கள்.

வேத புராணங்களில் எழுதிய வியாசர் பாண்டவர்களின் துயரங்களையும், துரியோதனனின் கொடுமைகளை கண்டு, வாக்கு மாறாமல் நடுநிலைவாதியாகிய திருமாலிடம் சென்று வனத்தில் வேதனைப் படுகின்ற பாண்டவர்களின் துன்பம் போக்கிக் காக்க வேண்டுமென்றார். பாண்டவர்களை தந்திரமாக சூதாடி அவன் ஜெயித்து பாண்டவர்களை ஏமாற்றிவிட்டான். அரக்க குணம் கொண்ட தீய செயல் புரிந்த துரியோதனனை போர் மூலம் அழித்து பாண்டவர் பக்கம் நின்று, வெற்றி பெற துணை புரிய வேண்டும் என்றார் வேதவியாசர். அந்த மொழி கேட்ட கிருஷ்ணன் பாண்டவர்களுக்கு துணை நின்று உதவி செய்ய வேண்டும் என்று விருப்பம் கொண்டார்.

முந்தைய யுகத்தில் கைலாசத்தில் வைத்து,ஆகமத்தை பார்த்து சொன்னபடி, இந்த யுகத்தில் பாரதப் போர் நடத்தி முடிக்க நாள் ஆரம்பமாகிவிட்டது. இவ்வாறு வியாசமுனிவர் மகாபாரத போரை நடத்தும்படி சொன்னவுடன், மாயப்பெருமானாகிய கிருஷ்ணரோடு, வேதப்புராணம் எழுதுகின்ற வியாசரும் சேர்ந்து பஞ்சபாண்டவர்கள் வாழும் வனத்திற்கு சென்றார்கள். தருமன், பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன் ஆகிய ஐவர்களும் இவர்களுடைய பத்தினியாகிய திரௌவுபதியும் வனத்தில் தவிப்பதைக் கண்டு மிகவும் வருத்தம் கொண்டார்கள்.

நாராயணர் ஆகிய கிருஷ்ணர் வந்திருப்பதைக் கண்ட அந்த நல்லவர்களாகிய பாண்டவர்கள், பாருலகம் அளந்த பெருமாளின் பாதங்களைப் பற்றி கண்ணீர்விட்டு அழுது தொழுதார்கள். அப்போது பகவான் அவர்களை ஆரத்தழுவி பயப்பட வேண்டாம் . என் துணை உங்களுக்கு எப்போதும் உண்டு எனக் கூறினார். பயப்படவேண்டாம் பாண்டவர்களே நான் காப்பாற்றுவேன் என்று வாக்களித்தார். அப்போது தருமர் கிருஷ்ணரைப் பார்த்து அன்புள்ள அச்சுதரே! எங்கள் பசியை போக்க அருள் புரிய வேண்டும் என்று வேண்டினார்.

நாங்கள் சாப்பிட அன்னம் தரவேண்டும். நாங்கள் திருப்தியாகச் சாப்பிட்டு அதிக நாள் ஆகிவிட்டது என்றார். அது கேட்டு, மாயகண்ணன், சூரிய நாராயணனை நினைத்து, கேட்பதை கொடுக்கும் அட்சய பாத்திரத்தைக் கொடுத்து, தருமரிடம் கூறுவார், என்னுடைய பெயர் அரிதான். நான் தந்ததும் அரிதான். சூரிய பாத்திரத்தை எடுத்து அதில் நிறைய தண்ணீரை விட்டு என்னை நினைத்து இந்த அரிசியை போட்டால் நீங்கள் நினைத்த வகையில் அன்னம் வரும். ஐயாரிரம் கோடி பேர் வந்தாலும் அவர்களின் பசியைப் போக்கும்

அன்னத்தை உடனே பெறுவீர்கள் என்றுக் கூறிச் சூரியப்பாண்டத்தை அவர்களின் கையில் கொடுத்தார். பஞ்சபாண்டவர்கள் அட்சயப்பாத்திரத்தைப் பயன்படுத்தி அவர்கள் பசியைப் போக்கி வாழ்ந்தனர்.

வியாச முனிவரும் உங்களை பச்சைமால் காப்பார் நீங்கள் கவலைப்பட வேண்டாம் கிருஷ்ணர் என்றும் உங்களுக்கு துணையாக இருப்பார், என்று ஆறுதல் கூறினார். துரியோதனன் பாண்டவர்கள் உயிரோடு இருந்தால் பாதி நாடுக் கொடுக்க வேண்டும் என்ற பேராசை கொண்டு பல துன்பங்களை செய்து, கொல்ல வழிவகை செய்தார். பலம் கொண்ட பீமனையும் விஷம் வைத்து தண்ணீரில் மூழ்கடித்து அரக்கு மாளிகை அமைத்து அதில் பாண்டவர்களை தங்க வைத்து தீயை வைத்தான். இறைவன் அருளால் துரியோதனாதிகள் செய்தக் கொடூரச் செயல்கள் எல்லாம் பலிக்காமல் போயின.

## DAY 36

துரியோதனன் பாடு

பின்னுமந்தப் பஞ்சவர்க்குப் பெரும்பாவி சொன்னபடி
பன்னிரண் டாண்டு பரிவாய்க் கழிந்தபின்பு
மாயன் தூதுபோனார் வஞ்சமில்லாப் பஞ்சவர்க்குத்
தீயதுரி யோதனனும் திருமாலைப் பாராமல்
தாள்போற புத்தி தானுரைத்துப் பஞ்சவர்க்கு
வாழ்வுபெறப் பூமி வாரென்றார் வாமனுமே
எள்போ லிடங்கள் ஈயேனென வுரைத்தான்
மாயனையும் பாவி வாபோ வெனப்பேசி
ஈயேனெனச் சொன்ன இயல்புகேட் டெம்பெருமாள்
கர்ணன் பிலமும் கடியவிது ரன்பிலமும்
மன்னன் சிறுபீஷ்மர் வாழுந்துரோ ணர்பிலமும்
தென்னன் துரியோ தனன்பிலமுந் தானழித்து
வன்ன விசயனுக்கு வாளி பலகொடுத்து
வீமனுக்கு நல்ல விசைதண்டா யுதங்கொடுத்துத்
தாமன்சகா தேவனுக்குச் சத்திசூலங் கொடுத்து
நகுலனுக்கு ஆயுதமும் நல்லபரி கொடுத்துப்
புகலான தர்மருக்குப் பொறுமை அரிகொடுத்து
மங்கை துரோபதைக்கு வாய்த்தக் கனல்கொடுத்துச்
செங்கையிலே பாரதத்தைச் சேவித்தார் மாயவரும்
மாயருட கையில் வளர்ந்த திருமுடியில்
ஓசையிட வொன்று ஒத்துதே பாரதப்போர்
ஐபேருட படையும் அரவக்கொடி யோன்படையும்
கைப்போரு விற்போரும் கணைப்போரும் வாள்போரும்
அம்புப்போ ருங்கரியின் அச்சுப்போரும் பொருது
வம்புப்போருங் குதிரை வாய்த்த துரப்போரும்
கர்ணன் சகுனி கனத்தவலுச் சல்லியனும்
மன்னன் சிறுபீஷ்மர் வாய்த்த துரோணர்முதல்
சராசந் தன்வரையும் சத்தியக் கீசகனும்

பூராச வீமன் பெலியிட்டா னம்மானை
இத்தனைப்பேர் மாண்டால் இருப்பாரோ நூற்றுவரும்
அத்தனைபே ரையும் அறுத்தா னருச்சுனனும்
துரியோ தனன்படைகள் சேர மடிந்தபின்பு
விரிமாறு தூவி வெளியில்வந்தான் மாபாவி
தம்பி படைகள் தலைவர் புதல்வர்முதல்
வம்பி லிறந்தாச்சே வாழ்வெதே னென்றுசொல்லி
எல்லா ரிறந்திடிலும் எண்ணமில்லை யென்றிடலாம்
வெல்லாரும் வெல்லா விசகர்ணன் மாண்டதினால்
இருப்பதோ பூவுலகில் இறப்பதுவே நன்றெனவே
விருப்பமுள்ள கர்ணனைத்தான் வெற்றிகொண்ட அர்ச்சுனனை
இன்றுகொல்ல வென்று எழுந்தான் படைக்கெனவே
அன்றுமால் தானறிந்து அருச்சுனனைத் தானழைத்து
இத்தனை நாளும் என்னபோர் செய்தாய்நீ
அதினால் உன்மேல் அரவக் கொடியோனும்
வாறான் படைக்கெனவே வாள்வீமனை யழைத்து
உன்றனக்கு நல்ல உறுவேட்டை யின்றடவா
என்றனக்கு இன்றுமுதல் இளைப்பாற லாமடவா
வண்ண மகள்தனக்கு மயிர்முடித்த லின்றடவா
எண்ணமற்றுத் தர்மர் இருப்பதுவு மின்றடவா
என்றந்த வீமனுக்கு இசைந்தபோர்க் கோலமிட்டு
வண்டுசுற்று மார்பனுக்கு வரிசைமிகக் கொடுத்து
வீமனுட தண்டதுக்கு விசைமால் விசைகொடுத்துப்
போமெனவே வீமனுக்குப் போர்க்கு விடைகொடுத்து
விசையன் பரிநகுலன் வெற்றிச்சகா தேவனையும்
இசையொத்த தர்மரையும் இன்றகல நில்லமென்று
வீமனை யுங்கூட்டி வெளியிலரி வந்திடவே
காமக் கனல்மீறிக் கரியோ னெழுந்ததுபோல்
வந்தானே பாவி வணங்கா முடியோனும்
சந்தான மான தமிழ்வீமன் தான்மாறி
எதிர்த்தா ரிருவர் எனக்கெனக் கென்றேதான்
செதுத்தான் வலுமை செய்வதுகே ளம்மானை
மண்விண் ணதிரும் வானமது தானதிரும்
திண்திண் ணெனப்பூமி தொந்தொ மெனக்குலுங்கும்
மலைக ளசைந்து மடமடென ஓசையிடும்
கலைகள் கரிகள் கதறி மிகஓடும்
அலைகள் சிதறி அங்குமிங் கோடிடவே
இலைக ளுதிர்ந்து இடிந்துவிழு மாமரங்கள்
தூளெழும்பிச் சூரியனைத் தோன்றாம லேமறைக்கும்
வேழுழும்பிக் காட்டில் விழுந்தலறி ஓடிடவே
தவமுனிவர் நெட்டை தானழிந்து தட்டழிந்து
திசைமாறித் திக்கில் திரிந்தலைந்து போயினரே
வேதா சிவனும் வெம்மருண்டு தாம்பதற
நாதாந்த மோதும் நன்மறையோர் தாம்பதற
துரியோ தனன்போரும் செயவீமன் றன்போரும்

எரியோ டெரிதான் எதிர்த்துப் பொருதாப்போல்
ஒண்ணுக்கு வொண்ணு விலகிப்புறஞ் சாயாமல்
மண்ணும்விண் ணுமதிர மண்டி யுத்தமிட்டார்
துரியோ தனனடிக்கத் துடிவீமன் சாயாமல்
மரியாதை வீமன் மாறிய வனடிக்க
அடிக்க அவன்பிடிப்பான் அப்படியே சண்டையிட்டுச்
சாயா விதத்தைத் தானறிந் திருபேரும்
வாயால் சபதம் வகுத்தே பொருவோமென்று
கட்டான கள்ளன் கசடன் வெகுகெடும்பன்
துட்டாள னான துரியோதன னுரைப்பான்
இத்தனை நேரம் இருபேருஞ் சண்டையிட்டுப்
புத்தியில்லா வண்ணம் பொருதோமே வம்பாலே
உன்பெலமு முன்னுடைய உயிர்ப்பெலமும் நீயுரைத்தால்
என்பெலமு முன்னோடே இயம்புகிறே னென்றுரைத்தான்
அப்போது வீமன் அவனிலைக ளத்தனையும்
தப்பாமல் தானுரைத்தான் சகலோ ரறிந்திடவே
கேட்டுத்துரி யோதனனும் கேளுநீ யென்பெலங்கள்
தீட்டுகிறே னென்னிடது செய்யபுற மென்றுரைத்தான்
கள்ளக் கௌசலமாய்க் கபடுரைத்த ஞாயமெல்லாம்
எவ்வளவு போலே இசையாத வீமனுக்கு
மெய்யுரைத்தா னென்று மேலான போர்வீமன்
கையாரத் தண்டால் கனக்க அடித்தனனே
அடிக்கவே வீமன் அசையாமல் மற்றோனும்
திடத்த முடனே சென்றவ் வீமன்பேரில்
மாறி யவனிடிக்க வாட்டமுற்றுப் போர்வீமன்
தேறியே மாயவரைச் சிந்தை தனில்நினைக்கத்
திலர்தமுள்ள மாயன் செயவீ மனைநோக்கி
வலது துடைதனிலே மாயன் கண்காட்டிடவே
அடித்தானே வீமன் அதுதான் குறியெனவே
துடித்தான் கிடாய்போல் துரியோதனன் விழுந்து
மூடற்ற மாமரம்போல் முறிந்துகீழ் தான்விழுந்தான்
கூடற்ற உயிர்போல் குலைகுலைந்து வீழ்ந்தனனே
அப்போது மாயன் அரவக்கொடி யோனிடத்தில்
தப்பாமல் வார்த்தையொன்று தான்கேட்கப் போயினரே
முன்னே பிறப்பில் முடியிலங்கை யாண்டிருந்தாய்
தென்ன னிராவணனாய்ச் சிரசுபத்தாய்த் தானிருந்தாய்
அப்போது நீதான் அநியாயஞ் செய்ததினால்
செப்போடு வொத்த ஸ்ரீராமனாய் நான்தோன்றி
பத்துச் சிரசறுத்துப் பார்மீதிலே கிடத்தி
உற்று வொருவசனம் உரைத்தேனா னுன்னிடத்தில்
தம்பியா லென்னை சரமறுத்தா யல்லாது
எம்பிரா ணன்வதைக்க ஏலாது என்றனையே
தம்பியொரு நூறோடே தான்படைத் துன்னையுந்தான்
கொம்பிலொரு ஆளைவிட்டுக் கொன்றேனே உன்னையென்றார்
என்றுரைக்கப் பாவி இகழ்த்துவா னப்போது
தண்டுகொண் டேயடித்த தமிழ்வீ மனல்லாது

இன்றுன்னா லேலாது இடையாபோ வென்றனனே
அப்போது மாலும் அதிகக்போ பம்வெகுண்டு
துப்புரைகள் கெட்ட தீயனுக்கங் கேதுரைப்பார்
உன்னையின்ன மிந்த உலகி லொருபிறவி
சின்னபின்ன மாகச் சிரசொன்றாய்த் தான்படைத்து
அறிவுபுத்தி யோடும் ஆணுவங்கள் தன்னோடும்
செறியுங் கலையோடும் சிறப்போடுந் தான்படைத்து
என்பேரி லன்பு இருக்கவெகு சாஸ்திரமும்
தன்போத மறியத் தான்படைப்பேன் கண்டாயே
முன்னே வுனக்கு உற்றபிறப் பாறதிலும்
என்னை நினைப்பு எள்ளளவும் நம்பவில்லை
ஏழாம் பிறப்பதிலும் என்னைநினை யாதிருந்தால்
பாழாவாய் மேலும் பகையில்லை யென்றனக்கு
என்று திருமால் இயம்பித்துரி யோதனனை
அன்றவனைக் கொன்று ஐவரையுந் தான்வருத்திக்
கர்மச் சடங்கு கழிக்க விடைகொடுத்தார்
தர்மமுள்ள கர்ணனுக்கு சாஸ்திரத்தி லுள்ளமுறை
எல்லாச் சடங்கும் இவருக்கும் நூற்றுவர்க்கும்
உல்லாச முள்ளதர்மர் ஒக்கமுறை செய்தனராம்

விளக்கம்:

இப்படியாக,பன்னிரு ஆண்டுகள் உருண்டோடின. பதின்மூன்றாம் ஆண்டு தொடங்கியது. இந்த ஆண்டில் எவரும் அறியாதபடி அவர்கள் மறைந்து வாழ வேண்டும். அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் மீண்டும் வனவாச வாழ்க்கை மேற்கோள்ள வேண்டியிருக்கும். இதனால் பாண்டவர்கள் விராட நாட்டில் விராட மன்னன் அரண்மனையில் மாறுவேடம் பூண்டு மறைந்து வாழ்ந்தனர். துரியோதனன், பாண்டவர்களைக் கண்டறிந்து மீண்டும் அவர்களைக் காட்டிற்கு அனுப்பத் திட்டங்கள் தீட்டினான். நான்கு திசைகளிலும் ஒற்றர்களை அனுப்பினான். விராட நாட்டில் பாண்டவர்கள் மறைந்து இருக்கலாம் என்பதை அறிந்து அந்நாட்டின் மீது படையெடுத்தான். பாண்டவர்கள் துணையோடு விராடன் வெற்றி பெற்றான். பதின்மூன்றாம் ஆண்டும் முடிந்தது. பாண்டவர்கள் தலைமறைவு வாழ்க்கையிலிருந்து வெளிப்பட்டார்கள்.

## கிருஷ்ணன் தூது:



## கீதை அருளல்

பின்னர் பாண்டவர்கள் கண்ணன் முதலியோருடன் ஆலோசனை செய்து துரியோதனனிடம் தூது விடுக்க முடிவு செய்தனர். இறுதியில் கண்ணனே தூதனாகச் சென்றான். இருப்பினும் துரியோதனன் பாண்டவர் நாட்டைத் திருப்பித்தர மறுத்து விட்டான். போரில் வென்று நாட்டை மீட்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. இறுதியில் பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் பாரதப் போர் மூண்டது.

## பாரதப் போர்

பாண்டவர்களுக்கு எதிராக அவர்களது பெரியப்பா திருதராஷ்டிரனின் மக்களான கவுரவர்கள் செயல்பட்டு வந்தனர். அவர்கள் பாண்டவர்களின் பூமியை அபகரித்திருந்தனர். இதுபற்றி விசாரித்து, திருதராஷ்ரனுக்கு நல்லறிவு புகட்ட தகுதியானவர் அக்ரூரர் என்பதை உணர்ந்திருந்தார் கிருஷ்ணர். மேலும் அவர் பாண்டவர்களின் தாய் குந்திக்கும் உறவினர். அதை அக்ரூரரிடம் எடுத்துச் சொன்னார். அவரது கட்டளையை ஏற்ற அக்ரூரர் சில நாட்களிலேயே ஹஸ்தினாபுரம் புறப்பட்டு விட்டார். திருதராஷ்டிரனின் சகோதரர் விதுரர் நியாயத்துக்கு கட்டுபட்டவர். அவர் மூலமாக, ஹஸ்தினாபுரத்தில் நடக்கு விஷயங்களை அறிந்து கொண்டார். அக்ரூரர் அதனால் தான் நியாயத்தைப் பேசும் விதுரரைத் தொடர்பு கொண்டார். பின்னர் குந்தியை சந்தித்து நடந்த விஷயங்களை அறிந்தார்.

திருதராஷ்டிரன் பிள்ளைப்பாசத்தால், பாண்டவர்களைக் கொல்ல திட்டமிடுவதை உறுதி செய்த பின்னரே திருதராஷ்டிரனிடம் சென்று அறிவுரை வழங்கினார். அவன் செய்வது நியாயமல்ல என்பதை ஆணித்தரமாக எடுத்துச் சொன்னார். அப்போது திருதராஷ்டிரன் தன் தவறை உணர்ந்திருப்பதை ஒப்புக் கொண்டான். ஆனாலும் அவன் அவரிடம், அக்ரூரரே ! உமது போதனைகள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவை என்பதை நானறிவேன். ஆனாலும், ஒருவனுக்கு மரணம் என விதிக்கப்பட்டிருக்கும் வேளையில் யார் அறிவுரை சொன்னாலும் அதனால் பயனில்லாமல் போய்விடும். அந்த அறிவுரைகள் அமுதம் என்று தெரிந்தாலும் அதை அவன் ஏற்க மாட்டான். உமது அறிவுரைகளை நான் ஏற்காதது கூட அந்த கடவுளின் சித்தம் தான்.

ஏனெனில், கடவுளின் சித்தத்தை தடுத்து நிறுத்தும் சக்தி யாருக்கும் இல்லை. அது நம் இருவருக்கும் பொருந்தும். அறிவுரை சொல்பவனும், பெறுபவனும் கூட அதற்கு விதிவிலக்கல்ல. பூமியில் பாவிகளைக் குறைக்க யது வம்சத்தில் பரமாத்மா தோன்றியுள்ளதை நான் அறிந்திருந்தும் என்னால் ஏதும் செய்ய முடியாமைக்கு வருந்துகிறேன், என்றான். திருதராஷ்டிரன் நிர்ப்பந்தத்தின் பிடியில் இருக்கிறான் என்பதை அக்ரூரர் அறிந்து கொண்டார். திருதராஷ்டிரனும் தன் பிள்ளைகளைக் காவு கொடுப்பதற்கென்றே நிர்ப்பந்தத்தின் பிடியில் சிக்கியிருந்தான். அக்ரூரர் மதுராவுக்கு திரும்பி, கிருஷ்ண, பலராமரிடம் விஷயத்தைச் சொன்னார்.

துரியோதனன் பாடு

வனவாசம் முடித்துத் திரும்பிய பிறகும் பாண்டவர்களுக்கு உண்டான ராஜ்ஜியத்தைக் கொடுக்க, துரியோதனன் மறுத்துவிட்டான். பாண்டவர்களுக்காக நியாயம் கேட்க பகவானே அஸ்தினாபுரம் நோக்கித் தூது வந்தார். தூது வந்த கண்ணனை ஏமாற்றுவதற்காக துரியோதன கும்பல் பலவகைகளிலும் விரிவான ஏற்பாடுகளைச் செய்து வைத்திருந்தார்கள்.

கிருஷ்ணர் பாண்டவர்கள் சார்பில் துரியோதனிடம் பாதி நாட்டை கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். கிருஷ்ணர் தூது வருகின்றனர் என்பதை அறிந்து திருதராஷ்டிரர் பகவான் கிருஷ்ணரை இங்கு தூதுவனாக எழுந்தருளி அதற்கு என்ன தவம் செய்தேனோ நான் என்று பெரு மகிழ்ச்சி கொண்ட திருதராட்டிரனின் ஆனந்தத்தை கண்டத் துரோணர் சொல்லுவார், மன்னரே! கண்ணபிரான் வருகிறார். பிடித்த வகையில் பாண்டவர்களுக்கு பாதி நாட்டை நீ கொடுப்பாய்.

அதனால் அப்பெருமான், யுகந்தக்காலம் வரை நீயும் உன் மக்கள் நல்வாழ்வு தரும் படி மனம் உவந்து அருள் புரிவார் என்றார். அப்போது துரியோதனன் அதை மறுத்து வீணாக ஏன் பேசுகிறீர்கள். அவன் இங்கு வரட்டும் நான் அவனைச் சிறைப் படுத்துவேன். அப்பொழுதுதான் பாண்டவர்களும், அவனைச் சார்ந்த மன்னவர்களும் அஞ்சி நம்முடைய நட்பினை நாடிச் சமாதானத்திற்கு வருவார்கள் என நளினமாகப் பேசினான்.

அதைக் கேட்ட திருதிராட்டிரன் மூடனே! கண்ணபிரான் சாதாரணமான மனிதரா? அவரை உன்னால், தொடக்கூட முடியாது. தீங்கான வார்த்தைகளைப் பேசாமல், அப்பெருமானை இன்சொல் கூறி எதிரில் சென்று அழைத்து வா என்றார். ஆமாம் மாயக்கண்ணனை வரவேற்க போகாதே! என்று தடுத்தான் மாமன் சகுனி.

ஆனால் பணிவில் சிறந்து விளங்கும் விதுரரோ, எம்பெருமானை வணங்கி, கண்ணணனே தங்கள் இருப்பிடம் இங்கே இருப்பதால், இங்கு எழுந்தருள வேண்டும் என்று இருப்பிடத்தை காட்டி அழைத்தார். அதைக் கேட்ட கண்ணபிரான் புன்னகை பூத்த முகத்துடன் தூய்மையான பக்தி நிறைந்த விதுரரின் வீட்டில் தங்கினார். விதுரர் மெய் மறந்தார். “கண்ணா! என் இல்லத்தையும் ஒருபொருட்டாக எண்ணி நீ வந்தாயே! இந்த இல்லம் என்ன அநாதி காலமாக நீ யோகநித்திரை செய்த பழமையான பாற்கடலா? அல்லது ஆதிசேஷன் எனும் திருப்பள்ளி மெத்தையா? அல்லது நான்கு வகையான வேதங்களா? நீ எழுந்தருளுவதற்கு, இந்த இல்லம் பெருந்தவம் என்ன செய்ததோ?” என்று அன்பும் பக்தியும் ததும்பக் கூறினார்.

விதுரரின் பக்தியை அனுபவித்த கண்ணனிடம், கண்ணன் வருகைக்கான காரணத்தைக் கேட்டார் விதுரர். “பாண்டவர்க்காகத் தூது வந்தேன்” என்றார் கண்ணன். “துரியோதனன் எதுவும் தர மாட்டானே” என்றார் விதுரர். “கவலைப்படாதே விதுரா! துரியோதனன் முதலானவரைக் கொன்று, தங்களுக்கு உண்டானதை பெறுவார்கள் பாண்டவர்கள்” எனப் பதில் சொன்னார் கண்ணன். விதுரரின் இல்லத்திலே தங்கிய கண்ணன், மறுநாள் துரியோதனன் சபைக்கு சென்றார்.

துரியோதனன் கண்ணபிரானை நோக்கி ,கண்ணபிரானே! நேற்றைய தினம் அஸ்தினாபுரம் வந்ததும் என் இல்லம் வராமல் விதுரர் மனைக்குச் சென்ற காரணம் ஏன்? என்று கேட்டான். அது கேட்ட கண்ணபிரான் உன் வீடு, என் வீடு என்ற பேதம் நான் பார்ப்பதில்லை.

கிருஷ்ண பரமாத்மா துரியோதனிடம் அன்பு கொண்ட விதுரர் வழியில் எதிர்கொண்டு அழைத்ததால் சென்றேன். அதிலும் நான் பாண்டவர்கள் சார்பில் தூதுவனாக வந்ததால், உன் அரண்மனையில் தங்கி உணவு உண்பதில் சாத்தியமாகாது. மேலும் ஒன்றும் அறியாதவர் போல் கிருஷ்ண பரமாத்மா கேடு கெட்ட குணம் கொண்ட துரியோதனிடம் மன்னனே! நின் சகோதரர்களான பாண்டவர்கள் நீங்கள் குறிப்பிட்டது போல் 12 ஆண்டு வனவாசம், ஓர் ஆண்டு அஞ்ஞான வாசமும், பல இன்னல்களுக்கு இடையில் வெற்றிகரமாக முடித்து வந்துள்ளார்கள். அவர்களை வரவழைத்து அவர்களுக்குரிய நாட்டினைக் கொடுத்தால் மிக நன்மை பயக்கும் என்றார். அதைக் கேட்ட துரியோதனன், கோபம் கொண்டு அன்றைக்குச் சூதாடி நாட்டை இழந்து காட்டிற்குச் சென்றவர்கள், இப்போது என்னிடம் இருக்கும் நாட்டை கேட்டால் எப்படி கொடுக்க முடியும். அவர்களுக்கு நாட்டைக் கொடுத்துவிட்டு நான் என்னக் கோழையா? என்றான்.

தெய்வமாகவே இருந்தாலும் கொஞ்சம் இறங்கி வந்தால், அவமானப்படுத்துவது மனித இயல்பு! துரியோதனன் மட்டும் விதி விலக்கா என்ன? பாண்டவர்க்காக கையேந்தி நின்ற பகவானை அவமானப்படுத்தினான் துரியோதனன். இவ்வளவு அவமானப்படுத்தியும் கண்ணன் அதைப் பொருட்படுத்தவில்லையே என்று எண்ணிய துரியோதனன், தன் கோபத்தை விதுரரிடம் காட்டினான். “கண்ணனுக்கு ஏன் இந்த விதுரன், விருந்தளிக்க வேண்டும்? என் ராஜ்ஜியத்தைப் பிடுங்கி பாண்டவர்களிடம் கொடுக்கவா? என் தந்தைக்குத் தம்பியாகப் பிறந்திருந்தும்; இன்றுவரை என் சோற்றைத் தின்றும்; இந்த விதுரனுக்கு என் மேல் அன்பு இல்லை. செல்வம் கிடைத்தால் ஒருவனை விட்டு, அடுத்தவனை விரும்பும் பொதுப்பட்ட தாசி மகன்தானே இவன்! இப்படிப் பட்டவன் என்னைக் கை விட்டதில் என்னவியப்பு?” என்று சபையிலேயே விதுரரை ஏசினான் துரியோதனன்.

“துரியோதனா! என்னை இழிவாகப்பேசிய உன்னை, வாயில் ரத்தம் வரும்படியாக அடித்து, உன் தலையையும் வெட்டிவிட என்னால் முடியும். ஆனால், குரு வம்சத்தில் பிறந்த ஒருவன், புதல்வனின் அருமையான உயிரைக் கவர்ந்து விட்டான்” என்று மனிதர்கள் மட்டுமல்ல; தேவர்களும் பரிகாசம் செய்வார்கள். அதனால்தான் உன்னை உயிரோடு விட்டேன்.

இனிமேல், போரில் யார் பக்கமும் சேர்ந்து நான் போரிட மாட்டேன்” என்று தர்ம ஆவேசமாக சபதம் செய்த விதுரர், மிகவும் தலைசிறந்த வில்லான ‘வைஷ்ணவ தனுசு’ எனும், தன் தலைசிறந்த வில்லை இரண்டாக உடைத்துக் கீழே எறிந்து விட்டு, தன் இருப்பிடம் திரும்பினார் விதுரர்.

‘‘அட! விதுரனை விட்டால், வில்வித்தையில் சிறந்தவர்கள் வேறு யாரும் இல்லையா என்ன?’’ என்று அப்போதும் ஆணவத்துடன் பேசினான் துரியோதனன். வில்லை உடைத்துப் போட்டு விட்டு விரக்தியுடன் திரும்பிய விதுரரிடம், ‘‘விதுரா! பிரசித்தி பெற்ற உன் வில்லை ஏன் உடைத்துப் போட்டாய் நீ?’’எனக்கேட்டார்கண்ணன்.

‘‘கண்ணா! பூமியில் வாழும் மனிதர்களில் சிலர், செல்வம் வந்தால் (அது தன்னிடம் வரும்படியாகத் திருவருள் புரிந்த) தெய்வத்தைக் கூட விரும்பிக் கொண்டாட மாட்டார்கள். பேசும்போது, உணர்ந்து பேச மாட்டார்கள். யாரிடமும் தாட்சண்யம் பார்க்க மாட்டார்கள். தாம் வெற்றி பெறுவதிலேயே எண்ணம் கொண்டிருப்பார்களே தவிர, பகைவர்களும் பலம் உள்ளவர்கள் என நினைக்க மாட்டார்கள். வலிமை கொண்ட ஊழ்வினைப் பயனையும் ஆராய மாட்டார்கள்.

‘‘தெய்வமான நீயே வந்து சொல்லியும் கேட்காமல், மனதில் குரோதம் கொப்பளிக்க உன்னையும் என்னையும் வாய்க்கு வந்தபடி, மிகவும் இழிவாகப் பேசினான் துரியோதனன். அதனால்தான், மிகவும் பிரசித்தி பெற்ற என் வில்லை நான் முறித்துப் போட்டேன்’’ எனப் பதில் சொன்னார் விதுரர்.போர் தொடங்கும்போது, விதுரர் பலராமனுடன் தீர்த்த யாத்திரைக்குப் போய் விட்டார். பாரதயுத்தம்முடிந்தபிறகுதான்திரும்பினார்.

அவர்கள் கானகத்தில் வாழ்வது தான் அவர்களுக்கு நன்மை. எத்தகைய இனிய வார்த்தை யார் சொன்னாலும் நான் ஈ இருக்கும் இடம் கூட அவர்களுக்கு எக்காலமும் கொடுக்கமாட்டேன் என்று சீறினார். அக்கிரமமான பேச்சை கேட்ட கண்ணபிரான் சபையில் இருந்தவர்களைப் பார்த்துத் துரியோதனன் கூறுவது நியாயமா? என்று கேட்க, எல்லோரும் மௌனமாய் இருந்தார்கள். அதனால் கண்ணன் திருதராஷ்டிரரைப் பார்த்து அரசே உன் மகன் கோபத்தினால் பேசும் பேச்சின் விளைவுகள் உன்னை தான் சேரும். தற்போது நாட்டை ஆளும் மன்னன் நீயே! பாண்டவர்களுக்கு ஒரு நாட்டை நீ கொடுத்தாயானால் உன்னை யாரும் எதிர்த்து பேச மாட்டார்கள். நீயாக பாதி நாட்டைக் கொடுத்தால் உன் மக்களுக்குத்தான் நன்மை சேரும். உன்னை மூன்று உலகங்களும் போற்றும். ஆகவே முன்னர் கூறியபடி அவர்களுக்குரிய நாட்டை கொடுத்துவிடுங்கள் என்றார்.

நீங்கள் கொடுக்க மறுத்தாலோ, பாண்டவர்கள் போர் செய்து அவர்களுக்கு உரிய நாட்டைப் பெற்றுக் கொள்வது உறுதி. பின்னால் வரப்போகும் இந்த அபாயத்தை போக்கிக் கொள்ளவே எச்சரித்து கூற நான் தூதுவனாக வந்துள்ளேன் என்றார்.

கண்ணபிரான் கூறியதைக் கேட்ட திருதராட்டிரர், துரோணர், பீஷ்மர் மற்றும் சபையோர் அனைவரும் துரியோதனனா! அவர் எல்லோருக்கும் மேலானவர். பத்மநாபனாகிய கண்ணபிரான் உன்னை மைத்துனன் என்ற முறை கொண்டு, நீ உய்யும் படி இதமானச் சொற்களைச் சொல்லுகிறார் என்றால், அது நீ முற்பிறவியில் செய்த தவமே. அதனால் நீ கண்ணபிரான் சொல் கேட்டு அவர்களுக்கு உரிய பங்கு சிறிதளவாவது இருந்தாலும் கொடு என்றார்கள். இவ்வாறு சான்றோர்கள் கூறியதைக் கேட்ட துரியோதனன், வயறுக் குலுங்க நகைத்துக் கொண்டு, கண்ணா! போரில் வீரத்தைக் காட்டுவது

தான் அவர்களின் சிறப்பு. சிவபெருமானே என் எதிரில் வந்து கேட்டாலும் அவர்களுக்கு சிறிதளவு இடம் கூட நான் கொடுக்க மாட்டேன் என்றார்.

அது கேட்ட கண்ணபிரான், பாதி நாடு அவர்களுக்குரியது அதை கொடுக்காவிட்டால், ஐந்து ஊர்களையாவது கொடு, அதற்கும் அவன் மறுக்கவே, ஐந்து வீடுகளையாவதுக் கொடுத்தாலும் , நீ புகழ் பெறுவாய் என்றார். பாண்டவர்களுக்காக ஐந்து வீடு என்ன, ஒரு வீடு கூடக் கொடுத்தாலும் அதை வேண்டாமென்று கருதாமல் ஏற்றுக்கொள்ளும் தன்மை உடையவர்கள் அல்லவா? அந்த பஞ்சப் பாண்டவர்கள். இனிமேல் கேட்பதில் ஒரு பயனும் இல்லை. அவர்களுக்கு ஊசிக்குத்தும் அளவுக் கூட இடம் கொடுப்பதில்லை.
நானும் கொடுப்பேன் என்ற எண்ணத்தை விட்டுவிடுங்கள், என்று அடாவடித்தனமாக இழிவாக கூறினான்.

கண்ணன் துரியோதனனைப் பார்த்து, துரியோதனா! உன் சுற்றத்தார் உன்னுடன் பிறந்தவர்களும், குரு வம்சத்தார், மற்றும் உன் சார்ந்த மன்னர்கள், உன் வீண் பிடிவாதத்தால் அழியலாமா? அழிவது நல்லதா? மகிழ்ச்சியோடு வாழ்வதும் நல்லதா? உனக்கு நன்மை தருவது எதுவோ அதை செய், என்று கூறி,
" உலகெல்லாம் உண்டு உதவும் உந்தியானாகிய பரந்தாமன்" அப்போது இரு கையேந்தி யாசித்தார்.

குணம் கெட்ட துரியோதனிடம். இருக்கையேந்தி, தன் அடியவரகளுக்காக யாசித்தார் உலகளந்த மாயன். அப்போது, துரியோதனன் மனம் நெகிழாது, கண்ணா! நீ கூறும் தர்ம அதர்மங்களை போர்களத்தில் காணலாம். அப்படியே நீ சொல்லுகிறபடி ஒருவேளை பாதி நாடு நான் பாண்டவர்களுக்கு கொடுத்தாலும் அதை ஆளும் தகுதி அவர்களுக்கு உள்ளதா? நாங்கள் தான் நாட்டை ஆளுகின்ற தகுதியுடையவர்கள். யார் வீரர்கள் என்பதை அவர்கள் போர்க்களத்தில் நிரூபிக்கட்டும். ராஜாதி ராஜனாகிய நான் அந்த பஞ்ச பாண்டவர்களை எளிதில் வென்று விடுவேன். அவ்வளவு பலம் கொண்டவன் நான். நான் வீரமுள்ளவன்.

என் தம்பி துச்சாதனன் திரௌபதியின் துகில் உரிந்து, அவமானப்படுத்திய காலத்தில், வீரத்தை காட்டாது, நெட்டை மரங்கள் எனப் பெருமூச்சு விட்டு நின்றவர்கள் தான் அந்த பஞ்ச பாண்டவர்கள். இன்று எந்த புது வீரத்தைப் பெற்று விட்டார்கள்? எங்களை வெற்றி கொள்ள? காட்டில் சென்று வீரத்தைப் பெற்று வந்தார்களோ? தன் பத்தினியை பாதுகாக்க முடியாமல் தலை கவிழ்ந்து இருந்தார்கள். பயந்து காட்டிற்கு ஓடினார்கள். இன்று புதுப் பொலிவு பெற்றார்களோ? யாரிடம் கதை விடுகிறாய்.

பஞ்சம் போக்கும் பாண்டவர்கள் ஐவரும், ஐந்து பேருக்கும் ஒரு பத்தினியாம். இத்தகைய இழிநிலையைப் பெற்றவர்கள் , பெருமை மிக்க குரு நாட்டை ஆள்வதற்கு உரிமை கோருவார்கள். நாங்கள் கேட்ட உடனே கொடுக்க வேண்டுமாம்? என்ன காலத்தின் கோலம் இது.

இத்தகைய பாண்டவர்களுடன் என்னை ஒப்பிடுவது இவ்வாறு பொருத்தமாகும். எண்ணிப் பாரும் கண்ணா! என்று கோபத்தோடு கூறினான். துரியோதனின் துடிப்பான இழிவான பேச்சை கேட்ட கண்ணபிரான், ஒன்றும் கூறாது ,பாண்டவர்களின் சபதம் நிறைவேறும். போர் தான் முடிவு சொல்லும் என்று உள்ளுக்குள் எண்ணி சபையை விட்டு வெளியேறினார்.

வஞ்சக நெஞ்சம் கொண்ட துரியோதனன் பேசிய வசனங்களைக் கேட்டு "அரவணையில் அமர்ந்திருந்த பிரான்" உன் செயல் மிக கீழ்தரமானது. பாண்டவர்கள் அன்று செய்த சபதம் நிறைவேற வேண்டுமாயின், பாண்டவர்களும் கௌரவர்களும் போர் செய்து தான் வெற்றி பெற வேண்டும் என்று முடிவு செய்தார்.

துரியோதனன், குந்தி தேவியின் மகன் கர்ணன், அவன் பக்கம் இருந்தாலும், வியாசருடைய மகன் விதுருடைய பலமும், மற்றும் பீஷ்மர், துரோணர் அவன் மாமா சகுனியோடும் இருந்து சூழ்ச்சியால் வென்று விடலாம் என்ற மமதையில் கழித்து இருந்தான் துரியோதனன். பாண்டவர்களின் பக்கம் உள்ளவர்களாகிய வில் வித்தையில் சிறந்த அர்ஜுனனும், வீரத்தில் சிறந்த வீமனும்,சூரியச் சக்தியைப் பற்றிச் சாஸ்திரத்தில் சிறந்த சகாதேவனும், அழகே உருவாக கொண்ட நகுலனுக்கு வேகமாக குதிரை ஓட்டும் திறன் கொண்டவன் ஆகும். மற்றும்தர்மச்சிந்தனையும்,வாக்குதவறாத ஒழுக்க தன்மையும் கொண்டதாகும். இவர்களோடு அண்டச் சராசரங்களையும் தன்னுள் அடக்கி, ஆதிபரம் பொருளாகிய ஸ்ரீகிருஷ்ணர் பெருமாளும் இவர்களுடன் துணையாய் நின்றார்.

அந்த ஆதி பரம் பொருள் உதவியால் தான் திரௌபதியின் விரித்த தலை முடிக்க எடுத்த சபதம் நிறைவேற மகாபாரதப் போர் தொடங்கியது. இப்படியாக பாண்டவர் படைகளும் பாம்புக் கொடியையுடைய துரியோதனன் படைகளும் போர்புரிந்து,போரில்பல்லாயிரக்கணக்கானவீரர்கள்,யானைப்படை,குதிரைப் படைகளும்,கணக்கற்றபெலம்கொண்டபலசாலிகளும்ஆச்சாரியர்களம், போர்புரிந்து அழிந்தனர்.

குந்தியின் மூத்த மகனான கர்ணன் துரியோதனனனின் மாமனாகிய சகுனியிடம், பாண்டவர்களின் மாமனாகிய சல்லியன், வில் வித்தையில் சிறந்த பீஷ்மர். துரியனின் பிரியமான துரோணர் முதல் கம்சனுடைய மாமனாகிய ஜராசந்தன், சிங்கபலம் கொண்டிருந்த கீசகன் வரைக்கும் உள்ள அனைவரையும், மந்தார மலையை சின்னமாக கொண்ட பீமன், இவர்கள் அனைவரின் வீரத்தையும் அடக்கி பலியிட்டான்.

துரியோதனன் நீங்கலாக அவனுடைய சகோதரர்கள் 100 பேரும் உயிரோடு இல்லாமல் ஆக்கி விட்டான் பீமன். மற்றும் அர்ஜுனன் எல்லா வீரர்களையும், வேற்று நாட்டு மன்னர்களையும், அர்ஜுனன் தன்னுடைய அஸ்திரத்தால் அழித்து அறுத்தான் . துரியோதனின் படைகள், அவனுடைய தம்பிமார்கள், அவர்களுடையப் பிள்ளைகள் வம்பாகச் சண்டையிட்டு இறந்துவிட்டார்கள். கவலை கொண்டான் துரியோதனன். கர்ணண் இல்லாமல் என் வாழ்க்கை வாழ்வாகாது. எனது விருப்பமான கர்ணனை வெற்றிகொண்ட அர்ச்சுனனை அழித்து விடுவேன் என்று ஆவேசம் கொண்டான். துரியோதனின் எண்ணத்தைத் திருமால் அறிந்துக்கொண்டார்.

அர்ஜுனனிடம், அர்ஜுனா! நீ போர் செய்து எல்லோரையும் அழித்து விட்டாய் என்கிற வேகத்தில் மிகவும் கோபத்தோடு வந்து உங்களோடுப் போர் செய்ய வந்திருக்கிறான். ஆகையால் பீமனை அழைத்துப்போர் செய்ய அனுப்பவேண்டும். பீமா உனக்கு இன்று நல்ல வாய்ப்பு. உன்னால் தான் எல்லா பிரச்சனையும் தீர்க்க முடியும் என்றார் பகவான்.

தன் விருப்பத்தை நிறைவேற்றி பாஞ்சாலியின் தலை விரித்தக் கூந்தலை முடிவதற்கு இது தான் சமயம் என்று பீமன் ஆவேசம் கொண்டான். திருமால் கூறியதும் கோபம் கொண்ட பீமன், கடா என்னும் ஆயுதத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, தண்டாயுதத்தையும் எடுத்துக்கொண்டு, அதிக வேகமாகச் செயல்படும் திருமால் சக்தியையும் பெற்றுக்கொண்டு போர்க்களம் சென்றான் பீமன். போர்க்களம் சென்றான் பீமன் துரியோதனனை எதிர்த்துப் போரிட்டான். இரண்டு பேரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமல் கோபமாக சீற்றத்தோடுப் போரிட்டார்கள். அகிலமே அதிரும் படி ஆரவாரத்தோடு வெற்றி, தோல்வி காணாது போரிட்டார்கள். பூலோகத்தாரும், மேல்லோகத்தாரும் அதிர்ச்சியடையக் கூடிய அளவில் யுத்தம் செய்தார்கள். பீமன் ஸ்ரீ கிருஷ்ணரை மனதில் தியானித்தான்.

திட்டம் தீட்டுவதில் திறமை உள்ள மாயக்கண்ணன் செய்வது அறியாமல் திணறி நின்ற பீமனை நோக்கி கொடியவனின் வலது தொடையை குறிவைக்கும்படி கண்களால் ஜாடை காட்டினார். உடனே பீமன் துரியோதனனின் தொடையில் அடித்து அவனைக் கீழே சரித்தான். மறுபடியும் பீமன் துரியோதனனின் தொடையில் அடிக்க வேரோடு சாய்ந்த மரம் போல் தரையில் விழுந்தான். தொடையில் பட்ட அடியின் வேதனை தாங்க முடியாமல் அரக்கனாகிய துரியோதனன் நிலை குலைந்து துடிதுடித்தான்.

அவ்வேளை மாயக்கண்ணன் அவனிடம் போய் கூறுவார், முன்பிறவியில் இலங்கைக்கு மன்னராக ராவணனாய் முடிசூடி ஆண்டுகொண்டிருந்தாய். பத்துதலை இருபது கையும், காலுமாய் அரக்கனாய் , அரக்கர்களுக்கெல்லாம் தலைவனாக இருந்து இலங்கையை ஆண்டு பாவச் செயல்களை எல்லாம் செய்தபடியால், நான் ஸ்ரீ ராமர் அவதாரம் எடுத்து உன் அகந்தையை அழித்துக் கொன்றேன். அதற்கு நீ என் உடன் பிறந்த தம்பியாகிய விபிஷ்ணன் உதவியால்தான் என்னைக் கொன்றாய் என்று சொன்னாய்.

அதனால் இப்பிறவியில் உன்னை உன்னோடு பிறந்த 100 பேருடன் உன்னையும் நான் ஒரு ஆளாய் நின்று தண்டாயுதால் உங்கள் எல்லோரையும் அழித்து விட்டேனே என்றார். மறுத்து பேசினான் துரியோதனன். என்னைக் கொன்றது நீ இல்லை. தண்டாயுதால் அடித்து என்னைக் கொன்றது பீமன் அல்லவா? உன்னால் என்னைக் கொல்ல முடியாது. நான் சிவபெருமானிடம் அதிக வரம் பெற்றுக் கொண்டவன். உன்னால் என்னை ஒருபோதும் கொல்ல முடியாது என்றான்.திருமால் கோபம் கொண்டு அப்படியானால் உன்னை நான் மீண்டும் பிறவி செய்து ஆணவத்தை அழித்து, நானே கொல்வேன் பார் என்றார் மாய பெருமான்.

முன்னுள்ள ஆறு விதமான பிறவிகளிலும் நீ என்னைப் பற்றி நினைக்காத படியால், இனி பிறக்கும் ஏழாவது பிறப்பிலும், என்னை சிந்திக்காமல் இருந்தாயானால் நீ பாதாள லோகத்தில் வீழ்ந்து அவதிப் படுவாய் என்றுச் சாபமாய் சொன்னார். இவ்வாறு திருமால் துரியோதனனிடம் கூறி அவளைக் கொன்று ஐவர்களையும் காப்பாற்றி, அவர்களுடைய சபதங்களையும் நிறைவேற்றி , எல்லோருக்கும் கர்மச் சடங்குகளைச் செய்ய தர்மரிடம் சொன்னார்.

போரிலே வெற்றி மாலைச் சூடிய தர்மர் எல்லோருக்கும் தர்ம காரியங்களைச் சாஸ்திர முறைப்படி செய்தார். துரியோதனாதிகள் நூறுபேர்களுக்கும் முறையோடும் , பணிவோடும் செய்து முடித்தார். மற்றுமுள்ள ஆச்சாரியர்களும் கர்மச் சடங்குகளைச் செய்து புனித நீராடினர்.

இந்த போர்க்களத்திலே கீதை என்னும் வாழ்க்கையின் யதார்த்த நிலையை உணர்த்தும் ஒரு ஞானப் பொக்கிசத்தையும் தந்தார்.

## DAY 37

கர்ணனுக்கு முத்தியருளல்

முறைசெய்து கர்ணனுக்கு முத்திமோக்ஷங் கொடுக்க
மறைதேர்ந்த மாயன் வந்தா ரவனருகே
அப்போது வேத வியாசரவ ரங்குவந்து
செப்போடு வொத்த திருமாலோ டேதுரைப்பார்
பாவியோடே கூடிப் படைசெய்த கர்ணனுட
ஆவிக்கு மோக்ஷம் அருளுவதோ மாயவரே
என்றுரைக்க வியாசர் எடுத்துரைப்பா ரெம்பெருமாள்
நன்றுநன்று மாமுனியே நானுரைக்கக் கேட்டருள்வாய்
பண்டு இலங்கைப் பாரழிக்கவே நினைந்து
தொண்டுபண்ணி நின்ற துய்யவா னரங்களிலே
வல்லபெல முள்ள வாலியிவன் முற்பிறப்பில்
நல்லவனாய் முன்னே நாட்டி லிருக்கையிலே
இராவணனோ டேகூடி இராமசரத் தாலிறந்தான்
ஸ்ரீராமனாய் நானிருந்து செயித்த விதமறிந்து
வந்து பணிந்தானே வாலியவ னென்காலில்
நன்றியுள்ள மாலே நானுமுன் னேவலனாய்
முன்னேநீ ரமிழ்தம் உவரிதனிற் கடைய
என்னை யொருபுறமாய் ஏவல்கொண்ட மாயவரே
பத்துத் தலையுள்ள பாவியந்த ராவணனைக்
கொத்திச் சிரசறுத்துக் கொல்லேனோ நானடியேன்
உன்னுடைய பாணம் என்னுடலிற் பட்டதனால்
என்தனக்கு மோட்சம் ஈயவேணுமெனவே
என்றந்த வாலி இறைஞ்சிநின்றா னென்னையுமே
அன்றுவா லிதனக்கு அருளினது நீர்கேளும்
எனக்கேவ லாக இப்பிறவி நீபிறந்து
தனக்கேராப் பாவிதனைச் சங்காத்தங் கொண்டதினால்
இனிமே லவனோடிருந்து என்சொல் கேட்கவைத்துக்
கனியான மோஷக் கயிலாச மேதருவேன்
என்றவனை யழித்து இப்பிறவி ஐவருடன்
முந்தி உதித்து முதற்பிறவி செய்தவனை
அரவக் கொடியோன் இடத்தி லனுப்பிவைத்து
இரவலர்க்கு மீந்து என்புத்தி யுள்ளிருத்தி

அன்னை பிதாசொல் அசராம லைபேர்க்கு
ஒன்னே வொருகணைமேல் விடேனென்ற உத்தமன்காண்

விருத்தம்

இன்னவன் இனியான் என்று எவருமே அறியா என்னை
தன்னுடன் கூடவைத்து தார்மணி பொறுக்கிக் கோர்த்த
மன்னவன் செய்தநன்றி மறந்துநான் போவேனானால்
உன்னிய நரகந்தன்னில் விழவேஏது ஆகுமல்லோ

நடை

ஆனதால் முன்னே அருளிவைத்த சொற்படிக்கு
மானமாய் மோக்ஷம் வகுத்தே னிவனுக்கென்றார்
நல்லதுதா னென்று நன்முனிவன் தான்மகிழ்ந்தான்
எல்லைவைத்த பாரதப்போர் இன்று முடிந்ததென்று
கொண்டாடி ஐபேரும் குருமுனியைத் தெண்டனிட்டு
வண்டாடும் வண்ணமகள் மயிர்முடித்து நீராடி
ஐபேரும் பத்தினியும் அச்சுதரை யும்போற்றி
மெய்போக மான வியாசரை யுங்குவித்து
ஆண்டார்கள் சீமை அச்சுதனா ருண்டெனவே
பாண்டவர்கள் நன்றாய்ப் பாராளும் நாளையிலே

விருத்தம்

காரணமான மாயன் கலியுகம் வருமென்றெண்ணி
நாரணர் நடந்து மானாய் நல்மலை ஏறிப்போக
வாரணர் வில்வேடன் அம்பினால் எய்யப்பட்டு
தாரணிக் கூட்டைப்போட்டு தனிவழி ஸ்ரீரங்கம் போகையிலே

நடை

வைகுண்ட மேக மனதிலுற்று எம்பெருமாள்
பொய்கொண்ட வேசம் பொருந்திப் பொருப்பேறி
ஆங்கார மோகத்(து) அம்புக் கணுவாலே
ஓங்கார மாமுனிவன் விடையேற்றுத் தான்மெலிந்து
பஞ்சவர்க்கு உள்ள பாரப் பெலங்களையும்
துஞ்சிவிட வாங்கித் தோற்றமுள்ள ஐவருக்கு
மேல்நடப் புள்ள விசளமெல்லாந் தானுரைத்து
நூல்நடந்து வாருமென்று மோக்ஷத் திறவோனும்
சீரங்க மாபதியில் செல்கின்ற அப்பொழுது
சாரங்கர் செய்த தன்மைகே ளம்மானை.

விளக்கம்:

கர்ணனுக்கு முக்தியருளல்

மறை வேதங்களின் தலைவனான மாயக்கண்ணன் கர்ணனுக்கு முக்தி அளித்து மோட்சம் கொடுக்க அவன் அருகே வந்தார் அவரோடு வேத சாஸ்திரங்களை எழுதிய வியாச முனிவரும் அங்கு வந்தார். செப்புப் பட்டயத்தில் பொறிக்கப்பட்டது போல், வாக்கு மாறாத கண்ணபிரானிடம் கூறுவார், வியாச முனிவர்! பெரிய பெரிய பாவச் செயல் புரிந்த துரியோதனனோடுக் கூட்டு சேர்ந்து யுத்தம் செய்த கர்ணனுடைய உயிருக்கு சொர்க்கத்தில் இடம் கொடுப்பது என்ன நியாயம் என்று கண்ணபிரானிடம் கேட்டார்.

அதற்கு கண்ணபெருமான் பதில் கூறுவார், வியாசரே நீர் கேட்டது நியாயம் தான். ஏனென்றால், இவன் திரேதாயுகத்தில் தென்னிலங்கையை அழித்து விடவேண்டும் என்று வல்லமையான வானரப் படையில் வாலி என்கிற பெயரில் இருந்தான். இராவணனைப் போல் வாலியும் மாற்றான் மனைவி மீது ஆசைகொண்டான். என் அம்புக்குப் பலியானான் . அன்று மனம் திருந்தி வந்து என் காலில் விழுந்து வணங்கினான். அவன் செய்ததை நினைத்து வருந்தி என்னிடம் தலைத்தாழ்த்தி நாணி செய்த பாவச் செயலுக்கு மனம் திருந்தி மன்னிப்பு கோரினான். அன்றைக்கு நான் வாலிக்கு ஒரு வாக்குக் கொடுத்தேன். அடுத்த பிறவியில் பூலோகத்தில் பிறந்து என் சொல் கேட்டு நல்வழியில் நடந்தால் முக்தி நிலையை தந்து கைலாச வாழ்க்கை தருவேன் என்று கூறியிருந்தேன்.

ஆகையால் குந்திதேவியின் வயிற்றில் பிறவிச் செய்து துரியோதனனுக்கு துணையாக வாழ்ந்து கேட்பவர்களுக்கு இல்லை என்றுச் சொல்லாது வாரி வாரிக் கொடுத்து உதவும் குணம் மாறாமல் இருந்ததாலும், அர்ஜுனன் மீது போர்க்களத்தில் ஒரு தடவைக்கு மேல் நாகாஸ்திரத்தை ஏவக்கூடாது என்றுதாய் கேட்டதால், தாயாகிய குந்திதேவியிடம் அதற்கு சம்மதம் தெரிவித்தான். அர்ஜுனனைத் தவிர மற்ற நால்வரையும் கொல்ல மாட்டேன் என்றும் உரைத்தான். அவன் சொன்ன சொல்தவறாது மரணம் தன்னை நெருங்கிய பிறகும் வாக்குத் தவறவில்லை.

ஒரு தடவைக்கு மேல் அவன் அம்பு செலுத்தவுமில்லை. மற்றவர்களையும் கொல்லவில்லை. அவன் சொன்னபடியே நடந்ததால் அந்த தர்ம குணம் படைத்தவனுக்கு, வாரிக் கொடுத்த வள்ளலுக்கு, அவன் செய்தத் தர்மம் அவனைக் காத்தது, அவனுடைய வாழ்வுக்கு முக்திநிலை இப்போதுக் கொடுக்க வேண்டியது அவசியம் என்று தான் கொடுத்தேன் என்றார்.

உடனே, வியாசர் கண்ணப்பிரானைக் கைகூப்பி வணங்கி! உயர்ந்த நோக்கோடும் சொர்க்கலோக பதவிக் கொடுத்தது நல்ல முடிவுதான் என்றுச் சந்தோஷமடைந்தார். மகா பாரதப்போர் பதினெட்டு நாட்கள் நடந்து முடிந்து, பாண்டவர்கள் வெற்றி பெற்றார்கள். அதற்கு காரணமாய் சாரதியாய் இருந்துப் பாதுகாப்பு அருளிய ஸ்ரீ கிருஷ்ணரை பஞ்ச பாண்டவர்கள் திரௌபதியோடு வலம் வந்து வணங்கி பணிந்தார்கள்.

கண்ணன் அவதாரம் நிறைவு

கிருஷ்ணர் உதவியால் வெற்றிப் பெற்ற பாண்டவர்கள் குரு நாட்டை ஆட்சிப் புரிந்தார்கள். காலங்கள் ஓடியது. அந்த சமயத்தில் பகவான் பூபாரம் தீர்த்து, அவர் வந்த வேலை முடிந்தது என்று கிருஷ்ணன் அவதார காலம் முடிவடையும் நாள் நெருங்கியதை உணர்ந்தார்.

பொய் உடலான மனிதப் பிறவி முடியும் தருவாயில் வர, ஒரு வேடன் அம்புக்கு இலக்காக வேண்டும் என்கிற விதியின்படி, அமையும் நாள் நெருங்கியவுடன் “ஓம்” என்ற ஓங்கார நாயகன் தன் உயிர் வைகுண்டம் செல்ல வேண்டும் என்று நினைத்து முடிப்பதற்குள் பாண்டவர்களுக்கு கொடுக்கப்பட்ட சக்திகளைப் பெற்றுக் கொண்டு சாதாரண மனிதராகவே இருந்தவர்களுக்கு இனிமேல் வருகின்ற கலியுகத்தில் என்னென்ன நடக்கும் என்ற விஷயங்களை சொல்லி விட்டு ஶ்ரீ கிருஷ்ணர் அவதாரத்தை நிறைவு செய்தார் பகவான். இவ்வாறு கிருஷ்ணா அவதாரம் நிறைவு பெற்றது.

.

## DAY 38

சப்தகன்னியரும் சான்றோர் பிறப்பும்;

அரிகோண மாமலையில் அயோதவமிர்த கங்கை
பரிகோண மாமலையின் பகுத்துரைக்கக் கூடாது
தேன்கமுகு மாங்கமுகு தென்னங் கமுகுகளும்
வான்கமுகு வாழை வழுவிலா நற்கமுகும்
சோலை மரமும் சுபசோப னமரமும்
ஆல மரமும் அகில்தேக்கு மாமரமும்
புன்னை மரமும் புஷ்ப மலர்க்காவும்
தென்னை மரமும் செஞ்சந் தனமரமும்
மாவு பலமரமும் வாய்த்த பலாமரமும்
தாவு மரத்தின் தண்மைசொல்லக் கூடாது
சோலையிலே வீற்றிருக்கும் சீர்பறவை யின்பெருமை
தூல மின்னதென்று சொல்லத் துலையாது
பார்வதியும் ஈஸ்வரனும் பாவித் திருப்பதுபோல்
தேர்பதியும் மேடைகளும் சிங்கா சனங்காணும்
அலையில் துயில்வோர் அங்கிருந்த பாவனைபோல்
நிலையில் முனிவோர் நிற்பதெண்ணக் கூடாது
கயிலை யீதென்று கண்ணான மாமுனிவர்
ஒயிலாகக் கூடி உவந்திருப்ப தவ்வனத்தில்
வைகுண்டங் காண வந்ததர்மி யெல்லோரும்
மெய்குண்டங் கண்டோ மெனஇருப்பா ரவ்வனத்தில்
அப்படியே நல்ல அயோக அமிர்தவனம்
இப்படியே நன்றாய் இயல்பா யிருப்பதுதான்
புட்டாபுரங் கிழக்கு பூங்காவு நேர்மேற்கு

வட்டமுள்ள ஸ்ரீரங்கம் வடக்கு வனந்தெற்காகத்
தெற்கே திரிகோணம் செங்காவு நேர்வடக்கு
மிக்கவகை மேற்கு மிகுத்தவனம் நேர்கிழக்கு
இவ்வெல்கை சூழ்ந்த அயோக அமிர்தவனம்
அவ்வனத்தி லுள்ள அமிர்தகங்கை யானதிலே
குளித்து விளையாடிக் கூபந் தனிலிறங்கி
களித்து மகிழ்ந்து கையில்நீர் தான்திரட்டி
ஈசருட முடியில் இட்டுக் கரங்குவித்து
வாசமுடன் கயிலை வாழ்ந்திருக்கு மாமடவார்
மரகத வல்லி வள்ளி சலிகையெனும்
சரகதக் கன்னி சரிதை அரிமடவும்
எழு மடவும் எண்ணெண்ணு மிப்படியே
நாளு முறையாய் நடத்திவரும் நாளையிலே
மாலறிந்து கன்னிமுன்னே வந்தார் சன்னாசியென
ஏலறிந்து கன்னி இவரல்ல ஈசரென்று
சாய்ந்து விலகித் தையல்நல்லார் போகுகையில்
ஆய்ந்து தெளிந்த அச்சுதரு முன்னேகி
பலநாளு மீசுரர்க்குப் பாவையரே நீங்களுந்தான்
செலந்திரட்டி மேன்முடியில் செய்தீ ரனுஷ்டானம்
இனியெனக்கு நீங்கள் எல்லோரு மிக்கவந்து
கனிநீர்தனையு மெந்தலையில் கவிழுமென்றா ரெம்பெருமாள்
அப்போது கன்னி எல்லோரு மேதுரைப்பார்
எப்போதுந் தானாய் இருப்பவர்க்கே யல்லாது
மாயவர்க்கு மற்றுமுள்ள மயேசு ரர்தன்றனக்கும்
வாயமுள்ள வானவர்கோன் மறைமுனிவர் தன்றனக்கும்
எருதேறி நித்தம் இறவா திருக்குகின்ற
ஒருவனுக்கே யல்லால் ஊழியங்கள் வேறில்லையே
கேட்டுஸ்ரீ கிருஷ்ணரும் கிளிமொழியோ டேதுரைப்பார்
ஒட்டி லிரந்துண்ண ஊர்வழியே தான்திரியும்
ஆண்டிக்கே யல்லாது அரவணையி லேதுயிலும்
காண்டீபனுக் கேவல் கருதோ மெனவுரைத்தீர்
தோகையரே கங்கையினிச் சுருட்டுவ தைப்பார்ப்போம்
ஆகட்டு மென்று அச்சுதருங் கோபமுற்று
மேலோக மாயிருக்கும் வேதயேழு வுகத்தில்
சாலோக மான சத்திபர லோகமதில்
ஆருரூ மில்லாத ஆகாச சத்தியொன்றும்
சீருரூப மான சிவலோக மானதிலே
மெய்கொண்ட வானோர் வித்தொன்று ஆனதுவும்
வைகுண்ட லோகமதில் வாய்த்ததர்மி யானதிலே
தன்மியொரு வித்துத் தானெடுத்து வேதாவின்
சென்மித் தெடுத்தார் சிவயிருஷி யொன்றதிலே
தபோதனராய்ச் சண்டன் தன்னுகத்தில் வாழுவரில்
சகோதரரா யொன்று தானெடுத்தா ரம்மானை
சொர்க்கலோ கமதிலே ஸ்ரீராமர் தன்றனக்கு
பக்குவங்க ளாகப் பணிவிடைகள் செய்வோரில்
நல்லகுல மான நயனவித் தொன்றெடுத்து

வெல்லமர் கோன்வாழும் வெற்றிதெய்வ லோகமதில்
புத்தியுள்ள நாதன் பின்யுகத்தை யாளுதற்கு
சத்தியுள்ள வித்தொன்று தானெடுத்தா ரம்மானை
இப்படியே மேலோகம் ஏழு லோகமதிலும்
அப்படியே நல்ல ஆர்க்கமுள்ள வித்தேழு
எடுத்துத் திருமால் இருதயத்தி லேயடக்கிக்
கொடுத்துநின்ற தாதாவைக் குவித்துப் பதம்போற்றிக்
கன்னியுட கற்பதுக்குக் கருத்தேது செய்வோமென்று
உன்னி மனதில் ஒருமித்துப் பார்த்தனரே
பார்த்தனரே கற்பதுக்குப் பக்குவம்வே றில்லையென்று
தீத்தழலாய்ப் போகத் திருவுருவங் கொண்டனரே
பிரமா உபதேசம் பிறப்பு உருவேற்றி
குரமாய் வருணன் குளிரத் தொளிந்திடவே
காமத் தழலாய்க் கருமேனி யானதிலே
வேமக் கனல்போல் விழிகொழுந் திட்டெரிய
சாந்தணியுங் கன்னி தையல்தெய்வ மாமணிகள்
கூந்தல் விரித்துக் கூபந் தனிலிறங்கி
அரிஓம் எனவே ஆடிக் கரையேறி
தரிதோம் மெனவே சலக்கரையை விட்டவர்கள்
உயர வரவே உள்ளுதறத் துள்ளல்கொண்டு
அயரக் கரங்கால் அங்கமெல்லாந் தொங்கலிட
கிடுகிடெனத் தேகம் கிளிமொழிவாய் கொட்டிடவே
திடுதிடென அக்கனியைத் திரைபோல் வளையலுற்றார்
கன்னி யேழுபேரும் கனலை மிகஆவ
உன்னித் திருமால் ஓங்கார மோகமதால்
மங்கை யேழுபேர்க்கும் வயிற்றிலுற்ற தம்மானை
சங்குவண்ண மாலோன் தற்சொரூபங் கொண்டனரே
உடனே ஸ்திரீகள் உள்தரித்த பிள்ளைகளை
தடமேலே பெற்றுச் சஞ்சலித்து மாமடவார்
வெருவிப் பயந்து விழிமடவா ரெல்லோரும்
கருவிதொண்ணூற் றாறும் கலங்கியே தானோடி
துகிலை யெடுத்துடுத்துச் சுருட்டினார் கங்கைதனை
கையில் சலந்தான் கட்டித் திரளாமல்
கலங்கி யழுது கண்ணீர் மிகச்சொரிந்து
மலங்கி யழுது மண்ணிலவர் புரண்டு
அய்யோ பொருளை அறியாமல் விட்டோமே
மெய்யோடே குத்தி விழுந்தழுதா ரம்மானை

விருத்தம்

கனலைத் துணையா மென்றாவிக் கற்பை இழந்தோங் கன்னியரே
புனலைத் திரட்டப் பெலமின்றி புத்தி யழிந்தோம் பூவையரே
அனலைத் தரித்த அரன்முன்னே அங்கே சென்றால் பங்கம்வரும்
இனத்தைப் பிரிந்த மானதுபோல் இருப்போம் வனத்தி லென்றனரே.

விளக்கம்:

சப்த கன்னியரும் சான்றோர் பிறப்பும்

திருமால் துவாபர யுகம் முடிந்து ஸ்ரீரங்கம் நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, அரிகோண மாமலையின் வளமை மிக்கச் சிறப்பை கண்டார். தேவரிஷிகள் யோக நிலையில் தவம் செய்யும் அமிர்த கங்கைப் போல் காட்சிக் கொடுத்தது. அந்த புனிதமான மலையின் மேல் இருக்கின்ற அழகை எந்த விதமான கோணங்களிலும் வர்ணித்துச் சொல்லமுடியாது.

மனதிற்கு இனிய தேனான இனிப்பை ஊட்டும் சுவையைப் போல் கண்களுக்கு காட்சி தருகின்ற மா, பலா, கொய்யா, தாகம் தணிக்கும் இளநீர் தருகின்ற தென்னை மரங்களும், கமுகு நிறைந்தத் தோப்புகளும், ஆல மரங்களும், பூத்துக் குலுங்கும் பூஞ்சோலைகளும், மணமிகுச் சந்தன மரங்கள் எல்லாம் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து நிற்கின்றக் காட்சிகளும், வாழைக்குலைகளும், குளுமைத் தரும் மரச் சோலைகளும், தென்றல் வருடிச் செல்லும் நிழலால் ஏற்படுகின்றச் சுகமும், மனதிற்கு இன்பத்தைப் பெருக்கும். இத்தகைய அழகுமிக்கச் சோலையிலே, பறவைகளின் ஒலிகள், குயில்களின் கூக்குரல்கள்,மயில்களின் அகவல் ஓசையும், அவை ஆடி மகிழும் அழகு மனதைக் கவரும் படி இனிமைத் தருவதாக இருக்கும்.

சிறு பிராணிகளும், வண்டுகளின் ரீங்காரமும், அணில்களின் அலங்காரம் எல்லாம் பார்ப்பவர் கண்ணை பறிக்கும் வகையில் கைலாச பர்வதம் போல் காட்சியளித்தது. இன்னும் பக்தியைப் பெருக்கும் வகையில் அமர்ந்த பார்வதியும் சிவனும் கைலையில் அமர்ந்து இருப்பதுப் போன்று, அரிகோணமாமலையில் இருந்த ஆசனங்களின் அமைப்பு சிங்காரமாய் அமைந்து இருந்தது. தவ முனிவர்கள் எல்லாம் வைகுண்டத்தைக் கண்ட ஆனந்தத்தில் அச்சோலையில் அமர்ந்து இருப்பார்கள். இவ்வாறு சொர்க்க லோகத்தைப் போல் காட்சியளித்தது அரிகோணமாமலை.

இவ்வாறு இயற்கை வளங்களுடன் அமைந்த அரிகோணமலைக்கு ,கிழக்குத் திசையில் புட்டாபுரம் அமைந்திருந்தது.அமிர்த வனப்பூங்கா நேர் மேற்கானத் திசையில் அமைந்திருந்தது. திருமால் அமர்ந்திருக்கும் ஸ்ரீரங்கம் வடக்குத் திசையில் அமைந்திருந்தது. ஸ்ரீரங்கத்திற்குத் தெற்கே உள்ள மிக அடர்ந்த வனமாகிய அரிகோணமாமலைத் தெற்கு எல்லையாக அமைந்திருந்தது. அரிகோண மாமலையில் உள்ள அமிர்தவனம் இத்தகைய எல்கை அமைப்போடு தொடர்ச்சியாகக் கிழக்கு நோக்கி பரந்திருந்தது.

இத்தகைய சிறப்பு பெற்ற இந்த அயோக அமிழ்தக் கங்கையிலே உள்ள கன்னிமார்களாகிய மரகதம், வள்ளி, வல்லி, சரகதம், சரிதை, அரிமடவு என்ற ஏழு சப்தக் கன்னிமார்களும் சேர்ந்து அயோக அமிழ்த கங்கையில் நீராடி ஆனந்தமாய் விளையாடி கழித்து கரையேறிச் செல்லும்போது கங்கை நீரைக் கையில் சுருட்டி எடுத்துச் சென்று கைலாச வாசனாகிய சிவப்பெருமானுடைய திருமுடிமேல் அபிஷேகம் செய்து சிவதரிசனம் செய்து வழிபடுவது வழக்கம். இப்படியே தினமும் நதியில் நீராடி புனிதப் பணிச் செய்து சிவ சிந்தனையோடு

அபிஷேகம் செய்துக் கொண்டிருந்த தேவக் கன்னிமாரிடம் சோதனைப் பார்க்கத் திருமால் ஆண்டியைப் போல் அவர்கள் முன்னே வந்தார்.

தேவகன்னியர் பார்க்கிறார்கள். இவர் ஒரு ஆண்டியைப் போல் தோன்றுகிறார். ஆனால் இவர் சிவபெருமான் இல்லை என்று கன்னியர்கள் ஒரு பக்கம் ஒதுங்க, மாயத் திருமால் , அவர்களின் மனநிலையை அறிந்துக் கன்னிமார்களிடம், நீங்கள் தினமும் ஈஸ்வரபெருமானுக்குத் தானே பணிவிடைச் செய்ய அமிர்த கங்கையைக் கையில் திரட்டிய கனகாபிஷேகம் செய்து வருகிறீர்கள். இனிமேல் அந்தப் பணியை எனக்கு செய்தால் என்ன? என்றார் திருமால். இனிமேல் அந்தப் பணியை எனக்குச் செய்ய வேண்டும் என்றார்.

கங்கை நீரை எனது தலையில் இட்டு, அபிஷேகம் செய்யுங்கள் என்று பண்டாரக் கோலத்தில் இருந்த நாராயண மூர்த்தி கூறிய உடன், தெய்வ கன்னியர்கள் , திகைப்புற்று, எங்கள் தெய்வ நிலையில் எந்த மாற்றமும் இல்லாமல் சக்தியான சிவபெருமானுக்குத்தான் நாங்கள் தொண்டுச் செய்வோமே அல்லாது மாயப் பெருமாளுக்கோ மகேசுவரனுக்கோ, இந்திரனுக்கோ, பிரம்மனுக்கோ. பணிச் செய்யமாட்டோம். அப்படி இருக்க, ஆண்டியைப் போல் காட்சி தரும் பண்டாரத்திற்கு நாங்கள் ஏவல் வேலைச் செய்யமாட்டோம் என்றார்கள்.

இதை கேட்ட பெருமான் கோபம் கொண்டு, நீங்கள் அமிர்தக் கங்கையை எப்படிக் கையில் திரட்டிக் கொண்டுச் செல்வீர்கள் என்று நானும் பார்க்கிறேன் என்று சவால் விட்டு கூறினார். இந்த தெய்வக் கன்னியர்களின் ஆணவத்தை அடக்கும் வழி என்ன என்று தியானித்துப் பார்த்தார். கன்னியர்களின் ஆணவத்தை அடக்கும் வழி என்ன என்றால், அவர்களின் கற்பை இழக்கச் செய்வதுதான். அதை விட வேறு வேதனைத் தரும் வலி பெண்ணுக்கு இல்லை என்று நினைத்து ,அக்கினியாகக் காட்சி கொடுத்துப் பாடம் புகட்டவேண்டும் என்று முடிவு எடுத்தார்.

பின்னர், ஏழு லோகங்களிலும் உள்ள,சக்தி வாய்ந்த அபூர்வ சக்திகளைக் கொண்ட ஆக்கபூர்வமான ஏழுவித்துக்களைத் தெரிந்து எடுப்பதற்காக, பரலோகம், தேவலோகம், சொர்க்கலோகம்,சிவலோகம், வைகுண்டலோகம், சத்தியலோகம், எமலோகம்,ஆகிய ஏழு லோகத்திலும் இருந்து தர்ம சிந்தனை கொண்ட உயிர்களின் வித்து ஒன்றும், சத்திய லோகத்தில்,பிரம்மாவின் பண்பை உடைய சிவரிஷியின் வித்து ஒன்றும், எமலோகத்தில் இருந்து, அரக்ககுணம் கொண்ட அரக்கனின் வித்து ஒன்றும், சொர்க்கலோகத்தில் ஞான அறிவோடுக் கூடிய வித்து ஒன்றும், என ஏழு லோகத்து வித்துகளையும் எடுத்து சப்தமாதர்களாகியத் தெய்வக் கன்னியர்களின் வயிற்றில் பிறவிச் செய்ய வேண்டும் என்று வேண்டினார். திருமால் நினைத்தபடி முடிவு எடுத்து சிவனை பணிவோடுத் தியானித்து அவர் நினைத்ததைத் தெரிவித்தார். அப்படியே சிவனாரும் ஒத்துக் கொண்டார்.

இந்த மாயவனின் சூழ்ச்சியை அறியாத,தேவ கன்னியர்கள்,ஏழு பேர்களும் சாதாரணமாக நீரால் குளிர்விப்பதற்காக தலைமுடியை அவிழ்த்து விட்டு கங்கையில் இறங்கினார். என்றைக்கும் போல் மன மகிழ்ச்சியுடன் ஆனந்தமாக

நதியில் விளையாடி ஜலக்கிரீடைப் புரிந்தார்கள்.அப்போது நாராயண மூர்த்தி மழையையும், குளிரையும் அங்கே உருவாக்குகின்றார்.

உடனே தண்ணீரில் நன்றாக நீராடியதால் குளிர் அதிகமாகி ஏழு பேரும் நடுங்கும் நிலையைக் கொடுக்கும் படி ஏற்பாடுச் செய்தார்கள். உடனே, நாராயணர் பெரு நெருப்பாய் காட்சி கொடுத்தார். குளிர் தாங்கமுடியாமல் நெருப்பாக நின்ற திருமாலை ஆவிப் பிடித்தார்கள். ஓமக்குண்டம் ஜொலிப்பதுபோல் , அக்கினி ஜ்வாலையாகிய ஒளியில் நாராயணருடைய கண்கள் காணப்பட்டது. குளிரில் நடுங்கியப் பேதைபெண்கள் ஏழு பேர்களும் அக்கினியை ஆரத்தழுவிக் குளிரைப் போக்கினார்கள். உடனே மாயப் பெருமாளும் ஆரத்தழுவிய ஏழு கன்னிமார்களையும், கடல் அலைப் போல் சுருட்டிக்கொண்டார்.

அக்கன்னியர்களின் வயிற்றில் கருவை உற்பத்திச் செய்ய பிரம்மாவிடம் உபதேசித்தார் மாயப் பெருமான். பிரம்மாவும் உருவேற்றினார். கன்னிமார்கள் ஏழுபேரும் குளிர் தாங்க முடியாமல் நெருப்பாக நின்ற திருமாலை ஆவிப் பிடித்துக் குளிரைத் தீர்த்து வெப்பத்தை அனுபவித்து இருக்கையில், திருமால் தன்னுடைய உயர்ந்த நிலையில் ஏழுப் பேர்கள் வயிற்றிலும் கருவை உருவாக்க செய்தார். திருமால் தன்னுடைய உண்மை உருவைக் காட்டிக் காட்சி கொடுத்தார். திருமாலுக்கு மனைவியாகிய கன்னிமார்கள் ஏழுபேரும் தன் வயிற்றில் கருவுற்ற பிள்ளைகளை பெற்றார்கள்.

ரிஷி கர்ப்பம் காலம் கடராமல் உடனே ஜனனமெடுக்கும் என்பதுபோல் அமிர்த கங்கையின் கரையில் குழந்தைகளைப் பெற்றெடுத்தார்கள். கன்னிமார்கள் தாய்மை அடைந்த கண்டு மனம் நொந்து போனார்கள். சஞ்சலப்பட்ட இவர்கள் ஏழுப் பேரும் கைலாயத்திற்குச் சென்று விட எண்ணி அமிர்த கங்கை நீரை வழக்கமாக கையில் திரட்டி உருட்டிக் கொண்டு சிவ பூஜைக்கு செய்ய செல்ல முற்பட்டு கையால் சுருட்டு முயற்சி செய்தபோது தண்ணீரானது பந்து போல் சுருண்டு வராமல் போய்விட்டது.

மெய்ப்பொருளை அறியாமல் அறிவுக் கெட்டுக் குளிரை குறைக்க நெருப்பைக் கட்டிப் பிடித்துக் கற்பை இழந்து நிற்கின்றோம். நீரைத் திரட்டும் ஞான அறிவை இழந்து விட்டோம். சிவபெருமானிடம் சென்றால் அவமானம் என்று ஏக்கம் உற்றார்கள் .சப்த கன்னியர்களின் உடலானது தோற்றத்தில் மாறுதல் ஏற்பட்டு மார்பகங்கள் விகாரம் அடைந்த தாய்ப்பால் சுரக்கலாயிற்று. இனி நாம் எல்லோரும் கற்புநெறி தவறியதால் கைலாயம் செல்ல முடியாது என்று ஒருவர்க்குகொருவர் முகம் நோக்கி உருகினார்கள்.

## அம்மைமார் தவம்

கைலாயம் செல்ல முடியாதக் கன்னிமார்கள் 7 பேரும் சிவபெருமானை நினைத்து தவம் நிலையில் நின்றார்கள். சிவமே சிவ பொருளே நாங்கள் செய்த பாவத்தை மன்னித்து எங்களை தந்திரமாக கற்பழித்து சென்ற மாயப் பெருமானே எங்கள் ஏழு பேர்களை மனைவியாக ஏற்றுக் கொண்டு திருமணம் செய்ய வேண்டும் ஈஸ்வரரே! நீரே எங்களுக்கு வரம் தந்து காப்பாற்ற வேண்டும் என்று தவம் இருந்தார்கள். நாங்கள் பெற்றப் பிள்ளைகளையும், எங்களையும்

மாய பெருமான் அவரோடு சேர்த்துக் கொள்ள வேண்டும். எங்கள் பிள்ளைகளை உலகத்தை ஆளச் செய்ய வேண்டும் என்று திருமாலை அடைய சிவனை நோக்கி தவம் இருந்தார்கள். திருமால் அருளால் பெற்ற பிள்ளைகளை போட்டுவிட்டு கைலாயம் செல்லாமல் வந்து தென்திசை நோக்கி தவம் இருந்தார்கள்.

## DAY 39

அம்மைமார் தவம்

கன்னியர்கள் மேனி கனிந்து மினுமினுத்து
மின்னித் தனங்கள் மிகுபால் சுரந்திடவே
கற்புக் குழறி கயிலையுக மானதற்கு
அற்புத வேள்கங்கை அவர்நினை வில்லாமல்
எல்லோரு மிக்க ஈசுரரைத் தானினைத்து
வல்லோனே யென்று வரம்பெறவே நின்றனராம்
நின்றார் தவத்தின் நிலைமைகே ளம்மானை
இன்றெங்கள் கற்பை ஈடழித்த மாமுனிவர்
வந்தெங்கள் தம்மை மாலையிட வேணுமென்று
பந்துத் தனமின்னார் பாவையேழு பேரும்
ஈசுரரே தஞ்சமென இருந்தார் தவசதிலே
மாசொன்று மில்லா மாத ரேழுபேரும்
தெற்கு முகமாய்த் தேவி யேழுபேரும்
மிக்கத் தவசு மிகப்புரிந்தா ரம்மானை
கற்பழித் தெங்கள்கையில் கன்னிதிர ளாமல்வைத்தோர்
பொற்பாத முண்டெனவே பூவை தவசுநின்றார்
பாலிளகி நல்லமிர்தம் பாலாறா யோடிடவே
காலிளகா வண்ணம் கடுந்தவசு செய்தனரே
பிள்ளை யேழுபேரும் பெற்றுப் பெருகிடவும்
கள்ளஞ்செய்த மாமுனிவர் கைப்பிடிக்க எங்களையும்
மக்களையு மெங்களையும் மாமுனிவர் வந்தெடுத்து
ஒக்க வொருமித்து உலகாள வைத்திடவும்
நின்றார் தவசு நேரிழைமா ரெல்லோரும்
நன்றான மாமடவார் நாடித் தவசிருக்க
பிறந்த பிள்ளைதன்னுடைய புதுமைகே ளன்போரே
அறந்தழைக்கும் நாரா யணர்மக வாகியதோர்
சான்றோர் பிறந்ததுவும் தரணியர சாண்டதுவும்
வேண்டும் பெரிய விருதுவகை பெற்றதுவும்
அய்யா உரைக்க அடியே னதையெழுதி
மெய்யான போத மேலோர்கள் முன்பதிலே
அன்பான இந்த அகிலத்திரட் டம்மானை
தன்போத மாயிருந்து தாழ்மையுடன் கேட்டவர்க்குக்
கன்மமுதல் சஞ்சலங்கள் கழியுமென் றெம்பெருமாள்
உண்மையுள்ள லட்சுமிக்கு உபதேசமா யுரைத்தார்

இப்படியே பிள்ளைதனை ஈன்றபின்பு கன்னியர்கள்
அப்படியே சென்று அவர்போய்த் தவசிருக்க

திருமால் அமுதளித்தல்

பிள்ளை களைப்போட்டுப் புண்ணியனார் போகாமல்
வள்ளலந்த மாலும் மதலை தனையெடுத்து
ஆரிடத்தி லிம்மதலை அடைக்கலமாய் வைப்போமென்று
விசாரித்து நன்றாய் விசாரமுற்றா ரம்மானை
தெய்வேந்திரன் பசுக்கள் திரைமேயக் கண்டவரும்
கையதிலே சீங்குழலைக் கனிவாயில் வைத்திருத்தி
நிரைவா வெனவே நியமித்தங் கூதிடவே
அரை நொடியிலாவு அங்கொன்று மில்லாமல்
அங்குவந்து மாயனிடம் அழைத்ததென்னக் கேட்டிடுமாம்
சங்குதனில் பாலுமிழ்ந்து தாருமென்றா ரெம்பெருமாள்
பாலுமிழ்ந் தாவு பலநாளும் பாலருக்கு
நாலொருநாள் மட்டும் நடந்துவரும் வேளையிலே
கன்றுக்குப் பாலு காணாமல் மேய்ப்போர்கள்
அன்றுமே இந்திரர்க்கு அவ்விசனம் சொல்லிடவே
ஏதென்றெனப் பார்த்து இயல்பறிந்து வானவர்கோன்
தானறியச் சொல்லிச் சண்டையிட வந்தனனே
வந்தவனுக் கெதிரே மாமுனிவன் சூலமதை
இந்தாப்பா ரென்று எறிந்தா ரவன்பயந்து
ஆரோ வெனப்பயந்து அயிராவதத் தோனும்
போரொல்கிப் போனான் பொன்னுலோ கந்தனிலே
நல்லதென மாமுனியும் நளின முடன்மகிழ்ந்து
செல்லமக வான சிறுவர் தமைவளர்க்க

## திருமால் அமுதளித்தல்

கன்னிமார்கள் தங்களுடைய பிள்ளைகளை விட்டு சென்றப் போது திருமால் குழந்தைகளைப் பாதுகாக்க யாரிடத்தில் ஒப்படைக்கலாம் என்று யோசித்தார். குழந்தைகள் பசியால் அழுவதைப் பொறுக்க முடியாத மாயப் பெருமான், தேவ லோகத்து இந்திரனின் பசுமாடுகள் மேய்வதைக் கண்டு, தன் புல்லாங்குழலை இசைத்து பசுக்களை ஒன்று சேர்த்தார், புல்லாங்குழலின் இன்னிசையிலேபசுக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்ததும் மாயன் தன்னுடைய கையிலிருந்தச் சங்கில் பாலை எடுத்து குழந்தைகளுக்கு பாலூட்டினார்.

இப்படியாக ஒவ்வொரு நாளும் தெய்வேந்திரன் பசுக்களின் பாலை எடுத்து குழந்தைகளுக்குப் பாலூட்டி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக குழந்தைகள் வளர்ந்து வரும் போது, பசுவினுடைய கன்றுகளுக்கு பால் இல்லாமல் போனதால், தெய்வேந்திரன் மாடு மேய்பவர்களிடம் இதற்குரியக் காரணம் என்ன என்று, பார்த்து வரக் கூறினார். கன்றுகளுக்கு பால் இல்லாமல் போய்விட்டதால் பசு மாடு மேய்க்கும் ஏவலர்கள் பார்க்க வருகின்றப் போது, மாடுகள் பாலைக் குழந்தைகளுக்குக் கொடுப்பதை

தேவேந்திரனிடம் சென்று விவரமாக எடுத்துரைத்தார்கள். தேவேந்திரன் கோபம் கொண்டான்.

தேவேந்திரன், திருமால் என்ற நிலையை மறந்து போருக்கு வந்தான். ஆனால் மாயப் பெருமாள் இந்திரனை எதிர்த்து தன் கையிலிருந்த சூலத்தை எடுத்து வீசினார், சூலாயுதத்தை கண்ட தேவேந்திரன் எதிர்த்து சண்டையிடாமல் ஒதுங்கிக் ஓடிப் போய் விட்டார். மேலும் திருமால் பிள்ளைகளை பாதுகாக்க யாரை அழைக்கலாம் என்று யோசித்து எல்லா சக்திகளையும் பெற்று வடக்கே இருக்கின்ற இமயமலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் வடபத்ரகாளி எல்லா வல்லமையும் பெற்றவள் அவளை அழைக்கலாம் என்று எண்ணம் கொண்டார்.

# DAY 40

காளி வரவு

மாகாளி யென்ற வடபத்தி ரகாளி
ஓகாளி யென்ற உயர்ந்த பெலக்காரி
பெண்ணல்லப் போர்க்குப் புருடர்மிகப் போராது
விண்ணவரும் மண்ணவரும் விறுமாவும் போராது
அப்படியே துஷ்ட ஆங்கார மாகாளி
இப்படியே நன்றாய் இவளிருக்கும் நாளையிலே
ஆணொருவர் தன்னால் அழியா வரங்கள்பெற்ற
தாணொருவன் தனையும் சத்தி உமைதனையும்
கெணியா வரங்கள்பெற்றுக் கீழுமே லுமடக்கித்
துணிவாகத் தேவர்களைத் தூளிபட ஏவல்கொண்டு
தேட்ட முடனேழு செகல்கடந் தப்புறத்தில்
கோட்டை யதிட்டுக் குறும்புசெய் தாண்டனனே
தேவர்கள் சென்று சிவனார்க் கபயமிட
மூவரு மொத்திருந்து மழுதும் விசாரமிட்டார்
ஆணாலே தக்கனையும் அழிக்கவகை யில்லையிங்கே
பூணாரம் பூண்ட புட்டா புரக்காளி
காளி படையும் கமண்டலத்தில் சென்றதுண்டால்
தூளிபடத் தக்கன் சிரசறுப்பா ளென்றுமிக
மாலுரைக்க ஈசுரரும் மறையோருஞ் சம்மதித்து
வேலுகந்த காளிதனை விளித்தார்கா ணம்மானை
உடனறிந்து மாகாளி உடையோன் பதம்பணிந்து
வடவாக் கினிமுகத்தாள் வருத்தினதே னென்னையென்றாள்
தக்கன் தலையறுத்துச் சங்காரஞ் செய்திடவே
மிக்கநீ போவெனவே விடைகொடுத்தா ரீசுரரும்
விடைவேண்டி காளி விமல னடிபோற்றிப்
படைக்காரி பின்னுமொன்று பரமனோ டேகேட்டாள்
என்னோ டுதவி இயல்படையாய்த் தான்வரவே
வன்னப் புதல்வர் வகிருமென்றாள் மாகாளி
அப்போது ஈசுரரும் ஆங்காரியை நோக்கி

கற்போடு வொத்த கன்னியே வுன்றனக்கு
பெண்ணா ணுமில்லாப் பெரிய பெலக்காரி
கண்ணான காளி காரிகையே நீகேளு
தரித்துப் பிறக்கத் தகாதே மாகாளி
மரித்துப் பிறக்காத மாகாளி யேயுனக்கு
விடையா யொருவசனம் விரிக்கக்கே ளொண்ணுதலே
படைக்காகப் பாலர் பச்சைமால் தாவெனவே
தவசு மிகப்புரிந்தால் சங்குசரத் தாமன்
விபுசு தனிற்பிறந்த வீரரேழு பேர்களையும்
உன்னை யழைத்து உன்கையி லேதருவார்
முன்னே தவசு மிகப்புரியப் போவெனவே
அரனார் விடையும் அருளி மிகக்கொடுக்கப்
பரமான தேவி பச்சைமால் தன்றனைத்தான்
நினைத்துத் தவசு நெடுநாளாய் நின்றிடவே
அனைத்துயி ருங்காக்கும் அச்சுதருந் தானறிந்து
மக்களேழு பேர்களையும் மாகாளி கைக்கொடுக்கக்
கொக்கரித்துக் காளி கொண்டாடித் தான்மகிழ்ந்து
வாங்கு மளவில் மாமுனியைத் தானோக்கி
தாங்கிநின்று பாதத்(து) அடிதாழ்ந்து ஏதுசொல்வாள்
வேத முனியே வித்தைக் கருத்தோனே
மாதவங்கள் கற்ற மாமுனியே யிம்மதலை
ஆனோர்க்கு நாமம் அருளிநீர் தாருமென்றாள்
வானோர்கள் போற்றும் மாமுனியுந் தான்மகிழ்ந்து

விளக்கம்:

காளி வரவு

பத்ரகாளி மிக வல்லமை கொண்டவள். தேவ கணங்களும் அவளிடம் போரிட்டு வெற்றி பெற இயலாது. ஆகையால் இந்த குழந்தைகளை பாதுகாக்க ஓம் பத்ரகாளியே உயர்ந்த நிலையை பெற்றவர் என்று முடிவெடுத்தார். மாகாளி என்ற வடபத்ரகாளி அவள் மிகவும் பலம் கொண்டவள் மேலோகத்தில் உள்ளவர்களும் பூலோகத்தில் உள்ளவர்களும், திருமாலும் கூட இவளோடு எதிர்த்துப் போரிட முடியாத வல்லமை உடையவள் இந்த பத்திரக்காளி அம்மை ஆவார்.

இந்த காலகட்டத்தில் தக்காபுரத்தை ஆண்டுகொண்டிருந்தத் தக்கன் என்ற பெயரை உடைய வல்லமை உடைய அரக்கன், ஆண்களாலும், எந்தச் சக்தியாலும் தனக்கு அழிவு இல்லை என்ற ஆணவத்துடன் பலவிதமான வரங்களைப் பெற்ற ஆண்டு வந்தான். ஏழு கடல்களையும் அடக்கிய கோட்டை அமைத்து தேவர்களை கொடுமைச் செய்தான். தேவர்கள் எல்லோரும் தக்கன் செய்த கொடுமைப் பொறுக்க முடியாமல் சிவபெருமானை நோக்கி அபயமிட்டார்கள். தேவர்களின் அபயத்தைக் கேட்டு, சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகிய மூவரும் சேர்ந்துத் தக்கனை அழிக்கத் திட்டமிட்டார்கள்.

திருமால் மாகாளியின் பெருமையையும், வீரத்தையும் பற்றி சொன்னார் புட்டாப்புரத்தில் இருக்கின்ற காளி தன்னுடைய படைகளுடன் தக்கன் இருக்கும் இடத்திற்கு சென்றால் அவன் தலையை அறுத்து விடுவாள் என்று சொன்னார். திருமால் காளியின் வீரத்தைப் பற்றி சொன்னவுடன், சிவனும், பிரம்மாவும் சம்மதித்தார்கள். ஆகையால் இமயமலையிலிருந்து துர்கா தேவி ஆகிய காளியை வரவழைக்க எண்ணினார்கள். திருமாலும், சிவனும் தன்னை நினைப்பதை அறிந்து, நெருப்பு போன்ற பார்வையைக் கொண்ட சிவபெருமானின் பாதங்களை தொழுது என்னை அழைத்த காரணம் என்ன என்று வணங்கி நின்றாள்.

சிவபெருமான் தன்னை வணங்கிய காளியிடம், தக்கன் என்ற அரக்கன் மிகவும் கொடுமைகள் செய்வதால் துன்பம் பொறுக்கமுடியாத தேவர்கள் அபயமிடுகிறார்கள். ஆகவே அவன் தலையை அறுத்து எடுத்து தவிடுப் பொடியாக்க வேண்டும். ஆண்களால் அழிவு இல்லை என்ற ஆணவம் கொண்டுள்ளான். ஆகவே உன் பலத்தால் தண்டனை அளிக்க வேண்டும் என்றார்.

உடனே மாகாளி சிவனிடத்தில் தக்கனை அழிக்க வேண்டுமானால் எனக்கு பெரும் படையும், என்னை பாசத்தோடு அழைக்க ஒரு வீரமுள்ள மகனும் வேண்டும் என்று கேட்டாள். அது கேட்ட சிவன், உன்னுடைய படையை வழி நடத்தவும், உன் துணைக்காகவும் புதல்வர்கள் வேண்டும் என்று பச்சைமால் நாராயணனிடம் கேள் என்று, சிவபெருமான் அந்த மகா காளி தேவியிடம் கூறினார். உடனே திருமாலுடைய தெய்வத் தன்மையால் பிறந்த சிறந்த வீரர்களான ஏழு ஆண் பிள்ளைகளையும் உனக்கு சொந்தமாக தந்து விடுவார் என்று கூறினார். இப்படி சிவபெருமான் மாகாளிக்கு அனுமதி கொடுத்து திருமால் அருள் கொடுக்கும் படி வரமும் கொடுத்தார். உடனே பராசக்தியான காளி தேவி மனதில் மிகவும் ஆசையோடு நாராயணரை நினைத்து தவ நிலையில் இருந்தார். திருமால் காளி தேவியின் தவத்தை அறிந்து தன்னுடைய , ஏழு பிள்ளைகளையும் வளர்க்கும் படி ஒப்படைத்தார்.

## DAY 41

சான்றோர்க்கு நாமம் அருளல்

உள்ளதுதா னென்று உடனே மனமகிழ்ந்து
வள்ளல்சிவ னாரறிந்து மறைவேதனை யழைத்து
முப்பத்து முக்கோடி முனிவரவர் தங்களையும்
நாற்பத்து நாற்கோடி நல்ல ரிஷிகளையும்
தேவர் முதலாய்த் தேவேந் திரன்வரையும்
மூவ ரறுவர் உள்ளோரையு மழைத்து
கிணநாதர் வேதா கிம்புருடரை யும்வருத்தி
குணமான தந்தி குமரனை யும்வருத்தி
சத்தி உமையும் சரசுவதி பார்பதியும்
எத்திசையும் வானோர் எல்லோரை யும்வருத்தி

சங்கமது கூடி சாஸ்திரங்கள் தானோதி
மங்கள வாத்தியங்கள் மடமடென நின்றதிர
இப்படியே சங்கம் எல்லோருந் தான்கூடி
அப்படியே தானிருக்க அருளுவா ரச்சுதரும்
பிறந்தபிள்ளை யேழதுக்கும் பேரிட வேணுமென்று
அறந்தழைக்கு மீசர்முன் அவர்வைத்தா ரம்மானை
அப்போது ஈசுரரும் அன்பா யகமகிழ்ந்து
இப்போது மாயவரே எல்லோருக் கும்போதுவாய்
நீர்தானே நாமம் இட்டா லதுபோதும்
பார்தா னளந்த பாலவண்ணா வென்றுரைத்தார்
கார்வண்ணருங் கேட்டுக் கறைக்கண்ட ரோடுரைப்பார்
தார்வண்ணரே முதற்பேர் தானுரைக்க வேணுமென்றார்
நல்லதுதா னென்று நாட்டமுற்று ஈசுரரும்
வல்லவனே உன்னாத விந்தில்வந்து தோன்றினதால்
தோணாப் பொருளைத் தொடர்ந்துகண்ட மன்னவர்க்கு
சாணா ரெனநாமம் சாற்றினா ரீசுரரும்
முதற்பேர்தா னீசர் மொழிந்தபின்பு வேதாவும்
மதமான விந்து மாயமுனி சேயதற்கு
சான்றோ ரெனநாமம் சாற்றினார் வேதாவும்
ஆண்டா ரிதுவுரைக்க அச்சுதரும் பின்சொல்லுவார்
நாடாள்வா ரென்று நாமமிட்டார் பாலருக்கு
தாடாண்மை யுள்ள சத்தியங் கேதுரைப்பாள்
அண்ணர் விநோதமதில் அவதரித்த பிள்ளைகட்கு
வண்ணமுள்ள பேரு வாழ்த்தி விடைகொடுப்பாள்
எங்கும் புகழ்பெற்று இராஜபட்டந் தான்சூடும்
சங்குமன்ன ரென்று தானுரைத்தாள் சத்தியுமே
பேறுபெற்ற பாலரென்று பிரிய முடன்மகிழ்ந்து
பார்பதி நாமம் பகருவா ளம்மானை
சென்றஇடம் வென்று சீமைகட்டித் தானாண்டு
மண்டலங்கள் தோறும் வரிசைபெற்று வாழ்ந்திருக்கும்
பொற்பமுடி மன்னரென்று பேரிட்டாள் பார்பதியும்
கற்பகத்துக் கொத்த கன்னி சரசுவதியும்
வெள்ளானை வேந்தரென்று வெண்டாமரை யுரைத்தாள்
பிள்ளையார் தானும் பிரியமுடன் மகிழ்ந்து
நன்றான வீர நகுலவேந் தரெனவே
அன்றானை முகத்தோன் அருளினர்கா ணம்மானை
சண்முகனுந் தான்மகிழ்ந்து தவலோக மன்னரென்று
விண்ணுகமு மெய்க்க விளம்பினர்கா ணம்மானை
வானோர்கள் வேத மாமுனிவர் தாமகிழ்ந்து
தானான மாயவனார் தான்பெற்ற பாலருக்குத்
தர்மகுல வேந்தரென்று சாற்றினா ரம்மானை
கர்மமில்லாத் தேவர் கரியமால் பாலருக்கு
மெய்யுடைய பாலர் மென்மேலும் வாழ்ந்திருக்க
தெய்வகுல மன்னரென்று திருநாம மிட்டனரே
வீரியமாய்ச் சூரியனும் வெற்றிமால் பாலருக்குச்
சூரியகுல வேந்தரென்று சொன்னார்கா ணம்மானை

வாசவனுந் தான்மகிழ்ந்து மாயனுட பாலருக்கு
வீசவிசைய வேந்தரென்று நாம மிட்டார்
இப்படியே நாமம் இவர்மொழிந்த தின்பிறகு
கற்புடைய சன்னாசி கருத்தாக வேயுரைப்பார்
நாட்டுக் குடைய நாதனுட கண்மணிக்குக்
காட்டுரா சனெனவே கருத்தாக நாமமிட்டார்
இப்படியே ஈசர்முதல் எல்லோரும் நாமமிட்டு
அப்படியே பிள்ளைகட்கு அவரவரே காப்பணிந்து
சத்தி யுமையும் சரசுவதி பார்பதியும்
எத்திசையு மெய்க்க எடுத்து தாராட்டுவாராம்
அமுதமது சேனையிட்டு எல்லோரும் தாமகிழ்ந்து
குமுதமொழி மாதர் குரவையிட்டுத் தாமகிழ்ந்து
அண்டர் முனிவோர் எல்லோரும் பார்த்திருக்க
தண்டாமரை மாது தாலாட்ட வுத்தரித்தாள்

சான்றோர்களுக்கு நாமம் இடுதல்

விளக்கம்:

மாகாளி மகிழ்ச்சியோடு குழந்தைகளை வாங்கும் போது பெருமாளின் பாதங்களை பணிந்து ஏழு குழந்தைகளுக்கு பெயர் சூட்டி தரவேண்டும் என்று கேட்டாள். திருமால் ஆனந்தம் கொண்டு, காளி சொன்னது மிகவும் சரியானது என்று, சிவபெருமானையும், வேத ஆகமங்களை கற்ற பிரம்மாவையும் அழைத்து, முப்பத்து முக்கோடி தேவர்களையும், ரிஷிகளையும் வரவழைத்து குழந்தைகளுக்கு பெயர் சூட்ட வேண்டும் என்று விவரம் சொன்னார்.

குழந்தைகளுக்கு பெயர் சூட்ட பூதகணங்கள், சிவகணங்கள், தெய்வ கணங்களாகிய அனைவரையும் அழைத்து, விநாயகர், முருகர் சான்றோரின் தாயாகிய லட்சுமி, சரஸ்வதி, பார்வதி ஆகிய எல்லோரையும் ஒன்று சேர்த்து வேத மந்திரங்கள் ஓத மேளதாளத்தோடு எனக்குள் உருவாகிய 7 பிள்ளைகளுக்கு பெயர் சூட்டி தர வேண்டும் என்ற ஆசையோடு சிவபெருமான் முன்னிலையில் திருமால் பணிவோடு சொன்னார்.

சிவபெருமான் ஆசையோடு உள்ளம் மகிழ்ந்தவராய்,சிவபெருமான் குழந்தைகளுக்குத் தகப்பனாக இருக்கின்ற நீர் முதலில் பெயர் சூட்டினால் தான் நன்றாக இருக்கும் என்றார். கரியமால் நாராயணன் அதைக் கேட்டு, ஆதியும், அந்தமும் இல்லா பரம்பொருளாகிய சிவபெருமான் நீர் தான் முதலில் பெயர் சூட்ட வேண்டும் என்றார். எல்லாம் நன்மைக்கே என்று மிகவும் அன்போடு அந்த இடத்தில் ஈஸ்வரர் எல்லா வல்லமையும் பொருந்திய கடவுளாகிய உம்முடைய இந்திரியத்தில் குழந்தைகள் உருவானாதால் தோணாதப்பொருளைத் (கண்ணுக்குப் புலப்படாத இறைச் சத்தியை தொடர்ந்து கண்டு கொள்ளும் பாக்கியத்தைப் பெற்றவர்கள் ) தொடர்ந்து கண்ட, மன்னவர்க்கு "சாணார்" என்றுப் பெயர் சூட்டினான் சிவபெருமான்.

முதல் பெயராக சிவபெருமானார் "சாணார்" என்ற பெயரை சூட்ட அடுத்து பிரம்மா , தன் கொள்கையில் எந்த மாற்றமும் இல்லாது ஞான அறிவு உள்ளவர்க்கு பிறந்த பிள்ளை என்பதால் “சான்றோன் “ என்ற பெயரைச் சூட்டி அறிவில் சிறந்தவனாக விளங்கட்டும் என்று வாழ்த்தினார். சிவனும், பிரம்மாவும் பெயர் சூட்டிய பிறகு திருமால் “நாடாள்வார்” என்ற நாமம் இட்டார். நாட்டு மக்களை இவர்கள் ஆட்சி செய்வார்கள் என்று வாழ்த்தினார்.

பார்வதி தேவியானவள் என் அண்ணனாகிய பச்சைமால் நாராயணருக்கு அற்புதமாக உருவான குழந்தைகளுக்கு “சங்கு மன்னர்” என்ற பெயரைச் சூட்டி திருமாலுடைய பிள்ளைகள் பாக்கியம் பெற்றவர்கள் என்று மனதார வாழ்த்தினார். மேலும் பார்வதிதேவி “பொர்ப்ப முடிமன்னர்” என்றும் அதாவது பொன்னாலான கிரீடத்தை அணியும் மன்னர்கள் என்றும், நீண்ட ஆயுளோடு வாழ்வார்கள் என்று வாழ்த்தினார்.

கல்விக்கு வித்தாகி கற்பக விருட்சமாக திகழும் சரஸ்வதி தேவியானவள் “வெள்ளானை வேந்தர்” என்றுப் பெயர் சூட்டி,தேவேந்திரனுடைய வெள்ளை யானைகள் மீது செல்லும் வீரர்களாக வீரம் பெற்றவர்கள் போல் திகழக் கலைமகள் வாழ்த்தினாள் .அடுத்து யானை முகம் கொண்ட ஞான முதல்வனான பிள்ளையார், வல்லமையோடு என்றும் அழியாத புகழ் கொண்ட “வீர நகுல வேந்தர்” என்று வாழ்த்திப் பெயர் சூட்டினார்.

ஆறுமுகம் கொண்ட அழகன் முருகன் இவர்களுக்கு தவலோக மன்னர் என்றுப் பெயர் சூட்டினார். மேலும் பூலோக மன்னர்களும் மேலோகத்தில் உள்ளவர்களும், வேதச் சாஸ்திரங்களைக் கற்ற மனிதர்களும், சந்தோஷப்பட்டு மாயப் பெருமானுடைய பிள்ளைகளுக்கு “தர்ம குல மன்னர்” என்றும், தர்மம் செய்வதில் இவர்கள் சிறந்து விளங்க வேண்டும் என்றும் வாழ்த்தினார்கள். மற்றுமுள்ள தேவர்கள் எல்லோரும், திருமால் உடைய பாலர்களுக்கு “தெய்வகுல மன்னர்” என்றும் தெய்வமாகிய திருமாலுக்கு பிறந்ததை உணர்த்தி இந்தப் பெயரைச் சூட்டினார்கள்.

அடுத்து வந்த சூரிய பகவான் வெற்றி வாகை சூடும் திருமால் குழந்தைகளுக்கு “சூரியகுல வேந்தர்" என்றும், இவர்கள் என்றென்றும் சூரியனை போல் மற்றவர்களுக்கு எல்லாம் விளக்காக விளங்க வேண்டும் என்று வாழ்த்தினார்.

இப்படி ஆகவே எல்லோரும் பெயர் சூட்டி பெயர் மகிழ்ந்திருக்கும் வேளையில், நாரதர் வந்து பூலோகத்தை பாதுகாக்கும் நாராயணனுடைய கண்ணின்மணி போன்றப் பாலர்கர்ளுக்கு, இவர்கள் காடுகளில் வாழ்கின்ற முனிவர்களுக்கும் ராஜாவாக திகழ வேண்டும் ஆகையால் “காட்டு ராஜா” என்றப் பெயரைச் சூட்டினார். பெயர் சூட்டிய நாரதர் இவர்கள் நீடூழி வாழவேண்டும் என்று வாழ்த்திக் குழந்தைகள் ஏழுப் பேருக்கும் காப்புரிமையும் கொடுத்தார்.

இவ்வாறு தெய்வ குலதெய்வ குடும்பத்தார் அனைவரும் ஒன்றுகூடி ஒவ்வொருவரும் ஆளுக்கொருப் பெயரிட்டு ஆனந்தம் கொண்டு, பெண்கள் குலவை ஒலிக்க, மங்கள மேளம் முழங்க, சங்கு நாதத்தோடு, தாளங்களும் இசைக்க, சங்கீத ஓசை முழங்கி நிற்க, திருமகள் லட்சுமியும், மலை மகள்

பார்வதியும், கலைமகள் சரஸ்வதியும், முப்பெருந்தேவியராகிய மூவரும் , ஆனந்தமாக மகிழ்ந்து குழந்தைகள் ஏழுப் பேருக்கும் அமிர்தத்தில் தேனைக் கலந்துச் சேனை ஊட்டிச் சிறப்பித்தார்கள். அந்தப் பேரானந்தத்தில் கலைவாணியாகிய சரஸ்வதி குழந்தைகளுக்கு முறையாக தாலாட்டுப் பாடுகிறாள்.

## DAY 42

சரஸ்வதி தாலாட்டு

வைகுண்ட கண்ணோ வரம்பெற்ற மாதவமோ
கைகண்ட வித்தை கருத்தறிந்த உத்தமரோ
தங்கமுடி பெற்றவரோ சங்குமுடி காவலரோ
வங்கம்நிசங் கண்ட மங்காத சான்றவரோ
சிங்கமுகத் தண்டிகையும் சிலம்புனைந்த ரத்தினமும்
சங்கக் கொடிவிருது சங்குரட்டை பெற்றவரோ
முத்துச் சிலாப முதலாளி யானவரோ
கொத்துமுங்கை யாபரணம் கொடிவிருது பெற்றவரோ
மூலப்பொருள் கண்ட முதற்சாதி யானவரோ
தாலம்பா லுண்டு தானிருந்த மன்னவரோ
நடைக்கா வணங்களிட்டு நல்லதீ வெட்டியுடன்
படையோடே வீற்றிருக்கும் பாரமுடி மன்னவரோ
வெள்ளானை மேலே வீதிவலஞ் சுற்றிவந்து
துள்ளாடி சிங்கா சனம்வீற் றிருப்பவரோ
பூதமது பந்தம் பிடித்துமுன்னே தான்வரவே
நாதமிரட் டையூதி நாடாளு மன்னவரோ
எக்கா ளமூதி இடமடம் மானமுடன்
மிக்கான சீமையெங்கும் மேவிவரு மன்னவரோ
வாரணங்கள் கட்டி வையகத்தைத் தானாண்டு
தோரணங்கள் நாட்டிவைத்த தெய்வத்திருச் சான்றவரோ
கர்மம தில்லாமல் களிகூர்ந் திருப்பவரோ
தர்மமுடி பெற்றவரோ சாஸ்திரத்துக் குற்றவரோ
உடற்கூறு சத்தி உயிரோ டுதித்துவந்த
சடக்கூறு மூலச் சட்டமது கொண்டவரோ
கல்விக் குகந்த கருணாகர ரானவரோ
செல்விக் குகந்த சென்மமது கொண்டவரோ
தேவர்க்கும் வானவர்க்கும் திருப்பதிக ளாவதற்கும்
மூவர்க்கு முதவிசெய்து உதித்துவந்த கற்பகமோ
சென்ற இடமெல்லாம் சிறப்புவெகு மானமுடன்
மண்டலங்கள் மேய்க்க வாழுகின்ற சான்றவரோ
சாணா ருக்குள்ளே சர்வது மேயடக்கிக்
கோணாத மாயன் குருக்கொடுத் தீன்றகண்ணோ
அறிவுஞா னத்தோடும் ஆதிப் பிறவியோடும்
செறியுங் கலையோடும் செடமெடுத்த சான்றவரோ
துட்டரென்ற பேரைச் சூரசங் காரமிட்டுக்

கொட்டமிட்டுக் கோட்டை கொடிவிருது பெற்றகண்ணோ
ஆண்டிருக்கு மன்னவரோ அச்சுதரின் பாலகரோ
தாண்டி வரம்பெற்றுத் தரணியர சாண்டவரோ
பாண்டவரோ ஆண்டவரோ பாலவண்ணர் பெற்றெடுத்த
சான்றவரோ ராராரோ தழைத்திருக்க ராராரோ

விருத்தம்

தங்கமணியோ நவமணியோ சலத்தில்விளைந்த தரளமுதோ
சிங்கக்கொடிகள் பெற்றவரோ சீமையடக்கி யாண்டவரோ
துங்கவரிசை பெற்றவரோ திருமால்விந்தி லுதித்தவரோ
சங்கமகிழ வந்தவரோ சான்றோர்வளர ராராரோ

## DAY43

கற்பகத்தரு

நடை

சந்தோ சமாகச் சரசுவதி தாலாட்டி
வெந்தோச மெல்லாம் விலகவே நீராட்டி
வைகுண்ட மூர்த்தி மாமுனிதன் கைக்கொடுக்க
மைகொண்ட வேதன் மதலை தனைவாங்கி
ஈசர் முதலாய் எல்லோருங் கூடிருந்து
வாசமுள்ள பிள்ளைகள்தாம் வளரத் திருவமிர்தம்
சேனைமிக வூட்டுதற்கும் செல்வ முண்டாவதற்கும்
வானத் தமிர்தம் வருத்திமிக ஈயவென்று
கயிலை தனிலிருக்கும் கண்ணான பேர்களுக்கு
அகிலமதிற் பாயும் ஆகாய வூறலதை
வருத்திக் கொடுக்கவென்று மாயவரு மீசுரரும்
பொருத்தமுள்ள வானோரைப் போய்வேண்டி வாருமென்றார்
அப்படியே வானோர் ஆகாய மீதேகி
செப்பமுட னமிர்தம் சென்றவர்கள் பார்க்கையிலே
ஆருரூப மில்லா ஆகாச மேல்வழியே
சீருரூப மான சிவகயிலை யானதிலே
பாயு மளவில் பலசாஸ்தி ரங்கள்கற்ற
வீயுமறை வேதியனும் விழிநுதலாள் கன்னியரும்
அமுதமதை யெல்லாம் அள்ளித் தலைமேலும்
குமுதமுடன் குடித்துக் கொழுத்துமிகப் பாளைவைத்துத்
தேகமது நிமிர்ந்து தேவியு மன்னவனும்
ஆகமது கூர்ந்து அலங்கரித்து நிற்பளவில்
வானோர்கள் பார்த்து வாய்த்தமிர்தங் காணாமல்
ஏனோயிது மாயமென்று எண்ணிமிகப் பார்ப்பளவில்
ஏகமாயிங்கு வந்து யாமிதைக் குடித்தோ மென்றான்

ஏகசிவ சங்கமெல்லாம் இங்கு இருக்கிறார்கள்
சிவனிடத்தில் வந்து செய்திசொல் என்றிழுத்தார்
அவசியமுண்டானால் அவரிங்கு வருவாரென்றார்
கொண்டாடி நின்ற கூர்மறையவன் தனையும்
பெண்டாட்டி யான பெண்ணதையும் வானோர்கள்
பிடித்து இழுத்துப் பின்னுமுன்னுந் தள்ளிமிக
அடித்துச் சிவன்முன்னே அச்சுதரும் பார்த்திருக்க
கொண்டுவந்து விட்டுக் கூறுவார் வானோர்கள்
பண்டுமுத லின்றுவரை பாய்ந்த அமிர்தமெல்லாம்
உண்டுகொண்டு தேகம் உரத்துமிகப் பாளைவைத்து
வண்டுறுக்கி மிக்க வலுப்பேசி னானெனவே
சொல்லிடவே வானோர் திருமா லதுகேட்டு
நல்லதுதா னென்று நாடிச்சிவ னோடுரைக்க
அப்போது நல்ல ஆதி சிவமுரைப்பார்
எப்போதும் பாலர் இவருண் ணமிர்தமெல்லாம்
கொடுக்கும் படியாய் குருக்க வையும் என்றுரைத்தார்
அடுக்க நின்ற  தேவர் அதுகேட்டுச் சீக்கிரமாய்
மறையோனையும் மாதுவையும் வந்து எடுத்துச் சாபமிட
இறைய வரை பார்த்து ஏது உரைப்பான் மறையோன்
இப்போது இட்ட சாபமானதுதான்
எப்போது நீங்கும் என்றுக் கேட்டான்காண் மாமறையோன்
நீசக் குல மறுத்து நெடிய திருமாலும்
மாசில்லாத் தர்ம யுகமதை யாளுதற்க்கு
அன்பு சேகரிக்க அங்கு வருவார்கள் கண்டீர்
வம்புமாறும் போது மாறும் உங்கள் சாபா மென்றார்
உடனே மறையோனும் ஓவியமும் உள்ள தென்று
தடம் மேலே நின்று தாலமென வளர்ந்தார்
வளர்ந்து அமிர்தமதை மக்களேழுப் பேர்களுக்கும்
பழந்தமிர்தக்காயோடு பலவகையும் தானாண்டு
அமிர்தமதை நீங்கள் ஆக்கிரகந்தானடக்கிக்
குமிர்தமுடன் நீங்கள் குடித்திடுங்கோ என்றுச் சொல்லி
உங்களுக்குப் பாலமிர்தம் ஊறுமல்லாலித்தாலம்
எங்களுக்கு இத்தாலம் இசையாதுக் கண்டீரே
பாலருக்கு இந்த வரம் பரமயுகத்தோர் கொடுத்து
ஞாலமுள்ள காளி நாயகியைத்தானழைத்து
பாலரையும் காளி பண்பாக வாங்குகையில்
ஆலமுது உண்ட அச்சுதரு மேதுரைப்பார்
அடவு பதினெட்டும் அலங்கார வர்ம மதும்
கடகரியின் றொழிலுங் கந்துகத்தின் தொழிலும்
மாவேறுந் தொழிலும் வாள் வீசுந் தொழிலும்
பாவேறும் பாட்டும் பழமறை நூலானதுவும்
அடவு மேலான அதிக பல வித்தையதும்
திடமும் மிக வருத்தி சேனாபதியாக்கி
எல்லாவித தொழிலும் இசைவான ராகமதும்
நல்லா வருத்தி நாட்ட முடனே கொடுத்து
உயிர்ச்சேதம் வராமல் ஒன்றுபோ லென்மகவை

நெய்ச்சீதம் போலே நீவளர்த்துத் தாவெனவே
அல்லாம லென்மகவை ஆரொருவ ரானாலும்
கொல்லாமல் காக்கக் கூடுமோ வுன்னாலே
அன்பான காளி அதற்கேது சொல்லலுற்றாள்
என்பாலகர் தனையும் ஈடுசெய்ய யிங்கொருவர்
உண்டோகா ணிந்த உலகி லெனக்கெதிரி
என்றேதான் காளி இப்படியே சொல்லியபின்
பாலரையுந் தானெடுத்துப் பரமசிவ னாரருளால்
கோலமுள்ள மாயன் கொடுத்தாரொரு வார்த்தைசொல்லி
சீலமுள்ள காளியென் சித்திரப் பாலருக்கு
பாலருக்குப் பங்கமது பற்றாமல் காத்திடுநீ
மதலைதனக் கோர்தீங்கு வந்ததே யுண்டானால்
குதலையரே வுன்றனக்குக் கொடுஞ்சிறைதான் சிக்குமென்று
சொல்லியே காளிகையில் சிறுவரையுந் தான்கொடுத்து
வல்ல பெலமுள்ள மாடுதனி லேறியையும்
வேதாவும் நல்லநெற்றி விழியுடை யாள்தன்தனையும்
மாதாவு மான வாய்த்தசர சோதியையும்
தேவர்முதல் வானவரை சிட்டர்முனி வோர்களையும்
மூவர்களை யுங்கயிலை ஊரேபோ மென்றனுப்பி
காளிதனைப் பிள்ளைகளைக் கருத்தாய்வள நீயென்று
ஆழி யடைத்த அச்சுதருந் தான்நடந்து
சீரங்க மாபதியில் சென்றிருந்தா ரம்மானை

விளக்கம்:

இப்படியாக பல விதமாக பாராட்டி, உலகமெல்லாம் ஒரு குடைக்கீழ் ஆள வந்தவர்களோ மிக உயர்ந்த நிலையை பெற்றவர்களோ உலகத்தோர் அனைவரும் புகழும்படி வாழவந்தவரோ, நீங்கள் நலமோடு வாழ ஆராரோ ஆரிரரோ என்ற ஆனந்தமாக பாசத்தோடு தாலாட்டு பாடி மகிழ்ந்தார்கள்.

கற்பகத்தரு

இவ்வாறு சரஸ்வதி தாலாட்டி தோஷம் எல்லாம் விலகும் படி நீராடி சீராட்டி திருமால் கைகளில் கொடுத்தார்கள். திருமால் குழந்தைகள் தன் கைகளில் வாங்கினார். குழந்தைகளுக்கு கைலாயத்தில் இருக்கின்ற அமிர்தத்தைக் கொடுக்க நினைத்து தேவர்களிடம் சென்று, அமிர்தத்தை வாங்கி வரும்படி சொன்னார். அந்த அமுதத்தை கொடுத்தால் குழந்தைகள் பதினாறு செல்வமும் பெற்று என்றும் பதினாறு வயது இளமை மாறாது மரணம் இல்லாத வாழ்வை பெறுவார்கள் என்று திருமாலும் , ஈஸ்வரரும் சொன்னார்கள்.

ஈஸ்வரர் சொன்னவுடன் வானலோகத்தில் உள்ளவர்கள் அமிர்தம் கொண்டு வர சென்றார்கள். வானவர்கள் கைலாயத்தில் வந்து பார்க்கும்போது, அமிர்தத்தை எல்லாம் சாஸ்திர ஞானம் பெற்ற ஒரு அந்தணனும், அவர் மனைவியும் சேர்ந்து சாப்பிட்டு விட்டார்கள். வயிறு புடைக்க சாப்பிட்டதோடு நின்றுவிடாமல் தலையின் மீது இட்டுச் சோர்வுப் போக்கி கொழுத்து தடித்து காணப்பட்டார்கள்.

ஆகையால் அந்த அந்தணரையும் மனைவியையும் சிவனும், திருமாலும் பார்க்கும்படியாக வானவர்கள் இழுத்துக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். கைலாயத்தில் உள்ள அமிர்தத்தை எல்லாம் இவர்கள் இருவரும் குடித்து விட்டு ஆணவம் கொண்டு எங்களை அவமரியாதையாக பேசினார்கள் என்று சொன்னார்கள். அதை கேட்ட சிவனும், திருமாலும் ஆலோசனை செய்து இவ்வளவு காலமும் கைலாயத்தில் உள்ள அமிர்தத்தை இவர்கள் சாப்பிட்டதால் இவர்கள் இருவரையும் கற்பக மரம் ஆகிய பனைமரமாகப் பிறவிச் செய்யச் சாபமிட்டார் சிவன்.

உடனே வானவர்கள் வேத சாஸ்திரங்களை கற்ற அந்தணனையும் அவர் மனைவியையும் கொண்டு வந்து தலைகளாக மண்ணில் புதைத்து கற்பகத் தருவாக மாறுவீர்கள் என்று சாபித்தார்கள். அந்தணரும்,அவர் மனைவியும் பார்ப்பன், பாப்பாத்தி என்ற பெயரில் பனைமரமாக முளைத்தார்கள். அந்தணனான பார்ப்பன் சிவபெருமானை வணங்கி வேதனையோடு, சுவாமி!

எங்களுடைய இந்த சாபம் எப்போது மாறும் என்று இரங்கி வேண்டினார். அப்போது சிவபெருமான் அவர்களை அழைத்து, நீசக் குலமாகிய கலியனுடைய வழியில் நடந்தவர்களை அழித்து, திருமால் பூலோகத்தில் குற்றமில்லாத சுத்தமான தர்மயுகத்தை ஆட்சிச் செய்வதற்காக முடிசூடும் பெருமாளாக வருவார். அப்போது அன்பு வழியில் நடக்கும் மக்களை தன்னோடு சேர்த்து, கலியுகம் அழித்து தர்மயுகம் தோன்றும் போது, உங்கள் சாபங்கள் மாறிப்போகும் என்று சிவபெருமான் கூறினார். சிவபெருமான் கூறியதைக் கேட்டு பாப்பனும், பாப்பாத்தியும் பனைமரமாகிய கற்பக விருட்சமாக மண்ணில் தோன்றினார்கள்.

பாப்பான் அலகு பனையில் பாளை நீண்டுத் தொங்கும் ஆண் பனைமரம் ஆனான். பாப்பாத்தி பருவப்பனை என்ற பெயரில் நுங்குக்குலை வளரும் பெண் மரமாய் வளர்ந்தாள். இவ்வாறு பனைமரம் மண்ணில் தோன்றியது. இந்தப் பனை மரத்தில் கிடைத்த பதநீராகிய அமுதத்தை ஏழு குழந்தைகளுக்கும் கொடுத்தார்கள். இந்த பனைமரத்திலிருந்துச் சுரக்கின்ற இந்த பதனீரானது சான்றோர்களாகிய உங்களுக்கு மட்டுதான். இந்த மரமானது பதநீரை தருமே அல்லாது வேறு யாருக்கும் இத்தாலம் ஊறாது என்று கூறி, பனை மரத்திலிருந்து பதநீர், நுங்கு, பனம்பழம், ஓலை, நார் மற்றும் பலவகைப் பொருட்களையும் சான்றோர்கள் பயன்படுத்தி, அவர்களுக்கு உதவும் வகையில் அவர்களைப் பனை மரமாக உருவாகச் செய்தார்.

பத்திரத்தாள் பெற்றமக்கள்

பதநீரை அமிர்தமாக 7 பிள்ளைகளுக்கும் கொடுத்தார்கள். அதோடு திருமாலினுடைய பிள்ளைகளுக்கு பரலோகத்தில் உள்ளவர்கள் மிகச்சிறப்பான வரத்தை கொடுத்து சென்றார்கள். பத்திரத்தாள் பெற்ற மக்கள் ஆகிய பைங்கொடி மார் கன்னிமார்களின் ஏழு பிள்ளைகளையும் பெற்றத் தாய்மார்களாகிய சப்த கன்னியர்கள் பெற்ற இடத்தில் விட்டு விட்டுத் தவத்திற்குச் சென்றக் காரணத்தால், அவர்களைப், பாதுகாக்க, ஞான அறிவு உள்ள பத்ரகாளி அழைத்து குழந்தைகளை பத்திரகாளியிடம் கொடுத்தார்கள். பதினெட்டு வகையான அடவுகளையும் ,பல விதமான கலைகளையும் கற்று

கொடுக்கும்படி சொன்னார். அடக்குமுறைகள், வர்ம கலைகள், யானையேற்றம், குதிரையேற்றம், வாள் வீச்சு, மல்யுத்தம் ஆகிய பல கலைகளையும் கற்றுக் கொடுத்து எந்தவிதமான ஆபத்துக்களும் வராதப்படி, தெய்வ மணம் வீசும் நன்னெறியோடு வளர நீதான் முயன்று செயல்பட வேண்டும் என்றார்.

ஒழுக்கநெறியில் சிறந்த காளியே! என்னுடைய பாலர்களுக்கு எந்த விதமானத் தீங்கும் நேராதபடிப் பாதுக்காப்பது உன் கடமை என்றுக் கூறிப் பாலர்களைப் பத்திரகாளி அம்மையின் கையில் ஒப்படைத்தார்.என்னுடையப் பாலருக்கு ஏதாவது தீங்கு நேர்ந்தால் காளியே, உனக்குக் கொடும் சிறைதான் கிடைக்கும் என்றார்.

மேலும், சான்றோர்களுக்குப் பேரிடுவதற்காக வந்த ,சர்வ வல்லமை பொருந்திய சக்திகளைப் பெற்ற காளை வாகனத்தைக் கொண்ட ஈஸ்வரனையும், வேதமாகிய பிரம்மாவையும், சிவசக்தி பார்வதியையும், கல்வி கலைமகளான பிரம்மாவின் மனைவி சரஸ்வதி தேவியையும், தேவலோகத்தில் உள்ள தேவர்கள் முதல் வானலோகத்து ரிஷிகள், நற்பெயர் பெற்ற முனிவர்களையும், அவரவர் இடங்களுக்கு செல்லுங்கள் என்று அனுப்பிவைத்தார். மறுபடியும் குழந்தைகளைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து விடும் என்றுக் கூறிவிட்டு ஸ்ரீரங்கம் போய் அமர்ந்தார்.

## DAY 44

சாரங்கர் சீரங்கம் தான்வந்தா ரென்றுசொல்லி
சீரங்க மெல்லாம் செழித்து மிகவாழ்ந்து
பாரெங்கு மெச்சிப் பரந்துகா ணம்மானை
அப்படியே அச்சுதரும் அப்பதியி லங்கிருக்க
எப்படியும் சீரங்கம் இனிதழைக்கு மென்றுமிக
மூவர் முதலாய் முப்பத்து முக்கோடித்
தேவருங் கொண்டாடி சிந்தைமகிழ்ந் தேயிருந்தார்
சீரங்க மான திருப்பதியின் வளமை
சாரங்க ராயர் தாமுரைத்தா ரம்மானை
மாரியது மூன்று வருசிக்கத் தான்பொழிந்து
ஏரி பெருகி ஏற்றசெந்நெல் தான்விளைந்து
படியொன்று கோட்டையொன்றாய்ப் பழுத்துவருஞ் செந்நெல்லது
கடினமனதுள்ளோர்காணாதுஅவ்வூரில்
கரும்பு முத்தீனும் கசுவுங் கரைபுரளும்
அரும்பு வனமும் அகில்தேக்கு மாமரமும்
கோவுஞ் ஸ்ரீரங்கரெனக் கூப்பிடுங்கா ணச்சுதரை
மாவுஞ் ஸ்ரீரங்கரென வந்தழைக்கு மச்சுதரை
மயில்குயில் மான்கலையும் வாய்த்தஅணில் பட்சிகளும்
ஒயிலாக அச்சுதரை உள்ளாக்கி யாடிவரும்
அவ்வூரி லுள்ள அந்தணர்க ளெல்லோரும்
கவ்வைவே றில்லாமல் கரியமால் தன்றனக்கு
பூசை முறைவைத்துப் பிராமணர்கள் செய்துவர
ஆசையுட னச்சுதரும் அங்கே யினிதிருந்தார்

சான்றோர் பெருமை

சீரங்க மாபதியில் சிறந்திருக்கு மப்போது
சாரங்கர் பெற்ற சான்றோர் களின்பெருமை
சொல்லுகிறா ரெங்கள் திருமால்கா ணம்மானை
நல்லதுகா ணென்று நாடித் திருகேட்க
அன்பான சான்றோர்க்கு ஆனமா காளியம்மை
தன்பாலர் போலே தான்வளர்ந்து வித்தைகளும்
வருத்திக் கொடுத்து மன்னர்மன்னர் தானாக்கி
கருத்திலுறக் காளி கண்ணான மக்களுக்கு
வேண்டும் பணிகளெல்லாம் விதவிதமாய்த் தானெடுத்துப்
பூண்டந்த மக்களையும் பூத்தான மாய்வளர்த்தாள்
மிக்கநல்ல பிள்ளை வீரரென ஆகுகையில்
தக்கனென்ற சூரன் தன்பேரில் மாகாளி
படைக்கு யெழுந்தருளிப் பாலரையுந் தான்கூட்டி
நடைக்கு அதிகமுள்ள நாயகியும் பாலருக்குப்
போர்க் கோலமிட்டுப் புட்டாபுரங் கடந்து
ஆர்க்க முள்ளகாளி அலகைப் படையுடனே
சான்றோரை விட்டுத் தக்கனையுந் தான்வதைத்து
மூன்றோரை நெஞ்சில்வைத்து ஓங்கார மாகாளி
தக்கனையுங் கொன்று சான்றோ ரவர்தமக்கு
மிக்க வரிசை மிகக்கொடுத்து மாகாளி
புட்டா புரத்தில் பேய்க்கணங்கள் சூழ்ந்துநிற்க
கட்டாத காளி கமலத்தில் வீற்றிருந்தாள்

பகவான் ஸ்ரீரங்கம் எழுந்தருளல்:

விளக்கம்:

பத்ரகாளியிடம் திருமால் பிள்ளைகளையும் கொடுத்துவிட்டு, ஸ்ரீரங்கத்தில் போய் அமர்ந்தார். திருமாலுடைய காலடிபட்ட இடமாகிய ஸ்ரீரங்கம் நல்ல செழிப்போடு விளங்குகியது. சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகிய மும்மூர்த்திகளும் மிக மகிழ்ச்சியோடு இருந்தார்கள். முப்பத்து முக்கோடி தேவாதி, தேவர்களும் உல்லாசமாக இருந்தார்கள். ஸ்ரீரங்கப்பட்டணம் பூலோக வைகுண்டமாகப் பலவிதமான இயற்கை வளங்களோடு மாரி மழை தவறாது மாதம் மும்மாரிப் பெற்று, செல்வச் செழிப்போடு சிறந்து விளங்கியது . எப்படி என்றால், வயல்வெளிகளில் ஒரு படி நெல் விதைத்தால் 100 கோட்டை நெல் விளையும்.

அங்கே வாழுகின்ற எல்லாவிதமான விலங்குகளும் பட்சிப் பறவைகளும் ஸ்ரீரங்கநாதராகிய திருமாலைப் போற்றித் துதிச்செய்யும். அங்குள்ள அந்தணர்கள் வேத சாஸ்திரங்களை பிழையின்றி முறையாக போதித்துத் துதிப்பாடுவார்கள். குறை ஒன்றும் இல்லாமலும் என்றும் மனதில் தீய எண்ணங்கள் இல்லாமல் நல்லெண்ணத்தோடு நாராயணரின் திருவடிகளுக்கு பணிவோடு விதிமுறையை மாறாமல் பூஜை பண்ணி வழிபாடு செய்து பணிந்து வணங்குவார். மந்திரம் ஓதி மலர் அடிபணிவதை ஏற்றத் திருமால் மனநிறைவோடு மக்களுக்கு ஸ்ரீ ரங்கநாதசுவாமியாக ஸ்ரீரங்கத்தில் இருந்து அருள்பாலித்து வந்தார

சான்றோர் பெருமை

சான்றோர்கள் ஆகிய திருமாலின் ஏழு பிள்ளைகளையும் தன் பிள்ளைகள் போல் பாதுகாத்து சகல கலைகளையும் பயிற்றுவித்து வீரராக இளைஞர்களாக வளர்த்து வந்தார் மாகாளியம்மை. பேராசைக் கொண்ட தக்கன் என்ற சூரன் மேல் கோபம் கொண்டு , தன்னுடைய ஏழு மக்களையும், மற்றுள்ள பூத கணங்களையும் சேர்த்து தக்கனையும் அவன் படைகளையும் வதம் செய்வதற்காக புட்டா புரத்தில் இருந்து புறப்பட்டாள். அவ்வாறே சான்றோர் உதவியோடு தக்கன் என்ற சூரனையும் வதைத்து சான்றோர்களுக்கு எல்லாவிதமான கலைகளையும் பயின்றுக் கொடுத்து சான்றோர்களை யாராலும் வெல்லமுடியாதப் படி வீராதி வீரர்களாக வளர்த்தாள். பூதக் கணங்களோடு புட்டாபுரத்தில் காளி தெய்வமாக கம்பீரத்தோடு அமர்ந்திருந்தார். பூத கணங்கள் எல்லாம் காவல் தெய்வமாக இருந்தார்கள்.

## DAY 45

சான்றோர் திருமணம்

அப்போது நல்ல ஆர்க்கமுள்ள பாலருக்கு
இப்போது மாலையிட ஏழுபேர்க்கும் வேணுமென்று
பார்த்து விசாரித்துப் பத்திர மாகாளி
நாற்றிசையும் பார்த்து நாரத மாமுனியை
அழைத்துநல்ல மாகாளி அந்தமுனி யோடுரைப்பாள்
விழைத்துநல்ல புத்தி விபரமிட்டுச் சொல்லுகின்ற
மாமுனியே யென்றன் மக்களேழு பேர்களுக்கும்
நீமுயன்று பெண்ணேழு நிச்சயிக்க வேணுமென்றாள்
நல்லதுதா னென்று நாரத மாமுனிவன்
வல்லவகை யாலுன் மக்களுக்குப் பெண்ணேழு
பார்த்துவரு வேனென்று பகர்ந்துமுனி போயினனே
சாற்று மொழி கேட்டுத் தானேகு மாமுனிவன்
நீதமுள்ள நல்ல நிருபதி ராசனுந்தான்
பெற்ற மதலைதனைப் பெண்கேட்கப் போயினனே
மாமுனிவன் கேட்க மன்ன னதிசயித்துத்
தாமுனிந் தேது தானுரைப்பா னம்மானை
நல்ல முனியே நானுரைக்க நீர்கேளும்
செல்ல மகவு தேவிக்கு மென்றனக்கும்
இல்லாம லனேகநாள் இருந்தோந் தவசாக
நல்லான ஈசர் நாட்டமுட னிரங்கி
ஆண்பிள்ளை யுன்றனக்கு ஆகமத்தி லில்லையென்று
பெண்பிள்ளை யேழு பிறக்குமென்று சொன்னார்காண்
அப்போது ஈசுரரை அடியேன் மிகப்பார்த்து
இப்போது என்றனக்கு இரணமுடி வாகுகையில்

கொள்ளிவைக்கப் பிள்ளை ஒன்று கொடுவுமென்றேன்
தெள்ளிமை யாயீசர் சொன்ன மொழி நீர் கேளும்
தெய்வச் சான்றோராய்த் சித்திர மாகாளி
கையதுக்குள் வாழ்ந்துன் கன்னியேழு பேர்களையும்
மாலையிட் டுன்றனக்கு வருமாபத் தையெல்லாம்
மேலவராய்க் காத்து மேதினியோர் தாமறிய
உன்றனக்கு நல்ல உதவிமிகச் செய்வதற்கும்
வந்தங் கிருப்பாரென வகுத்தாரே ஈசுரரும்
ஆனதால் பெண்ணேழும் அவர்க்கேதா னல்லாது
வான முனியே மற்றெவர்க்கு மாகாதே
என்று நிருபதனும் ஏற்றமுனி யோடுரைக்க
நன்று நன்றென்று நாரதருஞ் சம்மதித்து
மன்னவனே கேளு மாகாளி தன்னிடத்தில்
சொன்னபிள்ளை யேழும் சிறந்திருக்கி றாரெனவே
அந்தமன்ன ரான ஆண்பிள்ளைக ளானோர்க்கு
இந்த முகூர்த்தம் யான்கேட்க வந்தேனென்று
சொல்லமுனி மன்னவனும் சோபித மாய்மகிழ்ந்து
நல்ல முகூர்த்தம் நாளிட்டா னம்மானை
நாளிட்டு நாரதரும் நல்லமா காளியுட
தாளிணையைப் போற்றித் தானுரைத்தா ரம்மானை
மாகாளி யுன்றனுட மக்களேழு பேர்களுக்கும்
வாகான மன்னன் வாய்த்த நிருபனுட
மக்களேழு பெண்களையும் மாலைமணஞ் சூட்டுதற்கு
மிக்கநா ளிட்டு மேவிவந்தேன் மெல்லியரே
என்றுமுனி சொல்ல ஏற்றமா காளிசொல்வாள்
நன்றுநல்ல மாமுனியே நான்வளர்த்த கண்மணிகள்
தெய்வப் பிறவியல்லோ திசைவென்ற சான்றோர்கள்
மெய்வரம் புள்ள மெல்லியரைச் சொல்லுமென்றாள்
பேசி வந்த பெண்ணதுக்குப் பிறவியென்ன மாமுனியே
உய்த்துவந்த பெண்ணேழின் உற்பவஞ்சொல் மாமுனியே
அப்போது பெண்ணார்கள் ஆதிப் பிறவியெல்லாம்
செப்புகிறோ மென்று சிவகாளிதனைத் தெண்டனிட்டு
கேளாய் நீயென்று கிருபையுட னேதுரைப்பான்
நாளான நாளதிலே நல்லதெய்வ லோகமதில்
தெய்வேந் திரனார்க்குச் சொல்லேவல் செய்திருந்த
நெய்நெடியக் கன்னி நேரிழைமா ரேழ்பேரும்
வேலையின்ன தென்று விரித்துக்கேள் மாகாளி
மாலையிலுங் காலையிலும் வானவர் கோன்றனக்குப்
பூவெடுத் திட்டுப் பூசைபுனக் காரமிட்டுக்
கோவெடுத்த ராசனுக்குக் குஞ்சமிட ஆடிநிதம்
ஏவல் புரியுகின்ற இராசதெய்வக் கன்னியர்கள்
நாவுலகு மெய்க்க நடந்துவரும் நாளையிலே
பூவுலகு மன்னர்களைப் பூத்தான மாகவெண்ணி
பாவினியக் கன்னி பஞ்சமது வேறாகிப்
பூவெடுக்கக் கன்னி போகாமல் வாட்டமதாய்
ஆவடுக்கங் கொண்டு அவர்க ளொருப்போலே

காச்சல் குளிரெனவே கவ்வையுற்றுத் தானிருக்க
மாச்சல் தனையறிந்தான் மகவானு மப்போது
ஆனதால் வேதாவின் அண்டை யவனணுகி
தீனம்வந்த தேதெனவே தேவியர்க்கு வேதாவே
வேதா தெளிந்து விரித்துரைப்பா ரப்போது
சூதான மான தோகை யேழுபேரும்
பூலோக மன்னருக்குப் பிரியமுற்று மையல்கொண்டு
காலோயு தென்று கவ்வையுற்ற தல்லாது
வேறில்லை யென்று வேதா இதுவுரைக்க
தேறியே வாசவர்கோன் தேவியெழு பேர்களையும்
அப்படியே பூவுலகில் அமையுமென்றார் வேதாவை
இப்படியே வந்து இவர்பிறந்தா ரென்றுமுனி
சொல்லச் சிவகாளி சிரித்து மனமகிழ்ந்து
நல்லதிது மாமுனியே நன்முகூர்த்தம் பார்த்துரைநீ
உடனே முனியும் உகந்த முகூர்த்தமென்று
திடமே நிருபனுக்குச் செய்திசொல்ல ஆளும்விட்டு
நாளை முகூர்த்தமென்று நாற்றிசையுந் தானறிய
கோழையில்லா மன்னர் குலதெய்வச் சான்றோர்க்கு
முகூர்த்தமென்று சாற்றி மூவுலகுந் தானறிய
பகுத்துவமாய் நல்ல பந்தலிட்டா ரம்மானை

## சான்றோர்கள் திருமணம்

விளக்கம்:

இவ்வாறு இருக்கும் காலத்தில் சான்றோர்கள் ஏழுபேர்க்கும் திருமண வயதை எட்டி விட்டதாலே, பத்திரகாளி தன் மக்களுக்கு திருமணம் முடிக்க எண்ணம் கொண்டு ,தேவலோக நாரத மகரிஷியை வரவழைத்து, முனிவரே! என்னுடைய 7 மக்களுக்கும் திருமணம் முடிக்க வேண்டும் அதற்கு பெண் பார்த்து வர வேண்டும் என்றுச் சொன்னவுடன், நாரத மாமுனிவரும் சம்மதம் என்றுச் சொல்லிவிட்டுச் சென்றார்.

நாரத மாமுனிவர் நீதி நேர்மையோடு ஆட்சிச் செய்து வந்த அரசனாகிய நிருபத மன்னனிடம் வந்தார். அந்த நிருபத மன்னன் மிகவும் நல்ல பண்பு உடையவன். அன்புடைய மன்னன் ஆட்சியில் மக்கள் எல்லோரும் செல்வச் செழிப்போடு வாழ்ந்தார்கள். வான் கொடுத்த மழையால் வளம் பெருகியது. மன்னன் பெரும் புகழ்பெற்று விளங்கினான். மன்னன் பெரும் புகழ்பெற்று விளங்கி வாழ்ந்த காலத்தில் தனக்குப் பின் நாட்டை ஆள வாரிசு இல்லாததால் மிகவும் கவலை கொண்டான். அதனால் சிவபெருமானை நோக்கிக் குழந்தை வரம் வேண்டி தவம் புரிந்தான்.

கேட்பவர்களுக்கு இல்லை என்று சொல்லாதக் குணம் கொண்ட சிவபெருமான் நிருபத மன்னன் தவத்திற்கு மனமிரங்கி, மன்னனிடம் முன்வினை ஆகமக் குறிப்பில் உனக்கு ஆண் பிள்ளை பிறக்க எந்த ஒரு வாய்ப்புகளும் இல்லை. ஆகவே ஏழு பெண் பிள்ளைகள் தான் பிறக்கும். ஆகவே என்னுடைய தெய்வத்தன்மை வாய்ந்த பிள்ளைகளான ஏழு ஆண்மக்கள் வீரமாகாளி வளர்த்து வருகிறார். சாதுவாகவும், வீரத்தோடும் சிறப்புற்று

விளங்கும் அவர்களுக்கு உன் ஏழு பெண்பிள்ளைகளையும் மணம் முடித்துக் கொடு. அவர்கள் உன்னை அந்திம காலத்தில் உன்னை அன்போடு பாதுகாத்து உன்னுடைய ஈமக் கடன்களை செய்து உன்னை சிறப்படைய செய்வார்கள் என்றும், சிவபெருமான் எனக்கு வரம் தந்து அருளினார். என்று அந்த நிருபத மன்னன் தன்னுடைய முன் கதைகளைத் தெளிவாக நாரத முனிவரிடம் கூறினார்.

இதை கேட்ட நாரத முனிவர் மிகவும் மகிழ்ந்து தான் வந்த காரியம் நிறைவேறும் என்று எண்ணி வந்த விவரங்களை கூறினார். நிருபத மன்னன் உற்சாகத்தோடு தன் மகள்களை மணமுடித்து தருவதாக வாக்களித்தார். நிருபத மன்னன் சொன்னதை கேட்டதும் அனைவரும் நல்லது என்று மனம் மகிழ்ந்து இருவருமாக முகூர்த்த நாளும் பார்த்து திருமணம் முடிவு செய்தார்கள். இவ்வாறு முடிவு செய்ததை நாரதர் பேரும் புகழும் பெற்ற மாகாளியிடம் வந்து செய்திச் சொல்ல வந்தார். வந்தவர் மகாளியை வணங்கி, சர்வ வல்லமைப் பொருந்திய காளிதேவியே உம்முடைய பிள்ளைகளாகிய ஆண் மக்களுக்கும் தகுதியானப் பெண்களைப் பார்த்து வந்தேன் என்றார்.

நாரதர் பெருமையோடுக் கூறுவார் குறையில்லாமல் எல்லா அம்சங்களுடன் திருப்தியாக அமைந்துள்ள நிருபத மன்னனுடைய மக்கள் ஆகிய ஏழு பெண்களையும் திருமணம் செய்ய எல்லா ஏற்பாடுகளையும் செய்து வந்தேன். மிகவும் நல்ல நேரம் பார்த்து நாளையும் குறித்து விட்டு வந்தேன் என்றார். இவ்வாறு நாரதர் சொன்னவுடன் மாகாளியம்மன் நான் செல்லமாக வளர்த்து என்னுடைய கண்மணிகள் ஏழுபேரும் தெய்வப் பெருமாளுக்கு பிறந்த பிள்ளைகள் அல்லவா? நாரததரே எத்திசையும் புகழ் பெற்ற வீரர்கள் ஆவார்கள். ஆனால் நீங்கள் பேசி முடித்து வந்திருக்கும் பெண்கள் எந்த பிறவியை சேர்ந்தவர்கள். வாக்குக் கொடுத்துவிட்டு வந்த ஏழு பெண்களுடைய தாய் தந்தையர்கள் குலத்தைப் பற்றி நான்அறியசொல்லும் என்றார் காளி. பணிவோடு அதைக் கேட்ட நாரதர் காளியை வணங்கி அந்த கன்னிமார்களின் பூர்வீக கதையைச் சொல்லுகிறார்.

முன்னொரு காலத்தில் மிகவும் புகழ் பெற்ற தெய்வீகம் பொலிந்த தேவலோகத்தில் தேவர்களுக்குத் தலைவனான இந்திரனுக்கு பணிவிடைகள் செய்து வந்தார்கள். இந்த ஏழு கன்னிமார்களும் அழகிய கண்களை உடைய அழகான கன்னியர்கள் ஏழு பேரும் சூரியன் உதிக்கின்ற காலை நேரத்திலும் சூரியன் அர்த்தமாகும் மாலை நேரத்திலும் நந்தவனத்தில் மலர்களை பறித்து தேவேந்திரனுக்கு பூஜை செய்து வந்தார்கள். பூக்களை மாலைகளாகத் தொடுத்து இறைவனுக்கு அணிவித்து அலங்காரமும் செய்வார்கள்.

இவ்வாறு பணிவிடைகள் செய்த கன்னிமார் ஏழு பேரும் மிக உயர்ந்த நிலையில் உள்ள தேவலோகத் தேவதைகள் ஆவார்கள். நாராயணனுடைய வைகுண்டத்தில் உள்ளவர்களும் அதிசயப்படும் அளவில் திறமையோடு இருந்த அந்த காலத்தில், பூலோகத்திலுள்ள மன்னர்கள் மேல் ஆசைகொண்டு பூ முடித்து வாழலாம் என்ற எண்ணம் உண்டானது. இதனால் இந்திரனுக்கு பூஜைகளும் செய்யாமல், அலங்காரம் செய்யாமலும் பூலோக ஆசையில் இருந்தார்கள். இதனால் காய்ச்சலும் குளிரும் கொண்டு சோர்வு அடைந்தார்கள். பூஜைகள் தடைப் பட்டதால் அவர்களின் சூழ்நிலையும் கண்ட இந்திரன், கன்னியர்களின் இந்த மாறுபட்ட நிலையை படைக்கும் பிரம்மாவிடம் சொன்னார்.

இந்த கன்னிகள் நோயால் பாதித்துக் காணப்படுகிறார்கள். இந்த நோய் வர காரணம் என்னவென்று கேட்டார். உடனே ஆகமத்தை எடுத்துப் பார்த்து தெரிந்து கொண்டு இந்திரனிடம் விவரமாக எடுத்துச் சொன்னார். இந்த கன்னியர்கள் அவர்களுடைய மனம் களங்கப்பட்டு குற்ற உணர்வோடு ஏழு பேரும் பூலோகத்திலுள்ள மன்னர்கள் மேல் காதல் மயக்கம் கொண்டுள்ளார்கள். வியாதியால் அவதி படுவது என்று சொல்வது நியாமாகாது. இவர்களுக்கு எந்த விதமான வியாதிகளும் இல்லை என்று விவரமாக பிரம்மா இந்திரனிடம் சொன்னார்.

உண்மை நிலையை தெரிந்து கொண்ட இந்திரன் மனம் தெளிவடைந்து அப்படி என்றால் தேவிமார் ஏழு பேர்களையும் அவர்கள் விரும்பிய படியே பூலோகத்திலுள்ள மன்னர்களுக்கு மனைவிகளாக பிறவி செய்யும் என்றார். உடனே பிரம்மா சிவபெருமானின் திருவருளால் நிருபதமன்னனுக்கு ஏழு பேரையும் தவப்புதல்விகளாகப் பிறவிச் செய்தார்.இந்த தெய்வப் பிறவியான ஏழு பேரையும், திருமாலின் ஏழு புதல்வர்களுக்கு மணமுடித்துக் கொடுக்க ஈஸ்வர பெருமானை வகுத்துக் கொடுத்துள்ளார் என்று பத்ரகாளி அம்மையிடம் நாரதர் சொல்ல, மாகாளியம்மன் சம்மதித்து நல்ல நாள் பார்த்து முகூர்த்த நேரம் குறித்து முடிவுச் செய்தார்கள்.

காளி மனமகிழ்ந்து சம்மதித்தவுடன் நாரதர் நல்ல முடிவோடு நிருபத மன்னனுக்கு கல்யாண விவரம் சொல்ல ஆட்களை அனுப்பினார். நான்கு திசைகளிலும் உள்ள நாட்டு மன்னர்களுக்கு தெரிவிக்கும்படி சொன்னார்கள். நிருபத மன்னனும் தெய்வகுலமாகிய சான்றோர்களுக்கு தன் மகள்கள் ஏழு பேர்களையும் திருமணம் செய்து கொடுப்பதை ஆனந்தம் கொண்டார். திருமணம் நடப்பதை மூன்று உலகத்தில் உள்ளவர்களும் அறியும்படி பறைசாற்றினார்.

## DAY 46

வைரக்கால் நாட்டி வைர வளைகளிட்டுத்
துயிரமுள்ள தங்கத் தூண்கள் மிகநாட்டி
முத்து நிறைத்து முதுபவள வன்னியிட்டுக்
கொத்துச் சரப்பளியைக் கோர்மாலையாய்த் தூக்கி
மேற்கட்டி கட்டி மேடைபொன் னாலேயிட்டு
காற்கட்டி பட்டுக் கனமா யலங்கரித்து
வாழை கரும்பு வகைவகையாய் நாட்டிமிக
நாளை மணமென்று நாட்டுக்குப் பாக்குவைத்து
வெடிபூ வாணம் மிகுத்தகம்பச் சக்கரமும்
திடிம னுடன்மேளம் சேவித்தார் பந்தலுக்குள்
வாத்தியங்க ளின்னதென்று வகைசொல்லக் கூடாது
நாச்சியார் மாகாளி நாயகியுங் கொண்டாடி
பாலருக் கேற்ற பணியெல்லாந் தான்பூட்டிச்
சாலமுள்ள சிங்கத் தண்டிகையில் தானிருத்தி
பட்டணப் பிரவேசம் பகல்மூன்று ராமூன்று
இட்டமுடன் பூதம் எடுத்துமிகச் சுற்றிவந்து

மண்டபத்துள் வைத்து மாபூதஞ் சூழ்ந்துநிற்க
தெண்டனிட்டு மன்னர் தேசாதி சூழ்ந்துநிற்க
பதினெட்டு வாத்தியமும் பட்டணமெங் குமுழங்க
ததிதொம் மெனவேசில தம்புருசா ரங்கிகெம்ப
பந்தமது பிடித்துப் பலபூதஞ் சூழ்ந்துநிற்க
நந்தகோ பால நாரா யணர்மகிழ்ந்து
மைந்தருக் கின்று மணமுண்டு என்றுசொல்லி
வைந்தர்பல தேவர்களை வாருமென வேயழைத்துப்
பாலருட முகூர்த்தம் பார்க்கப்போ மென்றுசொல்லி
சீலமுட னனுப்பி ஸ்ரீரங்க மேயிருந்தார்
தேவதே வர்புகழத் திசைவென்ற சான்றோர்க்கு
மூவர்களும் வந்து உதவிசெய்தா ரம்மானை
நல்ல முகூர்த்தம் நாள்பார்த்துச் சான்றோர்கள்
எல்லாச் சடங்கும் இயற்றிவைத்தா ரம்மானை
சடங்கு முகித்துச் சான்றோரை யொப்பமிட்டுத்
தடங்கொண்ட மன்னவரைத் தண்டிகையின் மீதிருத்தி
அரசர் மிகச்சூழ அணியீட்டி யாட்கள்வர
விரைவாகக் காளி வித்தகலை யேறிவர
அரம்பையர்க ளாடிவர அயிராவதத் தோன்வரவே
வரம்பெரிய தேவர் மலர்மாரி தூவிவர
ஆலத்தி யேந்தி அணியணியாய்த் தான்வரவே
மூலத்தி கன்னி மோகினியாள் தன்னுடனே
பூதம தாடி பிடாரியது சூழ்ந்துவர
நாதம் ரெட்டையூதி நடந்தார்மாப் பிள்ளைகொண்டு
விருதிற் பெரிய வீரதெய்வச் சான்றோர்கள்
நிருபன் மகளை நியமித்து மாலையிட
வீரியமாய் நல்ல விவாகமிட வாறாரெனப்
பூரியலிற் சொல்லி பேர்கள் சிலரூத
இப்படியே வாத்தியங்கள் இசைந்திசைந் தேவூதி
அப்படியே நிருபன் அரசன் மகள்தனையும்
மாலை மணமிட்டு வாழவந்தா ரம்மானை
வாலையது வான மாகாளி வாழுகின்ற
மண்டபத்துள் வந்து மகிழ்ந்திருந்தா ரம்மானை

விளக்கம்:

தேவர்களும், முனிவர்களும், மன்னர்களும், அந்தணர்களும் அமைந்திருக்க வித விதமாக பிரித்து மிகப் பெரிய பந்தல் அமைத்து, அழகு படுத்தினார்கள். மேலும் பந்தலில் வைரக்கற்கள் பதித்த முகூர்த்தக் கால் நாட்டினார்கள். தங்கத்தால் செய்த தூண்களை நாட்டினார்கள். பவள முத்துகளால் ஆன ஆசனங்களை அழகுபட அமைத்தார்கள். கொத்துக் கொத்தாக சர அடுக்கு பூமாலைகளைத் தொங்கவிட்டார்கள். திருமண மேடையை மின்னும் தங்கத்தால் ஜொலிக்கும் படி அழைத்தார்கள்.மேலும் அதை அலங்கரிக்க வண்ணப்பட்டாடைகள் சுற்றினார்கள். குலைகளோடு தொங்கும் வாழை மரங்களும், பால் வடியும் மங்களகரமான மரங்களையும் நட்டு அலங்கரித்தார்கள்.

ஓமகுண்டங்களும், மங்கள வாத்தியங்களும், ரம்பை ஊர்வசி நடனங்களும், பிராமணர்களின் வேத நாதம் சங்கொலியும், முறைப்படி நடக்க, பூதகணங்களின் ஒய்யார கூட்டமும் தெய்வலோகத்திருமண விழாவானது கோலாகல கொண்டாட்டத்தோடுப் பார்க்கக் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. தங்கத்தால் செய்த ஆபரணம் அணிந்து அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் அமர செய்த பூதகணங்கள் சூழ மணமக்கள் வலம் வந்தார்கள். பார்ப்பவர்கள் பரவசமடைந்தனர். எல்லா நாட்டு மன்னர்களும் வாழ்த்துச் சொல்ல, மணமக்கள் அலங்காரமாய் வருவதைக் கண்ட நாராயணரும் மகிழ்ந்துக் கொண்டாட, சம்பிரதாயச் சடங்குகள் எல்லாம் சரிவரச் செய்து மணமக்கள் வந்தார்கள். எல்லோரும் மகிழ்ந்தார்கள் மணமக்களை அலங்காரமாகவும் மிக அற்புதம்.

நிருபத மன்னனும் தன்னுடைய ஏழு மகள்களையும் அலங்கரித்து அழைத்து வந்தார்கள். அலங்காரம் என்றால், பார்த்தவர்கள் பரவசம் அடையும் வண்ணம் அலங்கரித்திருந்தார்கள். ரத்தினங்கள் பதித்த மூக்குத்தியுடன், காதணிகளும், கழுத்தில் ரத்தின ஆபரணங்களும், கைகளில் மாணிக்கங்கள், இடுப்பில் ஒட்டியாணம் அணிந்து தலையில் பூச்சூடி கழுத்தில் தங்க ஆபரணங்களும் பூ மாலைகள் அணிந்து ஒய்யாரமாக நடந்து வந்தார்கள். தெய்வத் திருமாலின் மகன்களும் நிருபத மன்னனின் மகள்களும் மாலை சூடி திருமண கோலம் கொண்டு திருமண மேடையில் அமர்ந்தார்கள்.

.

இவ்வாறு திருமணம் முடிந்த புதுமணத் தம்பதியர்களை எல்லோரும் வாழ்த்துக் கூறி மலர்தூவி மனதாரப் புகழ்ந்தார்கள். திருமால் மற்றும் தெய்வலோகவாசிகள் எல்லோரும் மணமக்களுக்கு ஆசி வழங்கிச் சென்றார்கள். சான்றோர்களை வளர்த்துப் பாதுகாப்பதற்காக பெற்ற மாகாளியும் சந்தோஷமாகத் தன்னுடைய இருப்பிடமாகிய புட்டாரத்திற்கு உல்லாசமாய் அழைத்துச் சென்றார்.

அலங்காரமாய் ஏழு கன்னிப்பெண்களும் அவர்கள் விரும்பியபடி சான்றோர்களை திருமணம் முடித்துச் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள். சான்றோர்களை வளர்த்த தாயான மாகாளி மகன்களுக்கு அரண்மனைகள் கட்டி செல்வச் செழிப்போடு வாழ வைத்தாள். மணமகள்கள் இன்பமாய் இல்லறத்தில் ஈடுபட்டு கருத்தரித்துக் தாய்மை நிலையை அடைந்தார்கள். திருமாலுடைய ஏழு ஆண் பிள்ளைகளுக்கும் அழகான ஏழு ஆண் பிள்ளைகளும் பிறந்து அவர்களும் பண்பாய் வளர்ந்தார்கள்.

**கல்யாண வாழ்த்து**

மவுனி கலியாணம் மணவோலை வாழ்த்தலுக்கு
சிவனே குருவான திருமேனி முன்னடவாய்
அய்யாவும் நாரணரும் அம்மை உமையவளும்
தெய்வார் தமக்கிரங்கி திருமுகூர்த்தம் செய்யவென்று
அண்டரோடு தேவர் அறியவே ஓலையிட்டு
கொண்டாடியின்பம் குளிர்ந்தநதி பாலதுபோல்
சீரானமக்களென்றும் தெய்வச்சான்றோர்களுக்கு
நாராயணர் தாமும் நல்லமுகூர்த்தமிட்டு

கன்னிக்கலியாணம் கைப்பிடிக்க வேணுமென்று
மன்னனுக்கு ஏற்ற மதி மந்திரியும் தானறிய
இவன் இவளாமென்று யினங்குறித்துப் பெண்பேசி
அவனியறிய அலங்கார மிட்டனரே
கட்டுடைய பந்தலுக்குக் கால் ஒன்பது நாட்டி
பட்டுமேற் கட்டியெனப் பந்தலிலே தான்வகுத்து
சில்விளக்கேற்றிச் சிறந்தபரி பூரணமாய்
நற்சுதிகள் பாட நடசாலையும் வருத்தி
சங்கீதம் பாட சகலகலையுந் தொனிக்க
மங்கள ஒசையேழு வாத்தியமும் தான்முழங்கக்
கிம்புருடாதி முதல் கின்னாரி வாசித்து நிற்க
தம்பூரு வீணை சுரமண்டலம் முழங்கக்
கொலுகொலு வெனத்தெய்வார் குரவைமுழங்கிநிற்க
மலமலென ஆவுநெய்யில் வாடாவிளக்கெரிய
அழகு கொலுவிருக்க ஆலத்தியேந்திநிற்க
ஒழுகு காளாஞ்சி ஒருமித்து வந்துநிற்க
சத்திமுனி பத்திரத்தாள் சாயூச்சமாயிருக்க
இத்தனைப் பண்பும் யிதமுடனே தெய்வார்கள்
பந்தலுக்குள்ளே பரிந்து யிருந்து யெல்லாரும்
கந்தனுக்கு நற்சரடு கற்பிக்க வேணுமென்று
தாயாருடன் பிறந்த தன் மாமனை வருத்தி
காயாம்பூ மேனியனார் கட்டிலொன்று தான்கொடுக்க
அதிலே யிருமெனவும் அருகில் அவரிருக்க
சதிரான வார்த்தையொன்று தான் செவியிலும் ஊதி
கோப்புக் குண்டான குருமுறையைத் தான்கொடுத்து
மாப்பிள்ளையும் பெண்ணையும் வருவித்துப் பந்தலிலே
பரம ரகசியமாய் பலகைதனிலேயிருத்தி
அரகரா வென்று அம்மையுமையை தான் நிணைந்து
சிவசிவா வென்று திருச்சரடு சேர்த்தனரே
தவசி முனியுடனே தானெழுந்து வந்துநின்று
சீதனங்களான சிலவரிசை தான்கொடுத்து
மாதவனை நினைந்து வாழ்த்தினார் பாலர்தனை
சொந்தமாய் உங்களுக்குத் துவரையம் பதியெனவும்
தந்தோ இலங்கைத் தளவாடம் உள்ளதெல்லாம்
பிள்ளகளே இந்த பெரும்புவியை ஆள்வதற்கும்
வெள்ளானை மீதேற விடைதந்தோம் உங்களுக்குத்
ஆனாலும் மக்காள் நீர் ஆளுவீர் ராச்சியத்தை
வானோர் அறியவும்பால் வாழ்த்தினோம நீர்வாழ
வாசவனும் தேவர்மறையவரும் தாம்வாழ
பேசரிய தெய்வர்கள் பெற்றமக்கள் தாம்வாழ
கன்னிமார் பெண்கள்பெற்றக் கைச்சான்றோர் தாம்வாழ்
அன்னைபத்திரத்தாள் அமுதருந்தி தான்வாழ
முக்கந்தன் வாழ முனிமார் கிளை வாழ
தக்கன்த் தலை துணித்த தம்பிரான் தான் வாழ
மேலோக நீதிவிளங்கி மனுவாழ

பூலோகமுள்ளவும் பொய்யருகி மெய்வாழ
நல்லோரும் வாழ நவில்வோரும் தான்வாழ
எல்லாரும் வாழயிருந்து நீடுழிவாழ்க

அய்யா தந்த அய்யா வழிபாட்டு முறை

“தினம் ஒரு நேரம் என்றன் திருமொழி அதனைக்கேட்டால்
பனி வெள்ளம் போலே பாவம் பறந்திடும் நிசமே சொன்னோம்
கனிமொழி சோதி வாக்கும் கையெழுத்து ஆதி நோக்கும்
துணிவுடன் கேட்டோர் உற்றோர் தொலைத்தனர் பிறவிதாமே”

ஆம். நமது பிறவிபிணியை நீக்கும் அரும் மருந்தாகஅய்யாவின் திருமொழிகள் இருக்கிறது. அய்யாவின் மீது அன்பு என்னும் பூக் கொண்டு தூய மனத்தோடு உறுதியாகஅய்யாவை வணங்கும் போது நமது உள்ளம் அய்யா பள்ளிக் கொள்ளும் பதியாக மாறுகிறது.காமம்,கோபம், பொறாமை,பேராசை, வஞ்சகம் சூது, வாது, பொய், ஆணவம்,பிறர் மோகம் போன்றக் கலி எண்ணத்தை விட்டொழித்து,அன்பு, பொறுமை, தர்மம், நியாயம், பணிவு,தியாகம், கருணை போன்ற நல்ல எண்ணத்தை வளர்க்கும் போது நாதன் நமக்குள் வசமாவார். இறைவன் வகுத்து காட்டிய உண்மையான வழி முறையை நாம் பின் பற்றி வந்தால் இறைவன் நமக்குத் துணையாக வருவார்.

அய்யாவைகுண்டப் பரம்பொருளிடம் நமது துன்பம், துயரம் சொல்லி அய்யா அகிலம் ஆளும்பரம் பொருளே! எனக் இந்த துன்பத்தை மாற்றி எதையும் தாங்கும்மனவலிமையைத்தாருங்கள்அய்யாஎன்று அவரிடம் இறைஞ்சிப் ப ணிந்து) கேட்க வேண்டும்அய்யாவின் சன்னதிக்குப் போய்தான் இதைச்செய்ய வேண்டுமென்பதில்லை, நமதுகூரையிலே (வீட்டிலேயே)சுத்தமான இடத்தில் அய்யாவை நினைத்து தீபம் ஏற்றி வழிபட வேண்டும.மேலும் அய்யாவிற்குப் பணி விடை வைக்கின்ற போது, அவரவர் நிலைக்கு(தகுதி) ஏற்றார் போல் வெற்றிலை, பாக்கு, எலுமிச்சைப் பழம், வாழைப் பழம், பிச்சி மலர்ச்சரம், பன்னீரும், பக்கத்தில் அய்யா தந்த முத்திரியாகிய திருநாமம் வைத்து வழிபட வேண்டும். புன்னைக்காய் எண்ணெய் அல்லது தேங்காய் எண்ணை ஊற்றி குத்துவிளக்கை சுடர்விட செய்ய வேண்டும்.

மேலும் அதிகாலை எழுந்த உடன் பதம் விட்டு (குளித்து) திருவிளக்கு ஏற்றி உகப்படிப்பு படித்து பின் அகிலத்திரட்டைப் படிக்க வேண்டும். மேலும் மதியம் உச்சி படிப்பு படிக்க வேண்டும். மாலை மீண்டும் திருவிளக்கு ஏற்றி உகப்படிப்பு படிக்க வேண்டும் . இது தான் தினந் தோறும் வீடுகளிலும் தாங்கலிலும் நாம் செய்யவேண்டிய அய்யாவின் வழிப்பாட்டு முறை ஆகும்,

ஆனால் உச்சி படிப்பை நாம் தினந்தோறும் படிக்க இயலாவிட்டால் வாரத்தின்முதல் நாள் ஞாயிற்று கிழமை உச்சிப் படிப்பை ஏழுமுறைப் படிக்க வேண்டும் அப்படிபடிக்கின்ற போது முதல் முறை எழுந்து நின்றும் பிறகு வருகின்ற ஆறு முறையும் உட்கார்ந்துப் உட்கார்ந்துப் படிக்க வேண்டும்.

உச்சிப்படிப்பு ஏழுமுறைத் தவறாமல் படித்து வந்தால் உலகத்தை உலுக்குகின்ற எத்தகைய நோய்களும் அக்கணமே பறந்தோடும் என்பதை மாயாதி சூட்சன் அய்யா வைகுண்டர் சூட்சகமாகவே உணர்த்தியுள்ளார். பாரளந்தப் பரந்தாமன் வைகுண்ட பரம் பொருளுக்கு கற்பூர தீபம், கொழுந்து மஞ்சனையும், குப்பையுடன் சந்தனம், ஆலத்தி கை விளக்கு, ஆராட்டு, பஞ்சாமிர்த பால் அபிசேகம், பொய் கொண்டத் தேரோட்டம், தாதிக்கைக்காட்டல், விழுந்து நமஸ்காரம், காணிக்கை, காவடியும் போன்ற முந்தைய வழிபாட்டு முறை எதுவும் வேண்டாம். மக்களே உங்கள் அன்பிருந்தால் போதும் அய்யாவிடம் மட்டுமல்ல, உலகோரிடத்திலும் இருக்க வேண்டும் என்று அய்யா கூறியிருக்கிறார். நம்மால் பிறருக்கு ஒரு அணு அளவு கூட துன்பம் நேர்ந்து விடக் கூடாது.

நாராயணர் வைகுண்டருக்கு விஞ்சை வழங்கும் போது இரண்டாவது விஞ்சையாகவே "வேண்டாம் வேண்டாம் காணிக்கையும் மிகவே வேண்டாம் கைக்கூலி" என்றுச் சொல்லி விடுகிறார். இதன்மூலம் நாராயணர் கடவுளின் பெயரால் காணிக்கைச் செலுத்துவதை வண்மையாகக் கண்டிக்கிறார் என்பதை அறிய முடியும். இந்தக் காணிக்கை வேண்டுதலை அய்யா அகிலத்திரட்டு மற்றும் அருள்நூலில் பல இடங்களில் கண்டித்துள்ளதை அறிய முடிகிறது. ஆகவேதான் அய்யாவழி தலங்களில் காணிக்கைஉண்டியல்கள் இருப்பது இல்லை. ஆகவே அறியாத மக்கள் காணிக்கை மற்றக் கோவில்களைப் போல நினைத்துச் செலுத்த முற்படும் போது அவர்களுக்கு எடுத்துச் சொல்வது நமதுக் கடமை. சிலர் காணிக்கை என்பதைத்தான் 'அய்யாவழி தலங்களில் எண்ணெய் காசு என்றுச் சொல்கிறார்கள்' என்றுக் கூறுவதைக் கேள்விப் பட்டிருக்கிறோம்.

ஆனால் அது முற்றிலும் தவறு. காணிக்கை என்பது ஏதேனும் பிரதிப் பலனாக வேண்டுதல்களாக வைத்து அதனை நிறைவேற்றுமாறுக் கொடுக்கும் ஒருவகை லஞ்சமே காணிக்கை. வைகுண்ட அவதாரத்துக்கு முன் பாவத்தைச் செய்து விட்டு அதற்குப் பரிகாரமாக பல்வேறு பூசைகள் செய்து நிவர்த்திச் செய்வதுண்டு. ஆனால் வைகுண்ட அவதாரத்துக்கு பின் பரிகாரம் தேடுவதற்காகச் செய்யப் படும் பூசைப், புனஸ்காரங்களால் எந்த வித நன்மையும் ஏற்படுவதில்லை. பாவத்தைத் தொலைக்கத் தர்மவழியில் நேர்மையுடன் வாழ்வது ஒன்றே வழி. இதுவே வைகுண்டர் காட்டிய வழி..

எண்ணெய் காசு என்பது இறைவனிடம் எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் அன்பின் வெளிப்பாடால் நாம் அன்பாகக் கொடுப்பது. காணிக்கையும் எண்ணெய்காசும் கொடுப்பதுப் பணமாக இருந்தாலும் கொடுக்கப்படும் நோக்கம் வேறு என்பதை அறிந்துச் செயல்படுதல் நலம். "அய்யாவுக்கு எண்ணெய்காசு" என்றுச் சொல்லிக் கொண்டே மனதில் ஏதேனும் உலகியல் வேண்டுதல்களை நிறைவேற்ற வேண்டுமென எண்ணெய்காசு என்றப் பெயரில் கொடுத்தோமானால் அதுவும் காணிக்கைப் பட்டியலில்தான் சேர்க்கப்படும். நமது அய்யாவழியில் கூட்டு வழிபாடு மிகவும் சிறப்பு வாய்ந்தது. அத்தகைய அய்யாவழி கூட்டு வழிபாட்டைத் தவம் என்றப் பெயரில் எடுத்துக் கொள்வதுதான் சிறப்பாகப் பொருந்தும்.

“கும்பிட்டு தவம் செய்தவர்க்கு கோட்டைத்தலம் காட்டி கொடுக்க வருகிறார் எங்கள் அய்யா”..

“பிழைப்பதற்கு வழி பார்த்து பலத்த தவம் செய்திடுங்கோ”

போன்ற வாசகங்களே இதற்கு உவமைகள். ஆகவே நமதுக் கூட்டு வழிபாடு மிகவும் கவனத்தோடு ஒரு தவம்போல் செய்யப்பட வேண்டும். பொதுவாக நமது தாங்கல்களில் உகப்படிப்பு மற்றும் உச்சிபடிப்புப் படிக்கும் போது நாம் இதனை கருத்தில் கொண்டுக் கவனம் சிதறாமல் முழுகவனத்துடன் நாம் உகப்பாட்டு மற்றும் உச்சிபடிப்பு ஓத வேண்டும். முதலில் ஒரு அன்பர் உகபடிப்பு மற்றும் உச்சிபடிப்பு வாசகங்களைச் சொல்ல அதைபின் தொடர்ந்து மற்ற அன்பர்கள் கூட்டாக முதல் அன்பர் சொன்ன வாசகத்தை திரும்பச் சொல்வது வழக்கம்.

நமது வாழ்க்கையில் ஆயிரம் பிரச்சனைகள் வந்து நின்றாலும் அவைகளை தாங்கும் வலிமையும் தகுந்தப் புத்தியும் தரவேண்டியது இறைவனின் கைகளில்தான் உள்ளது. நமக்கு எந்தக் குறைகள் வந்தாலும் அதை அய்யாவிடம் எடுத்துச் சொல்ல நமக்கு நேரங்கள் நாள் முழுதும் உண்டு. ஆனால் கூட்டு வழிபாட்டிற்காக நாம் தலத்தில் கூடுவது ஒரு நாளுக்கு மூன்று முறை மட்டுமே. அதுவும் ஒவ்வொருவரின் சூழ்நிலையைப் பொறுத்து இரண்டு முறையோ ஒரு முறையோ அல்லது அதற்கும் கூட வாய்ப்பில்லாச் சூழ்நிலையும் கூட அமையலாம். ஆகவே கூட்டு வழிபாட்டிற்கானக் காலத்தில் அதனைத் திறம்படச் செயல்படுத்தும் பணி நம்மிடம்தான் உள்ளது.

கூட்டுவழிபாட்டில் கலந்துக் கொள்ளும் போது நம்மனதில் கவலைகள் தோன்றினாலும் நம் அருகில் இருப்பவர் இன்பமுடன் இருக்கும் போது அருகில் இருப்பவரின் நேர்மறைச் சக்தியானது நம்மை ஊக்குவித்துக் கவலையை மறக்கச் செய்து இன்பமுடன் நம்மைக் கூட்டுவழிபாட்டில் நிலைக்கச் செய்யும். ஆகவே கூட்டுவழிபாட்டில் ஒவ்வொரு அன்பர்களின் மனமும் ஒரே நோக்கத்துடன் இருத்தல் அவசியம். அதேசமயம் கவலையின்றி நேர்மறை எண்ணத்தோடு இருக்க வேண்டியதும் அவசியம். இத்தகையக் கூட்டு வழிபாடு எப்படி நடக்க வேண்டும்? எப்படிக் கவலையின்றி இன்பத்தோடு வழிபடுவது? எதனை ஒரே நோக்கமாக வழிபடுவது என்பதனைத் துவையல் தவம் மிகச் சிறப்பாக விளக்குகிறது.

“மண்ணுடன் மனைகள் ஆசை மாடுடன்வீடு ஆசை
பெண்ணுடன் பொருளின் ஆசை பூதலப் பொன்னினாசை
எண்ணுடன் எழுத்தின் ஆசை இறடு பொல்லாசை வேசை
ஒண்ணுடன் ஆசை நீக்கி உடையவன் ஆசை கொண்டார்
கொண்டென மனதில் பூண்டு குருபரா தஞ்சமென்று
பண்டுநல் துவாரகைப்பதி வடவாசல் தன்னில்
தொண்டிரை வாவைக்குள் அந்த செகல் கரைத்தனிலே வந்து
கண்டந்தபதியில் புக்கி கருத்துடன் இருந்தார் அன்றே”

ஆகவே நாம் கூட்டுவழிபாட்டில் ஈடுபடும்போது உலகியல் சுகங்களைக் கேட்பதைக் குறைத்து விட்டு உடையவனின் ஆசை அதாவது மெய் உலக தர்மயுக ஆசையை மனதில் கொள்வோம். அதுவே நம்மை ஒரே நோக்கத்தோடு கூட்டு வழிபாட்டில் மனதை நிலைக்க வைக்கச் செய்யும். அதுவே கூட்டுவழிபாட்டின் நன்மையும் கூட. ஏனெனில் உகபடிப்பு மற்றும் உச்சிபடிப்பு வாசகங்கள் அனைத்தும் உடையவனின் ஆசையையே மையமாகக் கொண்டுள்ளன என்பதையும் உணர்ந்துச் செயல்படுவோம்.

அதற்காக உலகியல் விருப்பங்களை இறைவனிடம் கேட்கக் கூடாது என்றுப் பொருள் இல்லை. நமக்காகவே நம் அய்யா உகபடிப்போடு மாப்புக் கேட்டலையும் இணைத்துத் தந்துள்ளார். அச்சமயத்தில் யாதொரு நொம்பலம் இல்லாமல் யாதொருச் சஞ்சலம் இல்லாமல் என்ற ஒரு வாசகத்திலேயே உலகியல் வேண்டுதல்கள் அத்தனையும் அடங்கி போகும். அத்தனைச் சிறப்பு அதில் அடங்கியுள்ளது.

மேலும் நமது அடிப்படைத் தேவைகள் உணவு ,உடை, இருப்பிடம். அதையும் அதே மாப்பு கேட்டலில் "அய்யா அன்னமும் வஸ்திரமும் தந்து அய்யா வைத்து ரட்சிக்கனும்" என்ற வாசகம் மூலம் கேட்டு விடுகிறோம். கூட்டுவழிபாடுச் சமயத்தில் மற்றச் சிந்தனை, கவலைகள் இல்லாமல் அந்தந்த மந்திரங்களின் பொருள் உணர்ந்து நாம் உச்சரிக்க வேண்டியதுக் கட்டாயம் ஆகும்.

முன்னால் நின்றுச் சொல்லும் அந்த ஒருவர் பொறுப்பு உணர்ந்துச் செயல்பட வேண்டும். ஏனெனில் அவரை பின் தொடர்ந்துச் சொல்லும் மக்கள் அவரை போலவேச் சொல்ல முயற்சிச் செய்வர். முன்னேச் சொல்பவர் மிகவும் ஈடுபாட்டுடன் பக்தி உணர்வோடு நிதானமாக ராகமாகச் சொல்லும் போது அது அத்தனை மக்களையும் கவனம் சிதறவிடாமல் ஒரே புத்தியில் இருக்கச் செய்து உடையவன் ஆசையை மேம்படுத்திப் பக்தியில் திளைக்கச் செய்யும். உணர்ந்துச் செயல்படுவோம். உடையவன் பாதம் பெறுவோம்

தெட்சணாப் பூமியில் வாழ்ந்த மக்களின் மூலம் அய்யா நமக்கு உணர்த்துகின்றன வாழ்வியல் நெறிமுறைகள் யாவை ?

*காலையில் பிரம்ம முகூர்த்தத்தில் துயில் எழ வேண்டும்.

*இறைவனை பணிந்து வணங்க வேண்டும். அதன் பிறகு நம்முடைய வேலைகளை துவங்க வேண்டும்.

* கணவனும் மனைவியும் சரிசமம் என்ற ஒரு வாழ்க்கை முறையை பின்பற்ற வேண்டும். கணவனும் மனைவியும் எந்த ஒரு செயலை செய்யும் போது ஒன்றாக இருந்து ஆராய்ந்து முடிவெடுத்து நல்ல செயல்களைச் செய்வதற்குத் துணைபுரிய வேண்டும்.
* பெற்றோர்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

* உற்றார் உறவினர்களைப் பாதுகாக்க வேண்டும்.தன்னை நாடி வருபவர்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும்.

* பிள்ளைகளுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைப் பெற்றோரும்

* பெற்றோருக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைப் பிள்ளைகளும் ஆற்ற வேண்டும்.

* நாம் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

* எப்போதும் நாம் இனிய வார்த்தைகளைப் பேச வேண்டும்.

* உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்றப் பாகுபாடுப் பார்க்கக்கூடாது.

*யாரையும் அவரவர் செய்கின்ற தொழிலில் அடிப்படையில் ஏற்றத்தாழ்வுகள் மூலம் பார்க்கக்கூடாது..

* எல்லோரிடமும் அன்பு பாராட்டி வாழவேண்டும்.

* காமம், கோபம், பொய், புரட்டு, வஞ்சகம், சூது, வாது, பொறாமை, பேராசை, மயக்கம், சுயநலம், ஈயாமை போன்றக் கலிமாய எண்ணங்களை அல்லது தீமைகளைக் கைவிட்டுவிட வேண்டும். அப்போது தான் இறைவனை அடைவதற்குரிய ஞானம் நமக்கு கிடைக்கும் .

* இவையே தெட்சணாப் பூமியில வாழ்ந்த மக்களின் மூலம் அய்யா நமக்கு உணர்த்திய வாழ்வியல் நெறிமுறைகள் ஆகும்.

முந்தைய யுகங்கள் உணர்த்தும் வாழ்வியல்

முதல் யுகம் : நீடிய யுகம்

அசுரன் :குரோணி

அவதாரம் : திருமால்

புத்திச் சொன்னவர் :பூதகுரு முனிவர்

உணர்த்தும் நீதி தீய எண்ணம் உடையவர்கள் மீண்டும் மீண்டும் பிறவிச் செய்யப்பட்டு இறைவன அடைவதற்குரிய வழிமுறைக் காட்டப்பட்டும். இறைவனை அடையும் ஞானத்தைப் பெறவில்லை என்றால் அழிக்கப்பட்டு இறுதியில் நரகத்தை அடைவார்கள் என்பதாகும்.

இரண்டாவது யுகம் : சதுரயுகம்
அசுரன் : குண்டோமச்சாலி
அவதாரம் : திருமால்
புத்திச் சொன்னவர் : கோவிரிஷி

உணர்த்தும் நீதி : சுயநலம் உடையவர்களை இறைவன் தன்னுடைய சூட்சமத்தால் வென்று நன்மையை நிலை நாட்டுவார் என்பதாகும்.

மூன்றாவது யுகம் :நெடிய யுகம்
அசுரன் : தில்லை மல்லாலன், மல்லோசி வாகனன்
அவதாரம் : திருமால்
புத்திச் சொன்னவர் : ரோமரிஷி

உணர்த்தும் நீதி : கோபத்தால் வரும் தீமையை
பற்றி இங்கே எடுத்துக் கூறப் படுகின்றது.
கோபத்தை அடக்கி வாழக்
கற்றுக் கொள்ள வேண்டும் .
இல்லை என்றால் இந்த அசுரர்கள்
எப்படி அழிவை சந்தித்தார்களோ அதுபோல
அழிவை சந்திக்க வேண்டிவரும் என்பதாகும்.

நான்காவது
யுகம் : கிறேதாயுகம்
அசுரன் : சூரப்பற்பன் இரணியன்
அவதாரம் : கந்த அவதாரம் , நரசிம்மாவதாரம்
புத்திச் சொன்னவர் : வீரவாகுதேவர், பிரகலாதன்
உணர்த்தும் நீதி: : நான் என்ற அகங்காரம் எழுகின்ற
போது அசுரர்களுக்கு எப்படி
அழிவு வந்ததோ அதே போன்ற
அழிவு வரும் என்பதாகும்.

ஐந்தாவது யுகம் : திரேதாயுகம்
அசுரன் : இராவணன்
அவதாரம் : இராமன்
புத்திச் சொன்னவர் :விபீஷ்ணன்

உணர்த்தும் நீதி

1. இராவணன் : மாற்றான் மனைவி மீதோ அல்லது பிறருடைய ப் பொருளுக்கு ஆசைப் படுகிறபோது எப்படி அழிவு வரும் என்பதை ராவணன் மூலம் உணர்த்தப்படுகிறது. எவ்வளவு நல்லவர்களாக, இறைபக்தி உடையவர்களாக இருந்தாலும் பிறர் பொருளுக்கு ஆசைப் படுகிற போது அழிவு வரும்.

சூர்ப்பனகையின் உடைய கோள் வார்த்தையை கேட்ட காரணத்தினால் எல்லா சிறப்புகளையும் தன்னுடைய அரசாட்சி போன்றவற்றை இராவணன் இழந்ததுப்போல் இழக்க நேரிடும்.

2. விபீஷணன்: தீயவர்கள் குடியில் பிறந்தாலும் தீயவர்களோடு இருந்தாலும் மனம் தூய்மையானதாக இருந்த காரணத்தினால் நன்மையை அடைந்தார் என்பதாகும்.

3. கைகேகி : மந்தரையின்னுடைய கோள் வார்த்தையை கேட்ட காரணத்தினால் தன்னுடைய மஞ்சள் குங்குமத்தை இழந்தாள். ஆகவே குடிக்கெடுக்கும்

கோள்வார்த்தைகளைப் பேசக்கூடாது. கோள் பேசுபவர்களோடு நட்புறவு கொள்ளக் கூடாது என்பதாகும்.

4. கும்பகர்ணன்:
இராவணன் தீமையைத் திருத்தி அறிவுரை தந்தான் கும்பகர்ணன். இராவணன் இசையவில்லை. என்ன செய்கிறான் கும்பகர்ணன்? தீமைக்கு உடன்படாமல் போரில் சாவதற்காக வருகிறான். செத்தாலாவது அண்ணன் திருந்துவான் என நினைக்கிறான். தன் சொந்த இயல்பை இழக்காமல் அண்ணன் செய்யும் தீங்கையும் சுட்டி விட்டு இறப்பு நிச்சயம் எனத் தெரிந்தும் போர்க்களத்தில் தன் அண்ணனுக்காக நிற்பது அவனின் உளப்பண்பை மிக அழகாக உணர்த்துகிறது. ஆனால் தான் செய்வதுப் பிறருக்கு தீமை தருகின்ற வகையில் அதர்மத்திற்கு துணைச் செய்ததால் மீண்டும் மீண்டும் நம்மைத் துன்பக்கடலில் ஆழ்த்தும் என்பதற்கு ஒரு உதாரணமாக அமைந்தவன் ஆவார். இதிலிருந்து ஆராயமல் எடுக்கும் முடிவு அழிவைத் தரும் என்பதாகும். மேலும் தன்னுடைய அண்ணனுக்காக என்றச் சுயநலம் நோக்கு தான் அடுத்த பிறவியில் சுயநலத்தோடுப் பிறவி எடுப்பதற்குக் காரணமாக அமைந்தது

ஆறாவது
யுகம் யுகம் : துவாபரயுகம்
அசுரன் : கம்சன், துரியோதன நாதிகள்
அவதாரம் : கண்ணன், கிருஷ்ணாவதாரம்
புத்திச் சொன்னவர் : நாரதர், பீஷ்மர்

உணர்த்தும் நீதி

தருமர்
தர்மரிடம் இருந்த பொறுமையின் சிறப்பு

எவ்வளவு துன்ப காலத்தில் தன்னுடைய பொறுமையை இழக்காமல் இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக வாழ்ந்தவர் தருமர் .

பீஷ்மர்

தவறுகள் நடக்கின்ற போது தவறைச் சுட்டிக்காட்ட வேண்டும் அல்லது தடுக்க வேண்டும் அவ்வாறில்லாமல் பார்த்துக் கொண்டிருந்தால் எவ்வளவு துன்பம் தரும் என்பதற்கு உதாரணம் ஆனவர் பீஷ்மர்.

துரியோதனன்

பிறருடைய பொருளை அபகரிக்க வேண்டும் என்று எண்ணினால் அதனால் வரும் பின் விளைவுகள் மிகவும் மோசமாக இருக்கும். பேராசை பெருநஷ்டம் என்பதற்கு உதாரணமாக துரியோதனன்.

கர்ணன்

கூடா நட்பு கேடாய் முடியும் என்பதற்கு இணங்க தனக்கு எவ்வளவு உதவி

செய்திருந்தாலும் தீயவர்கள் நட்பினால் கெடுதலே வரும் என்பதற்கு உதாரணம் மானவன் துரியோதனன்.. நட்புக்கு அழகு நண்பன் தவறு செய்கிறப்போது அதை தடுத்துரைப்பது ஆகும். அவ்வாறு செய்ய இயலாவிடில், அந்த நட்பிலிருந்து விடுபடுவதே சிறந்ததாகும்.

திரௌபதி

துன்ப காலத்தில் இறைவனிடம் முறையிடுகின்ற போது அந்த இறைவனுடைய நாமமே நம்மை பாதுகாக்கும் என்பதற்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்தவள் திரௌவுபதை.

துரோணாச் சாரியார்

பண்பட்ட ஆசிரியரின் கடமை தனது மனம் பொருந்த தான் கற்ற கல்வியை மாணவர்களுக்கு சிறிதும் ஒளிக்காமல் அளிப்பது ஆகும். ஆனால் அந்த விதத்தில் துரோணாச்சாரியார் தன்னுடைய கடமையை செய்வதில் தவறிவிட்டார். ஆகவே அவர் போர்க்களத்தில் இறக்கும்படி நேர்ந்தது.

ஏழாவது
யுகம் : கலியுகம்
அசுரன் : மாய்கை (தீய எண்ணங்களான காமம்,
குரோதம், லோபம் , மதம், மாச்சரியம்
என்ற செல்லக்கூடிய
ஆணவம், பொறாமை, பேராசை,
வஞ்சகம், சூது, வாது,
மோகம் என்ற தீய குணங்கள் ஆகும்)
அவதாரம் : அய்யா வைகுண்டர்
புத்திச் சொன்னவர் : நாராயண மூர்த்தி ஸ்ரீ பத்மநாபராகயிருந்து புத்திக் கூறினார்.
உணர்த்தும் நீதி : மானமாக வாழ்ந்தால்
மாழு கலி தன்னாலே.
தீய எண்ணங்களை
மனதில் எண்ணாமல் வாழ வேண்டும்……

எட்டாவது யுகம் : தர்ம யுகம்

இறப்பு பிறப்பு இல்லாத பேரின்ப வாழ்வு இந்த வாழ்வை பெறுவதற்கு நாம் நல்ல வழி முறையில் நடந்து பரமாத்மாவோடு ஐக்கியமாக வேண்டும் என்பதாகும்.

*****அய்யா உண்டு*****